
Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24
ரூபா 30.00
மே 28 - ஜூன் 03, 2015

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1120





## பலவீனமான தேசிய அரசு






## நீதிக்கான போராட்டத்தில் நிதானம் தேவை





## அதிகரிக்கும் வன்முறைகள்





## பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் தோல்வி

## ஓம் விளக்கு பூஜை விரதம்

விளக்குப்பூஜை செய்பவர்கள். ஒரு குத்துவிளக்கில் ஐந்து முகமும் ஏற்றி பூஜை செய்யலாம். விளக்கு பூஜை செய்பவர்கள் ஒரு முகம் மட்டும் ஏற்றிச் செய்வது அவ்வளவு உகந்தது அல்ல.

வீட்டில் பூஜை அறையில் எப்பொழுதும் ஒரு செம்பு தண்ணீர இருப்பது நல்லது. அதேபோல் கற்பூரம் ஆரத்திக்குப் பதிலாக நல்லெண்ணெய் தீபம் ஏற்றி ஆரத்தி செய்வது நல்லது. எக்காரணத்திலும் கடலெண்ணெய் தீபம் ஏற்றக்கூடாது. உங்களுக்கு தெரிந்த அம்மன், மகாலட்சுமி ஸ்லோகம், துர்க்கை மந்திரங்கள் போன்ற தெய்வமந்திரங்களை சொல்லவேண்டும்.

விரதமிருந்து விளக்கு பூஜை செய்வதால் மாதரீதியாக கீழ்க்கண்ட பலன்களை பெறலாம். சித்திரை - தானிய வளம். வைகாசி - செல்வச்செழிப்பு, ஆனி - திருமண பாக்கியம். ஆடி - ஆயுட்பலம், ஆவணி - கல்வித்தடை நீக்கம், அறிவார்ந்த செயல், புரட்டாதி - கால்நடைகள் அபிவிருத்தி, ஐப்பசி - நோய் நீங்குதல், கார்த்திகை - புத்திரபாக்கியம், சகல வளம், மார்கழி - ஆரோக்கியம் அதிகரிப்பு, தை - எடுத்த செயல்களில் வெற்றி, மாசி - துன்பம் நீங்குதல், பங்குனி - ஆன்மீக நாட்டம், தர்மசிந்தனை வளர்தல். [முற்றும்]

ஆன்மீகம்

## உவமை வாயிலாகப்பேசும் இயேசு

இயேசு இதுவரை மக்களிடம் பேசுகிறபோது உவமைகள் வாயிலாக, உருவகங்கள் வாயிலாகப் பேசுகிறார். உவமை என்பது புதிர் போன்றது. விடைக்கான செய்தி தரப்படுகிறது. அதை கேட்கிறவர் தனது அறிவைப்பயன்படுத்தி கண்டுபிடிக்கவேண்டும். சற்று ஆழமாகச் சிந்திக்க ஆரம்பித்தால், நிச்சயம் அவர்களால், உவமை வாயிலாக இறையாட்சித் தத்துவத்தை அறிந்துகொள்ள முடியும். மக்களாகவே உண்மையை அறிந்து கொள்ளவேண்டுமென்று, அவர் உவமை வாயிலாகப் பேசுகிறார்.

இயேசு இவ்வளவுகாலம் மறைமுகமாக, உவமை வாயிலாகப் பேசியவர், தனது கருத்துக்களை மறைமுகமாகப் பேசியவர் இன்றைய நற்செய்தியில், இதுநாள் வரை தான், மறைமுகமாக சொல்லி வந்த கருத்துக்களை நேரடியாக, வெளிப்படையாகச்சொல்கிறார். "தந்தையிடமிருந்து உலகிற்கு வந்தேன்" என்பதுதான் அந்த செய்தி. இந்த செய்தியைத்தான், போதனைகள் வாயிலாக, தனது வாழ்வுமூலமாக மக்களுக்கு மறைமுகமாக வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். தந்தையிடமிருந்து உலகிற்கு வந்தது, தந்தையின் அன்பை எடுத்துரைப்பதற்காக. தந்தையின் இரக்க குணத்தை வெளிப்படுத்துவதற்காக. தந்தையைப் பற்றி அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக.

## இறைமறைக்கு இசைவாக வாழ்வோம்

ஈமான் கொண்டவர்களுக்கு அல்லாஹ் அல்குர் ஆனில் கூறுகிறான். ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வைப் பயந்துகொள்ளுங்கள். மேலும் உண்மையாளர்களுடன் சேர்ந்திருங்கள். அல்குர் ஆன் 9:119

இறைமறைமூலம் இறைவன் இவ்வாறு கூறுவதெல்லாம் நீங்கள் பொய்யர்களுடன் உறவு வைக்கக்கூடாது என்பதுதான். ஏனென்றால் உண்மையாளர்களோடு மட்டும் பழகும் ஒருவரிடம் உண்மை என்ற நற்பண்பே பரிணமிக்கும். அந்த மனிதனை நாம் அணுவணுவாக அவதானிப்பதற்கும் அது எம்மை தூண்டும். ஆனால் உண்மைக்கு மாற்றமாக தந்திரங்களோடு செயற்படுகின்ற மனிதர்களுடன் நாம் பழகிவந்தால் அந்த துர்க்குணம்தான் எம்மைப் பற்றிக்கொள்ளும். உண்மை என்ற பண்பை மொத்தமாக விளங்கிக் கொள்ளவேண்டுமானால் அது எங்களது உள்ளத்தோடு உடன்பாடு செய்துகொண்டு உறுத்தலில்லாமல் குழப்பமான மனநிலையின்றி நாம் வாழ்வதே. ஆகவே உண்மையின் பக்கம் திரும்பி அதில் தன்னை ஸ்திரப்படுத்தி இறைமறைக்கு இசைவாக வாழ்வோம்.

**எம்.சி.கலீல், கல்முனை - 05**

## கவிதைப்போட்டி 1117



● பாராட்டுக்குரியது ●

### பூகம்பம்

பூமித்தாயின் கோபத்தால் - அவள்
பூகம்பமனதாலே - இவள்
பூர்வீகமே புதையுண்டதோ - அதனால்
புதைந்துவிட்ட உயிர்களுக்கு
புத்துயிர் கிடைக்காதோ - என
புலம்பி அழுவதை - இங்கே
புரிந்து கொள்பவர்களாலும்
புது உயிரைக் கொடுக்க முடியுமா?

இளம்பிறை,
அநுராதபுர வீதி.

### உண்மை

எந்த இழப்பையும்
ஆறுதல் தரும் வார்த்தைகள்
ஈடுசெய்துவிடும் என்பதே
வரலாறு கண்ட உண்மை.

இஷரா பேகம் ஜெமில்
கண்டி.

# கவிதைப் போட்டி இல 1120



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 08. 06. 2015

**கவிதைப் போட்டி இல. 1120 தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம். இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

### ஈரம்

எத்தகைய அழிவிலும்
நாங்களிருக்கும் வரை
நீங்கள் அழக் கூடாது
எனச் சுட்டுத்தள்ளப் பயின்ற
போர்வீரனின்
கல் மனதிலிருந்து கசிகிறதே
ஈரமான இவ்வார்த்தைகள்.

அ.சந்தியாகோ, கண்டி.

### இயற்கை அனர்த்தம்

இயற்கை அனர்த்தமே - நீ
இரக்கமில்லாமல் என் குடும்பத்தை
இழக்கச் செய்துவிட்டாயே.
இழந்துவிட்ட என் குடும்பமும்
இடிபாடுக்குள்ளே இறக்காமல்
இருந்துவிட்டால் மீட்டிடுவாயோ
இரக்கமுள்ள இளைஞனே - என
இடிந்துபோன இதயத்தால்
இவள் அழுகின்றாளோ இங்கே.

யோகன், புத்தளம்.

### விதி

நேபாளத்தின் பேரழிவு கண்டு
பேரதிர்ச்சி கொண்ட
உறவுகளை இழந்த
ஒரு தாயின் ஓலத்தால்
கண்கலங்கி இவரிங்கு
கரம் பற்றும்போது
விழிகள் குளமாகினாலும்
விதியை மாற்றமுடியாது.

எம்.சி.கலில், கல்முனை- 05.

### அன்பு போதும்...

பூகம்பத்தில்
புலன்களை இழந்தாலும்
புன்னகையோடு
உதவிக்கரம்
நீட்டும் - உன்
அன்பு போதும்...

எஸ்.யனுவிந்த்,
கொள்ளுப்பிட்டி.

### புரியாத - அச்சம்!

கரம் நீட்டுகிறாய்
ஏற்றிடவா
மறுத்திடவா என்று
புரியவில்லை.
ஏற்றுவிட்டால்
ஏதேனும் - நீ
ஏழையவள்
என்னிடம்
எதிர்பார்ப்பாயோ??
என்ற அச்சம்
என்னுள்...

க.மாளவிகா, வவுனியா

# உங்கள் பக்கம்

## பாலத்தை விரைவில் புனரமைக்க கோரிக்கை

மன்னார், குஞ்சுக்குளம் தொங்கு பாலம் சேதமடைந்துள்ளமையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை மேற்கொண்டு வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பாதையினூடாக பயணம் செய்யும் சிறுவர்கள் முதல் முதியவர்கள்வரை சிரமத்தின் மத்தியிலே பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

குஞ்சுக்குளம் கிராமத்துக்கான பிரதான தரைவழிப் பாதையில் வெள்ளம் நிரப்பி காணப்படுவதால், கிராம மக்கள் வேறுவழியின்றி சேதமடைந்துள்ள தொங்குபாலத்தையே தமது போக்குவரத்துக்காக பயன்படுத்திவருகின்றனர்.

மல்வத்துஓயா ஆற்றுநீர் பெருக்கெடுத்துள்ளமையால் நடைபெற்றுக் கொண்டிருந்த புதிய கொங்கிறீட் பாலத்தை அமைக்கும் கட்டுமானப் பணிகளும் தாமதமடைந்துள்ளன. இதனால் மக்கள் இந்த தொங்கு பாலத்தின் வழியாகவே தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

குஞ்சுக்குளம் கிராமமானது பல நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த கிராமம் ஆகும். வருடாவருடம் மல்வத்துஓயா பெருக்கெடுப்பதனால் இக்கிராமத்துக்கான போக்குவரத்து பாதிப்படைவதோடு உணவு மற்றும் மருத்துவ வசதிகளை பெற்றுக் கொள்வதில் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்க நேரிடுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

**என்.பாலன், குஞ்சுக்குளம்.**




## உயிரற்ற பிணங்கள்

**வணக்கம் தினமுரசு,**

1119 ஆம் முரசை பார்த்தவுடன் நெஞ்சம் பதைபதைத்தது. வித்தியாவை கொலை செய்த வெறியர்களை நினைக்கும்போது நெஞ்சம் குமுறுகிறது. இந்த காமவெறியர்களுக்கு இஸ்லாமிய நாடுகளில் கொடுக்கும் தண்டனையைவிட அதிகமாக இருக்கவேண்டும். இவ்வாறானவர்கள் உயிர் இருந்தும் உயிரற்ற பிணங்களே. இக்கொடுமைக்கு விரைவில் கடுமையான தண்டனை வழங்கவேண்டுமென காத்துக் கொண்டிருக்கின்றேன்.

**என்.பாரதி, வாகரை.**

# வாசகர்சாலை

## தண்டனை வேண்டும்

முரசில் வரும் அத்தனை அம்சங்களும் அருமையிலும் அருமை. பல இன்னோரன்ன அம்சங்களை தாங்கிவருகின்றது முரசு. அந்தவகையில் சென்றவாரம் வெளியான வித்தியாவின் கொலைக் குற்றவாளியின் பரபரப்பு வாக்குமூலத்தை வாசிக்கும்போது கோபத்தில் பொங்கி எழுந்தேவிட்டேன். இலங்கையில், அதுவும் யாழ்ப்பாணத்தில் கலாசாரத்தை பேணிப் பாதுகாக்கும் இடத்திலா கொடூரமான சம்பவம் இடம்பெற்றது. இவ்வாறானவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கவேண்டும்.

**க.அஜந்தன், வவுனியா.**

## எனக்குப் பிடித்தவை

**வணக்கம்.**

**அத்தனை அம்சங்களும் பிரமாதமாக உள்ளது. புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள விடுதலை வீரர் நெல்சன் மண்டேலாவின் தொடர் அருமையாக உள்ளது. அதைவிட பாப்பா முரசு, லேடீஸ் ஸ்பெசல் போன்றவை எனக்கு பிடித்துள்ளது. லேடீஸ் ஸ்பெசலில் வரும் தகவல்கள் நன்கு பிரயோசனப்படக் கூடியதாக இருக்கின்றது.**

**மற்றும் சினிமா செய்திகள், 24ஆம் பக்கம் என்பவற்றில் புதிய படங்கள் வருகின்றது. சினிமா பக்கத்தில் நடிகைகளின் படங்களை கிளாமர் இல்லாமல் முரசு பிரசுரிக்கவேண்டும்.**

என்.ஜாவிதா, நிந்தவூர்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்: (E-mail):-
thinamurasu@live.com


## அமைதியின் சொற்கள்

தனி மனிதர்களுக்குத்தான் அமைதி தேவை, தனி மனிதர்களின் இதயத்தில்தான் அமைதிக்கான ஆசை குடிகொண்டுள்ளது, தனி மனிதர்களின் அரங்கில்தான் அமைதி நடனம் ஆடவேண்டும்.

**இணையத்தளம்:** www.wopg.org

**- பிரேம் ராவத்**

# வித்தியா கொலைக் குற்றவாளிகளுக்கு விரைவில் தண்டனை வழங்கப்படும்



## யாழில் ஜனாதிபதி மைத்திரி உறுதி

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலையுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு மிகவிரைவில் தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும் என, ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன உறுதியளித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த செவ்வாய்க் கிழமை, வேம்படி மகளிர் வித்தியாலயத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் உரையாற்றும் போது இதனை தெரிவித்தார்.

அத்துடன், விசேட நீதிமன்றம் ஒன்றை அமைத்து, அதனூடாகவே கொலைக் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படும் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மாணவி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்ட சம்பவத்தைத் தான் வன்மையாக கண்டிப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

புங்குடுதீவு மாணவி படுகொலை செய்யப்பட்டமை மற்றும் அதன்பின்னரான ஆர்ப்பாட்டத்தின்போது நீதிமன்றம் தாக்கப்பட்டமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயவே, ஜனாதிபதி இந்த திடீர் விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## கடல் மண் ஏற்றியவருக்கு அபராதம்

அக்கரைப்பற்று பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி கடல் மண் ஏற்றிய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட நபருக்கு 7,500 ரூபாய் அபராதம் விதித்து அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதிபதியும் நீதவான் நீதிமன்ற நீதிபதியுமான எச்.எம்.எம். பஸீல், கடந்த திங்கட் கிழமை (25) தீர்ப்பளித்தார்.

அம்பாறை, தீகவாபி பிரதேசத்தில் அனுமதிப் பத்திரத்தை மீறி மண் ஏற்றிய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட மற்றுமொரு நபருக்கு 10,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

## சம்பள உயர்வுக்காக தோட்டத் தொழிலாளர்கள் போராட்டம்!

தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இழுபறிநிலையில் உள்ளதால் தோட்டக் கம்பனிகளுக்கு எதிராக ஜூன் மாதம் ஏழாம் திகதி தொழிலாளர்களைத் திரட்டிக் கொண்டு கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்ள உள்ளோம் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான பி.திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக தோட்டப்பகுதிகளிலுள்ள ஆலயங்களுக்கு ஒலிபெருக்கி சாதனங்கள் வழங்கும் நிகழ்வில் டிக்கோயா வனராஜா பிள்ளையார் கோவில் மண்டபத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# வில்பத்து விவகாரம் இனவாத அடக்குமுறையா?




மன்னார் வில்பத்து விவகாரம் மீண்டும் தலைதூக்கியுள்ள நிலையில், அது இன்று அரசியல் பிரச்சினையாக உருவாகியிருக்கிறது. கடந்த ஆட்சிக்காலத்தில் ஹலால் உணவில் ஆரம்பித்த பிரச்சினை படிப்படியாக நகர்ந்து சென்று இன்று மன்னார் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தில் கைவைக்கின்ற அளவுக்கு கைமீறிப் போயுள்ளது.

பொதுபலசேனா போன்ற சிங்கள கடும்போக்கு அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் என்பன அடிப்படையில் ஆதாரமற்ற பிரச்சினைகளுக்குப் பின்னால் இருந்துகொண்டு செயற்பட்டது. இதற்கு ஒருசில சிங்கள ஊடகங்களையும் இவர்கள் பயன்படுத்தி வந்துள்ளார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்திலிருந்தே இந்த பிரச்சினை ஆரம்பித்தது. அதன்பின்னர் தெற்கு ஊடகவியலாளர்கள் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு நேரில் விஜயம் செய்து நிலைமைகளை தெளிவாக விளங்கிக்கொண்டனர்.

எனினும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியிலும் இந்தப் பிரச்சினை மீண்டும் தலைதூக்கியிருக்கிறது. திருகோணமலை மற்றும் சம்பூர் ஆகிய கிராமங்களை கடந்த அரசு முதலீட்டுப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தியிருந்த நிலையில் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அந்தக் காணிகளை விடுவித்து உரியவர்களிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

அதேபோல் மன்னார் மரிச்சிக்கட்டி கிராம மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு விரைவில் உரிய தீர்வைப்பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே எம் எல்லோரினதும் எதிர்பார்ப்பாகும்.

### வில்பத்து குடியேற்றம்

1990ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்தினால் பலவந்தமாக இந்தப் பகுதி மக்கள் வெளியேற்றப்பட்டனர். அவ்வாறு தமது சொந்த மண்ணிலிருந்து வெளியேறி புத்தளம் போன்ற இடங்களில் வாழ்ந்துவந்த முசலி பிரதேச செயலகத்திற்குற்பட்ட மரிச்சிக்கட்டி, பாலக்குழி, கொண்டச்சி, கரடிக்குழி ஆகிய கிராம மக்கள் யுத்தத்திற்குப் பின்னராக காலப் பகுதியில் மீண்டும் தமது சொந்த மண்ணில் மீள்குடியேற வேண்டும் என்ற ஆசையுடன் தமது பூர்வீகத்திற்கு வந்தபோது அவர்களது சொந்த பூமிகள் காடுகளாகக் காட்சியளித்துக் காணப்பட்டுள்ளது.

அத்துடன், வில்பத்து சரணாலயத்தின் ஒருபகுதி முசலிப் பிரதேச கிராமங்களின் எல்லையாகும். எனவே, இரண்டு எல்லைகளின் முடிவு தெளிவின்மையால் அந்தக் கிராம மக்கள் ஒருசில அடையாளங்களை வைத்துக்கொண்டு எல்லைகளை கண்டுபிடித்துள்ளனர்.

எனவே, மன்னார் முசலிப்பிரதேச முஸ்லிம்களின் பூர்வீகத்தை மறந்து கடந்த 2010ஆம் ஆண்டுக்கு பின்னரான புகைப்படங்களை வைத்துக்கொண்டு வில்பத்து வனப்பகுதியை அழித்து முஸ்லிம் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படுகிறார்கள் என்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்துவரும் வரும் கடும்போக்குவாதிகளின் செயற்பாடுகள் மன்னார் மாவட்ட முஸ்லிம் மக்களை மாத்திரமின்றி, முழு வன்னி மாவட்ட முஸ்லிம் மக்களையும் பாதித்துள்ளது.

90வருடங்கள் பழமைவாய்ந்த குறித்த பிரதேசத்தில் மக்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் பல காணப்படுகின்றன. கட்டடங்கள் இன்னமும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. அந்தக்கிராம மக்கள் தமது காணிகளுக்கு உறுதிப்பத்திரங்களையும் வைத்திருக்கிறார்கள்.

இந்த விடயத்தில் சரி, பிழை திருத்தம் பார்ப்பதற்கு அரசு எத்தனை குழுக்களை அனுப்பிவைத்தாலும் அது ஒருபோதும் பிழையாக இருக்கப்போவதில்லை. கடந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக கோஷம் போட்ட சேனாக்களை ராஜபக்ஷ அரசு பாலூட்டிவளர்த்தது. ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அரசு அந்த சேனாக்களுக்கு வாய்திறக்கக்கூடாது எனக்கட்டுப்பாடு விதித்தது. எனவேதான் அவர்கள் இன்று மன்னார் முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் இந்த விடயத்தை மீண்டும் தூக்கிப் பிடிக்கின்றனர்.

### சமூக உரிமைக்காக ஒன்றுபடுவோம்:

1990ஆம் ஆண்டு வன்னியிலிருந்து புலிகள் இயக்கத்தினால் அவசரமாக வெளியேற்றப்பட்ட வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள் கடந்த 25 வருடங்களாக புத்தளம் போன்ற மாவட்டங்களில் வாழ்ந்துவந்துள்ளனர்.

எனினும் யுத்த நிறுத்தத்திற்குப் பின்னர் அவர்கள் தமது சொந்த மண்ணில் வந்து வாழவேண்டும் என்ற ஆசையுடன் அங்கு சென்றால் தமது சொந்தமண்ணில் வாழ முடியாதநிலை காணப்பட்டது. காரணம் அன்று ஒரு இலட்சம் மக்களாக சென்றவர்கள் இன்று பல மடங்குகளாக அதிகரித்துள்ளமையாகும்.

எனவே, எல்லோரும் இருப்பதற்கு அங்கு காணியோ, வீடோ இல்லை. எனவே, காணி, வீடு உள்ளவர்கள் தமது சொந்த மண்ணில் இருக்க ஏனையவர்கள் தாம் முன்னர் வாழ்ந்த மாவட்டத்திற்கே திரும்ப சென்றுவிட்டார்கள்.

காணிப்பிரச்சினை மன்னார் மாவட்ட மக்களுக்கு மாத்திரமின்றி, மூன்று மாவட்டத்தில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு உள்ளது. அதுமாத்திரமின்றி, காணியிருந்தும் சொந்தக் கிராமத்தில் வாழும் உரிமை மறுக்கப்பட்டு இன்று இனவாத கழுகுப் பார்வையில் மாட்டிக்கொண்டுள்ள மன்னார் முசலிப் பிரதேச மக்களின் உரிமைக்காக அனைவரும் வேறுபாடுகளை மறந்து செயற்படவேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர்பார்பபாகும்.

பருவகால வியாபாரிகளைப் போல தேர்தல் காலங்களில் மாத்திரம் வந்து போகும் எண்ணங்களை மறந்து இது முஸ்லிம் சமூகத்தின் உரிமைப் பிரச்சினை. அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு மாத்திரம் கடமையல்ல. இது எல்லோருக்குமான பிரச்சினை என்ற உணர்வுடன் முஸ்லிம் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனத்தில் எடுக்கவேண்டும்.

மேடைகளில் தலைமைத்துவம், ஒற்றுமை பற்றி முழங்கப்பேசும் மக்களினால் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஒருசில சந்தர்ப்பங்களில் கூட்டாக கோரிக்கையை முன்வைத்து அதில் எப்படி வெற்றியை காண்கிறார்களோ? அதுபோல முப்பது வருடங்களுக்கும் மேலாக இழுபட்டுக் கொண்டிருக்கின்ற வன்னி முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம், காணிப் பிரச்சினை உள்ளிட்ட விடயங்களில் அக்கறையுடன் செயற்பட்டு முஸ்லிம்கள்மீது பலவந்தமாக திணிக்கப்படும் இனவாத அடக்குமுறைக்கு சாவுமணி அடிக்கவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இவ்வாறான மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாற்றமாக தமது சொந்த அரசியல் நலனுக்காக காலத்தை கடத்தலாம் என்று எண்ணிக்கொண்டு தேர்தல் காலங்களில் மாத்திரம் எந்த முகத்தைக்கொண்டு வன்னி முஸ்லிம்களிடம் வாக்கு கேட்கப் போகிறீர்கள்.

நன்றி: இணையம்

தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## அரசியல் நாடகம்!!

வலிகாமம் வடக்கில் ஆயிரம் ஏக்கர் நிலம் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்ட போதும், சம்பூரில் பாதுகாப்பு வலயமாக அபகரிக்கப்பட்ட நிலம் மீண்டும் உரியவர்களிடம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்ட போதும் சொந்த நிலத்துக்கு திரும்புகின்ற மக்களுக்கு சரியான வழிகாட்டல் கொடுக்கப்படவில்லை.

மீண்டும் சொந்த நிலத்துக்கு மக்கள் திரும்புவதில் மகிழ்ச்சியடைந்தாலும், அங்கு அவர்களின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டிருப்பதையும், அடையாளங்கள் அழிக்கப்பட்டிருப்பதையும் கண்டு உறைந்துபோய் இருக்கின்றார்கள். அந்த மக்களை சொந்த இடங்களை அடையாளம் கண்டுகொள்ளுமாறு அதிகாரிகள் கூறினாலும் அடையாளம் கண்ட பின்னர் மீளக்குடியேறுவதற்கும், பழைய வாழ்வுக்குத் திரும்புவதற்கும் எவ்வாறான அரச உதவிகள், பங்களிப்புக்கள் வழங்கப்படும் என்பது பற்றி எதுவித தெளிவும் மக்களுக்கு வழங்கப்படவில்லை.

வாழ்ந்த இடங்கள் பற்றைக்காடுகளாக மீண்டும் கிடைக்கின்றதே தவிர அரசு இந்த மக்களுக்கான விஷேட திட்டம் எதையும் முன்மொழியவில்லை. வீட்டுத் திட்டமோ, நிதி உதவியோ ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

விருப்பமற்று மீண்டும் மக்களிடம் காணிகள் படையினரால் ஒப்படைக்கப்படுவதையே அங்கு காணப்படுகின்ற காட்சிகள் உணர்த்துவதாக மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். காணிகளை விடுவித்துக் கொடுத்துள்ளதாக உரிமை கோரும் அரசியல்வாதிகள் எவரும் அடுத்ததாக அந்த மக்களுக்கு என்ன உதவி தேவை என்பதையோ, விஷேட ஏற்பாடுகளில் எதைச் செய்யவேண்டும் என்பதையோ சிந்திக்கவில்லை. அரசிடம் அது தொடர்பான எந்தக் கோரிக்கையையும் முன்வைக்கவும் இல்லை என்பது மக்களுக்கு ஏமாற்றமாவே உள்ளது.

காணிகள் மீளக்கையளிப்புச் செய்வதையும், அங்கே உரிய மக்கள் மீண்டும் வாழ்வதற்காக எதையும் திட்டமிடாமையும் வெறுமெனவே அரசியல் தேவைகளுக்காக அரங்கேறும் நாடகங்களைப்போலவே செயற்படுத்தப்படுகின்றன.

அபகரிக்கப்பட்டிருந்த தமது பூர்வீக நிலத்துக்கு திரும்புகின்ற மக்களின் தேவைகளையும், உணர்வுகளையும் கொடுமையான அழிவு யுத்தத்தின் தொடர்ச்சியாகவே பார்க்கவேண்டும். அந்த அடிப்படையிலேயே அவர்களுக்கு உதவவும் வேண்டும். அவர்கள் சுற்றுலா சென்றுவிட்டு சொந்த ஊர் திரும்புகின்ற மக்களல்ல என்பதை இவ்விடயத்தோடு தொடர்புபட்ட அனைவரும் மனதில் நிறுத்தி இவர்கள் பூர்வீக நிலத்தில் வாழ்வதற்கான திட்டத்தை வகுக்க வேண்டும்.


தேர்தலுக்காகவும், அரசியல் சுய இலாபங்களுக்காகவும் மக்களை தொடர்ந்தும் ஏதிலிகளாக அலையவிடும் ஏமாற்று அரசியல்வாதிகளை மக்கள் இனங்கண்டு கொள்வது மட்டுமல்ல, கண்டிக்கவும் வேண்டும். இவர்களிடம் மக்களின் உணர்வுகளை புரிந்து நடக்கும் மக்கள் நேசிப்பு இல்லை. மாறாக தாமும், தமது குடும்பங்களும் அதிகார சொகுசு வாழ்வுக்காக எதை வேண்டுமானாலும் செய்யத் துணியும் போக்கிரித்தனமே மேலோங்கியிருக்கின்றது.

இந்த மக்கள் விரோத அரசியல் போக்கை மாற்றியமைத்தாலே தேசிய அரசியல் மாற்றத்தையும், உலக அரசியல் மாற்றங்களையும் உள்வாங்கிய ஒரு இனமாக தமிழர்கள் உரிமைகளுடன் வாழமுடியும்.

■■ ■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# பலவீனமான தேசிய அரசு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தலைமையில் இலங்கையில் நல்லாட்சிக்கான தேசிய அரசாங்கம் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக இனியும் கூறமுடியாது. தேசிய அரசாங்கம் என்றால் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள்சேர்ந்து அரசாங்கம் அமைப்பதுதான் என்று கொடுக்கப்பட்ட விளக்கம் வலிமை இழந்துள்ளது.

தற்போதைய தேசிய அரசாங்கத்தின் முக்கிய பங்காளியாக கூறப்படுகின்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் இப்போது முக்கிய எதிர்க்கட்சியாகவே செயற்பட்டு வருகின்றது.

ஏற்கெனவே சுதந்திரக் கட்சியின் முக்கிய முன்னாள் அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆட்சியமைக்க ஆதரவளிக்கமுடியாது என்று ஒதுங்கியிருக்கத் தீர்மானித்திருந்தனர். சுதந்திரக் கட்சியின் தலைவர் என்றவகையில் ஜனாதிபதி மைத்திரிபால கேட்டுக் கொண்டதற்கிணங்க சுதந்திரக் கட்சியின் இருபத்தி ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரவையில் பங்கேற்றனர்.

அதுவரை எண்பது உறுப்பினர்களைக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அமைத்த அரசுக்கு சுதந்திரக் கட்சியின் இருபத்தி ஆறு உறுப்பினர்களுடன் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையான நூற்றிப்பதினாறு உறுப்பினர்கள் கிடைக்கப்பெற்றார்கள்.

ஆனாலும் சுதந்திரக் கட்சியிலிருந்து அமைச்சர்களாக்கப்பட்டவர்களுக்கு துறைகள் ஒதுக்கீடு இல்லாத இராஜாங்க அமைச்சுப் பொறுப்புக்களே அதிகமாக வழங்கப்பட்டிருந்தது. அதுதவிரவும் சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களுக்கு பிரதமர் தலைமையிலான அரசு போதிய ஒத்துழைப்பை வழங்கவில்லை என்ற அதிருப்திகளும் வராமலில்லை.

இந்த நிலையில் பிரதமர் தலைமையிலான அமைச்சர்கள் குழுவும், ஜனாதிபதி தலைமையிலான அமைச்சர்கள் குழுவுமாகவே தேசிய அரசு அமைக்கப்பட்டிருந்தது. இவ்வாறாக இரண்டு அணிகள் இருவேறு திசையில் தொடர்ந்து பயணிக்கமுடியாது என்பதை காலம் வெளிப்படுத்திவிட்டது.

சுதந்திரக் கட்சியிலிருந்து அமைச்சர்களாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டவர்கள் இப்போது அடுத்தடுத்து அமைச்சுப் பொறுப்புக்களை தூக்கியெறிந்து வருகின்றார்கள். அதுமட்டுமல்லாமல் தற்போதைய நாடாளுமன்றப் பலமே தமக்கு மக்கள் வழங்கியது.

அதற்குள் குறுக்குவழியாக அரசமைத்துக் கொண்டவர்கள் எங்களுக்கு பதவிகள் வழங்குகின்றனர். ஜனாதிபதியின் நூறு நாள் வேலைத்திட்டத்துக்கு ஆதரவளிக்கும் முகமாகவே நாம் ஆதவரளித்தோம். இப்போது நூறு நாள் முடிந்துவிட்டது. நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு மக்களின் அங்கீகாரத்துக்கு விடாமல் தொடர்ந்தும் குறுக்குவழியிலேயே அதிகாரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர் என்று பகிரங்கமாகவே எதிர்க்கத் தொடங்கிவிட்டனர்.

சுதந்திரக் கட்சியின் தலைவராக ஜனாதிபதி இருந்தாலும் இந்த அரசு ஐக்கிய தேசியக் கட்சியின் அரசு என்பதால் சுதந்திரக் கட்சியினரின் எதிர்ப்புக்களை தடுக்கமுடியாத நிலையில் இருக்கின்றார். அப்படி தடுக்கமுற்பட்டால் அது ஐக்கிய தேசியக் கட்சியை பாதுகாக்க சுதந்திரக் கட்சியை முடக்குகின்ற செயலாகிவிடும்.

தேசிய அரசாங்கத்தின் மற்றுமொரு முக்கிய பங்காளிகளான ஜே.வி.பியினரும் தேசிய அரசாங்க மாயை கலைத்துவிட வேண்டும் என்று கூறிவருகின்றனர். இப்போது எல்லோருமே நாடாளுமன்றத்தை எப்போது கலைப்பீர்கள் என்பதையே ஜனாதிபதியிடம் முதல் கேள்வியாகக் கேட்கத் தொடங்கிவிட்டனர்.

அதற்குக் காரணம், தற்போதைய அரசு ஸ்தீரணமாக இல்லை. தேசிய அரசாங்கம் என்று கூறுகின்றவர்கள் தமக்குள்ளேயே குடுமி பிடிச் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றனர். முன்னர் நூறு நாட்கள் முடியும் வரை அமைச்சர்களாக இருந்தாலும் புதிய திட்டங்கள் எதையும் செய்ய முடியாது என்று கூறியவர்கள், இப்போது உறுதியற்ற நிலைமை இருப்பதால் எதையும் செய்ய முடியவில்லை. பொறுத்துக் கொள்ளுங்கள், நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் அமையப் பெறும் புதிய அரசாங்கத்திலேயே வேலைகளைச் செய்யமுடியும் என்று தற்போதைய அதிகாரத்தில் இருப்பவர்கள் கையை விரிக்கின்றனர்.









ஆகவே விரைவாக நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலில் பலமான அரசொன்று உருவாகின்றபோதே நாட்டுக்கும் மக்களுக்கும் பயனுள்ள திட்டங்களை முன்னெடுக்கமுடியும்.

தற்போதைய தேசிய அரசாங்கத்தின் பங்காளிகளுக்கே தாம் ஆதரவளிக்கும் அரசுமீது நம்பிக்கை இல்லை. இதற்கு உதாரணம், அண்மையில் அமைச்சர் ரிஷாட் பதியூதீன் அவர்கள் வில்பத்துவில் முஸ்லிம்களை வலிந்து குடியேற்றம் செய்கின்றார் என்று செய்திகள் வெளியானபோது அதற்கு பதிலளிக்கும்விதமாக அமைச்சர் வெளியிட்ட ஒரு செய்திக் குறிப்பில், தற்போதைய ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்கள் குறித்து எந்தக் கரிசனையும் இல்லை. முஸ்லிம்களின் நியாயமான கோரிக்கைகளை கூட்டங்களில் எடுத்துக் கூறினாலும் குறிப்பு எடுக்கின்றார்களே தவிர, ஆக்கபூர்வமாக அதற்கு தீர்வுகாண முற்படுவதில்லை என்று கூறியிருந்தார்.

மற்றுமொரு தேசிய அரசின் பங்காளியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தரோ தற்போதைய அரசை ஆஹா ஓஹோ என்று புகழ்ந்து கொண்டிருக்கின்றார். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை இந்த ஜனாதிபதியிடமிருந்தும், பிரதமரிடமிருந்தும் பெற்றுக் கொள்ளமுடியும் என்று பெரும் நம்பிக்கை ஏற்பட்டிருப்பதாக கதை அளந்துகொண்டிருந்தாலும், கூட்டமைப்பின் இன்னொரு தலைமையாக உருவெடுத்துவருகின்ற வடமாகாண சபையின் முதலமைச்சரோ அண்மையில் இணுவில் இந்துக் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றும் போது, தமிழர்களுக்கு உரிய உரித்துக்களைப் பெற்றுக் கொடுப்போம் என்று பதவிக்கு வருவோர்களை பின்னர் பதவிக்கு வந்ததும் அவர்களுக்கு வாக்கை அளித்த பெருவாரியான சிங்கள மக்கள்விடமாட்டார்கள்.

சிறிசேனா தருவார், ரணில் தருவார், சந்திரிக்கா தருவார் என்று நாம் எண்ணுவதெல்லாம் மடமையாகும் என்று கூறியிருக்கின்றார். அதாவது தமது கட்சித் தலைமையின் கருத்துக்களுக்கு தாமே பதிலளிப்பதோடு, அரசு தொடர்பான தமது நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளார். இதைப் பார்க்கும்போது, கூட்டமைப்புக்குள்ளே அரசுக்கு ஆதரவு, அரசு எதிர்ப்பு என்ற இரண்டு நிலைப்பாடு ஏற்படுத்தியுள்ள முரண்பாடு வலுவடைந்துவருவதைக் காட்டுகின்றது.

வில்பத்து குடியேற்றம், மறுச்சுக்கட்டி கிராமத்தில் முஸ்லிம்களின் குடியிருப்பு போன்ற சர்ச்சைகள் தற்போதைய அரசு மீதும் முஸ்லிம்கள் அதிருப்தியடைகின்ற சூழலை தோற்றுவித்துவருகின்றது.

இந்த நிலையில் செப்ரெம்பர் மாதம் புதிய அரசு ஆட்சியிலிருக்கும் என்று ஜனாதிபதி திட்டவட்டமாக கூறியுள்ளார். அந்தவகையில் தற்போதைய குழப்பமான அரசு நீடிப்பது வரவேற்புக்குரியதாக இல்லை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு, எதிர்வரும் ஜூன் மாதம் 15ஆம் திகதிக்குப் பின்னர் நாடாளுமன்ற கலைப்பு இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதைய ஆட்சியாளர்கள் எதிர்பார்ப்பதைப்போல் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் அறுதிப்பெரும்பான்மையை ஒரு தரப்பு பெற்றுக்கொள்வது இயலாத காரியமாகவே இருக்கப்போகின்றது. அநேகமாக நாடாளுமன்ற பலம் மூன்று கூறுகளாகவே இருக்கும். அத்தகையதொரு நிலையில் எதிர்பாராத அரசியல் திருப்பங்கள் ஏற்பட்டாலேயன்றி ஒரு தரப்பைச் சாராமல் ஒரு தரப்பு மட்டும் ஆட்சியமைப்பது முடியாத காரியமாகவே இருக்கும்.

தென்னிலங்கை அரசியல் தன்னளவில் நாடாளுமன்றத் தேர்தலுக்கு தயாராகி விட்டுள்ள நிலையிலும், குறிப்பாக வடக்கு மாகாணத்தில் தனக்கு மூக்குப்போனாலும் எதிரிக்கு சகுனப் பிழையானால் சரிதான் என்ற அர்த்தமற்ற அரசியல் போட்டியிலேயே தமிழ்க் கட்சிகள் நேரத்தை செலவுசெய்து கொண்டிருக்கின்றன.

வட.மா.காண மக்களின் தன்மானத்தை கேள்விக்குட்படுத்தியும், சர்வதேசம் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றது என்ற பழைய பல்லவியை தமிழ் மக்கள் விழுங்கிக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையும் தம்மை வாழவைக்கும் என்ற எண்ணத்தோடு பழைய முகங்களும், அவர்களுக்கு போட்டியாக நண்டுக்கூடை நண்டுகள்போல் உள்ள புதிய முகங்களும் தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள்.

தேசிய உணர்வுள்ள தன்மானத்தமிழ் மக்களுக்கு ஒரேயொரு குழப்பத்துக்கு மட்டுமே தெளிவு தேவை, அதாவது ஒரே கூடாரத்துக்குள் இருந்துகொண்டு தற்போதை தேசிய அரசைப் பற்றி இரண்டு வகையாக கருத்துக் கூறுகின்ற சம்மந்தரா? விக்னேஸ்வரனா? தமிழ் மக்களுக்கு பொய் கூறுகின்றார்கள் என்பதுதான்.

மதியூகி
எக்ஸ்ரே ரிப்போர்ட்



# புலிகளின் வதை முகாமில்

## மணியம்

### தொடர் 167

எனவே தில்லையை புலிகள் விசாரிக்கும்போது, எனது வீட்டில் சிறீதரன் தங்கியிருந்ததைச் சொல்லியிருப்பாரோ என்ற ஒரு சந்தேகம் எனக்குள் எழுந்தது. ஆனால் அதேநேரத்தில் அதை நிச்சயப்படுத்தவும் வழிகள் ஏதும் இருக்கவில்லை.

தில்லையாக இருக்கலாமோ என்று சந்தேகித்ததிற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது காரணம், சிறீதரன் எனது வீட்டில் தங்கியிருந்த பொழுது அங்குவந்த சிறீதரனைத் தெரிந்த ஒரேயொரு நபர் தில்லைதான். இரண்டாவது காரணம், காந்தி என்மீது தாக்குதல் நடாத்திய பின்னர் என்னை விசாரித்த தயாபரன் என்ற எனது விசாரணையாளன், சிறீதரன் எனது வீட்டில் தங்கியிருந்த போது யாராவது வந்து சிறீதரனை சந்தித்தார்களா எனக் கேட்டு இருந்தான். இவை இரண்டையும் வைத்தே நான் தில்லையாக இருக்குமோ என ஊகித்தேன்.

ஆனால், தில்லை கடத்தப் பட்டவுடன் இந்த விடயத்தை புலிகளிடம் சொல்லவில்லை. எனவும் ஊகிக்க முடிந்தது. ஏனெனில் அப்படி தில்லை உடனே அந்த விடயத்தைச் சொல்லியிருந்தால், புலிகள் அவரைக் கடத்திய உடனேயே என்னையும் கடத்தியிருப்பார்கள். எனவே இந்த விடயம் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில்தான் தில்லையின் மூலம் புலிகளுக்குக் கிடைத்திருக்க வேண்டும். புலிகளது சித்திரவதைகள் காரணமாக இல்லாத குற்றச்சாட்டுகளையே பலர் ஏற்கவேண்டிய சூழ்நிலை இருக்கையில், தில்லை நடந்த ஒரு விடயத்தைச் சொல்லியிருந்தால், அதில் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அதற்கு அடையாளமாக, நான் தில்லையை புலிகளின் வதைமுகாமில் கண்டபொழுது, புலிகளின் கொடூரமான சித்திர வதைகளால் அவர் உருக் குலைந்து போயிருந்தார்.

நாம் சில விடயங்களை புலிகளிடம் சொல்லாமல் மறைத்தாலும், பின்னர் ஏதாவதொரு விடயத்தை விசாரிக்கும்போது, அதில் கிடைக்கும் தகவல்களை வைத்து புலிகள் தொடர்ந்து விசாரித்து மறைத்த விடயங்களை வெளிக்கொணர்ந்து விடுவார்கள். அத்துடன் தில்லையுடன் சமகாலத்தில் கடத்தப்பட்டு விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தில்லையின் நண்பர்களான செல்வி, மனோகரன் போன்றவர்களின் விசாரணைகளில் இருந்தும் சில விடயங்களை புலிகள் பெற்றிருக்கக்கூடும்.

புலிகளின் விசாரணைப் புத்தகங்கள் ஒருபோதுமே மூடப்படுவதில்லை. அதற்கு ஓர் உதாரணம், தோழர் அன்ரன் (விவேகானந்தன்) கடத்தப்பட்டு பல மாதங்களின் பின்னர், ஒருநாள் அவரை கால் சங்கிலிகளுடன் யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் வீதியில் இருந்த எழுத்தாளர் தோழர் யோ.பெனடிக்றபாலன் அவர்களின் வீட்டுக்குக் கூட்டிச் சென்று சில விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர். இவ்வளவிற்கும் தோழர் பெனடிக்றபாலனின் வீட்டில் அப்படி ஒரு பயங்கரமான சம்பவங்களும் நடைபெறவில்லை. அவரது வீட்டில் சிலவேளைகளில் அன்ரன் போன்றவர்கள் சில சந்திப்புகளைச் செய்திருக்கின்றனர். அந்தச் சந்திப்புகளில் பெனடிக்றபாலன் பங்கேற்பதுமில்லை.

இந்த சாதாரண விடயத்தைதான் கடத்தப்பட்டு பல மாதங்கள் கழித்து அன்ரன் சொன்னபடியால் தான், புலிகள் பல மாதங்கள் கழித்து அங்கு சென்றிருக்கின்றனர். உடனும் அந்தத் தகவல் கிடைத்திருந்தால், உடனேயே அங்கு சென்றிருப்பார்கள். புலிகளைப் பொறுத்தவரை, எந்தவொரு விடயத்தையும் உடனுக்குடனும், விரைந்தும் செய்பவர்கள். அதுவே பல சந்தர்ப்பங்களில் புலிகள் மற்றைய இயக்கங்களை அழிக்கும் நடவடிக்கைகளின் போதும், இலங்கை இராணுவத்துடனான போர்களின்போதும், புலிகளுக்குப் பல வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது.

புலிகள் ஒருவரைச் சந்தேகத்தில் கடத்தி, விசாரணைகள் நடாத்தி, அவருக்குத் தண்டனை வழங்கி, அந்தத் தண்டனை நிறைவேற்றப் பட்ட பின்னரும்கூட, அந்த நபரை அவர்கள் நிழல்போலத் தொடர்ந்து கொண்டிருப்பார்கள். எடுத்துக் காட்டாக, நான் அவர்களால் 1991, டிசம்பர், 26ஆம் திகதி கைது செய்யப்பட்டு, விசாரணை நடாத்தப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டு, அதுவும் முடிந்து, ஒன்றரை வருடங்களின் பின்னர் 1993 யூன் 06ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டேன். ஆனால் அதன் பின்னரும் புலிகள் என்னை விட்டபாடாக இல்லை. திடீரென்று எனது கடைக்கு வருவார்கள். எனது வீட்டுக்கு வருவார்கள். சில வேளைகளில் திருநெல்வேலி சந்திக்குச் செல்லும்போது பின் தொடருவார்கள். நீர்வேலியில் இருந்த எனது சிறிய தாயார் வீட்டுக்கோ அல்லது மீசாலையில் இருந்த எனது மருமகன் வீட்டுக்கோ செல்லும்போதும் சிலவேளைகளில் பின்தொடருவார்கள்.

புலிகள் 1995, ஒக்ரோபர், 30ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து அரச படைகளால் விரட்டியடிக்கப்பட்ட பின்னரே, நான் முதல் தடவையாக 1999 டிசம்பரில் கொழும்பு சென்றேன்.

(தொடரும்...)

சவப்பெட்டியில் இருந்து ரெயில்வே ஸ்டேஷன் முழுவதும் துர்நாற்றம் எழத்தொடங்கியதில், அதன் மூடியை அவசர அவசரமாக மூடத்தொடங்கினார் ரெயில்வே கார்ட்.

கொள்ளை நடந்து முடிந்தபின்னர் எட்வேர்ட் கைதுசெய்யப்பட்டு கோர்ட்டில் விசாரணை நடைபெற்றபோது, இந்தச் சம்பவம் பற்றி எட்வேர்ட் கோர்ட் விசாரணையின்போது விலாவாரியாகவே தெரிவித்திருக்கிறார்.

"இது ஒரு மனோதத்துவ ரீதியிலான திட்டமிடல். ரெயில்வே நிர்வாகம் புதிதாக நியமித்திருந்த காவலர் கடமையில் கருத்தாக இருப்பார். கார்ட் வேகனுக்குள் யாராவது எப்படியாவது நுழைந்துவிட முயல்வார்கள். அதைத் தடுத்துவிட வேண்டும் என்று அவருக்குக் கூறப்பட்டு இருக்கும்.

இதனால் ஒரு மனிதன் மறைந்திருக்கக் கூடிய எல்லாப் பெட்டிகளையும் அவர் திறந்து பார்ப்பார். சவப்பெட்டி உட்பட.

அவராகத் திறப்பதற்கு முன்னர் அந்தப் பெட்டியைத் திறக்கும்படி நாமே சொன்னால் அதில் அவருக்குச் சந்தேகம் குறைந்துவிடும். அல்லவா. அதுவும் அப்படிச் சொல்வது ஒரு அழகான் பெண்ணாகவும் இருந்து, சென்டிமென்ட்டுடன் கூடிய கதை ஒன்றும் சொல்லப்பட்டால் சந்தேகம் அடிபட்டும் போகும்.



அதனால்தான் மிஸ் மரியம் தனது சகோதரர் உயிர்பெறலாம் என்று ஒரு கதை சொல்லும்படி திட்டமிட்டோம். சவப்பெட்டிக்கு மேலிருந்த மணியை ஒலிக்கவிட்டு, காவலரை வைத்தே பெட்டியைத் திறந்து பார்க்க வைத்தோம்.

மணியில் கட்டப்பட்ட இருந்த ஒரு கயிறு, சவப்பெட்டியில் ஒரு துவாரம் இடப்பட்டு உள்ளே படுத்திருந்த ரொபேர்ட்டின் கைகளுக்கு அருகே இருந்தது.

உள்ளே ஏற்கனவே இறந்துபோய் துர்நாற்றம் வீசும் பூனை ஒன்றின் உடலுக்கு மேலே ரொபர்ட் படுத்திருந்தார். இறந்துபோன பூனையின் உடலில் இருந்து எழும் துர்நாற்றம் ரொபேர்ட்டின் உடலில் இருந்து வருவதாக நினைத்த காவலர் உடனே சவப்பெட்டியை மூடிவிட்டார்.

இதன் பிறகு எந்தச் சிக்கலும் இல்லாமல் சவப்பெட்டி போக்ஸ்டோன் ட்ரெயினில் ஏற்றப்பட்டது. புதிதாக நியமிக்கப்பட்ட காவலரும், ரெயில்வே டிஸ்பாச்சரும், சவப்பெட்டியை ஏற்றுவதில் உதவினார்கள்.

இந்த நாடகம் நடைபெற்றபோது பிளாட்போர்மில் பயணிகள் கூடிநின்று வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார்கள் அல்லவா, அதில் எட்வேர்ட்டும் இருந்தார். வேடிக்கை பார்க்கும் ஒரு பயணியாக.

அவருடன் அவரது வேலையாள் போல ப்பார்லோவும் வந்திருந்தார். அவர் ஒரு தள்ளுவண்டியில் 5 பெரிய சூட்கேஸ்களை எடுத்து வந்திருந்தார். மிகவும் பழைய சூட்கேஸ்கள் அவை.

வேலையாள் பார்லோ தள்ளு வண்டியைத் தள்ளுவதற்குச் சிரமப் படுவதிலிருந்தே சூட்கேஸ்கள் கனமாக இருக்கவேண்டும் என்று புரிந்தது.

உண்மையிலேயே சூட்கேஸ்கள் கனமாகத்தான் இருந்தன. காரணம், சூட்கேஸ்களுக்கு உள்ளே, எட்வேர்ட் முன்னர் வாங்கியிருந்து ஏராளமான துப்பாக்கி தோட்டாக்கள் வைக்கப்பட்டு இருந்தன.

### "இவரை நான் இதற்குமுன் எங்கோ பார்த்திருக்கிறேன்"

உண்மையிலேயே எட்வேர்ட்டின் சூட்கேஸ்கள் கனமாகத்தான் இருந்தன. காரணம், சூட்கேஸ்களுக்கு உள்ளே, அவர் முன்னர் வாங்கியிருந்த ஏராளமான துப்பாக்கி தோட்டாக்கள் வைக்கப்பட்டிருந்தன. ரயில் கொள்ளைக்கு. எதற்காக இந்தளவு துப்பாக்கித் தோட்டாக்கள்?

காரணம் உண்டு!

ரயிலின் கார்ட் வேகனில் உள்ள இரும்புப் பெட்டகத்திலிருந்து தங்கத்தை எடுத்துவிட்டு, அதே எடையுள்ள ஏதோ ஒரு பொருளை வைக்க வேண்டுமல்லவா? அப்போது தானே, இந்த இரும்புப் பெட்டகங்கள் இறக்கப்படும்போது சந்தேகம் ஏற்படாமல் இருக்கும்?

இதற்காக இவர்கள் ரயிலில் ஏதோ ஒரு அதிக எடையுள்ள பொருளை ஏற்றவேண்டும். அது, பெரிய சைஸிலும் இருக்கக்கூடாது. அதற்கு அட்டகாசமான (சிறிய அளவு – அதிக எடை) பொருள், துப்பாக்கி தோட்டாக்கள்.




(தொடரும்...)

# நிலமெல்லாம் இரத்தம்



155

பா.ராகவன்

**இந்தச்** சம்பவத்தால் காஸா முழுவதும் யுத்தத்தீ கொளுந்துவிட்டு எரியத்தொடங்கிய சமயத்தில் ஒரு வந்தேறி யூதர், ஓர் அரபு பள்ளிச் சிறுமியின் பின்புறத்தில் தன் கைத்துப் பாக்கியால் சுட்டார். பள்ளிக்குச் சென்று கொண்டிருந்த சிறுமி அவள். சற்றும் எதிர்பாராதவகையில் பின்புறமிருந்து ஒரு குண்டு பாய்ந்து வந்து அவளது இடுப்புப் பகுதியில் வெடிக்க, நடுச்சாலையில் அந்தக் குழந்தை விழுந்து கதறியதை நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பார்த்து, நிலைகுலைந்து போய் நின்றார்கள். அந்த யூதர், துப்பாக்கியைத் துடைத்து எடுத்துப் பையில் போட்டுக் கொண்டு வந்த வழியே போய்விட்டார்.

இந்தச் சம்பவம் காஸாவில் மிகப்பெரிய கலவரத்துக்கான தூபத்தைப் போட்டது. மக்கள் கொதித்தெழுந்தார்கள். போராளிகளோ, கண்ணில் தென்பட்ட அத்தனை யூதர்களையும் சுட்டுக் கொல்லத் தொடங்கினார்கள். அனைத்து யூதக் கடைகள், அலுவலகங்களும் சூறையாடப்பட்டன. பேரூந்துகள் நடுச்சாலையில் பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்டன.


என்ன செய்வதென்று தெரியாமல் இஸ்ரேலிய அரசு விழித்து நின்றது. கலவரத்தை அடக்க, இராணுவத்தை அனுப்பிவைத்தது. இது இன்னும் பிரச்சினையாகிவிட்டது. இராணுவம் வந்துவிட்டது என்பது தெரிந்ததுமே காஸா பகுதியில் வசித்துவந்த மக்கள், கோபத்தின் உச்சிக்கே சென்றார்கள். கண்மூடித்தனமாகச் சாலைகளை நாசப்படுத்தி, குடிநீர்க் குழாய்களை உடைத்து, சரக்கு லொறிகளின் டாங்குகளில் தீப்பந்தங்களைச் சொருகி, என்னென்ன வகைகளிலெல்லாம் பற்றி எரியச் செய்யமுடியுமோ, அதையெல்லாம் செய்ய ஆரம்பித்தார்கள்.

காஸாவில் என்ன நடக்கிறது என்பதே சரியாக வெளியே தெரியவரவில்லை. அதனால், ஏராளமான வதந்திகள், புரளிகள் எழத்தொடங்கின.

தினசரி பல்லாயிரக்கணக்கில் மக்கள் கொன்று குவிக்கப்படுகிறார்கள், எரிக்க வழியில்லாமல் கடலில் பிணங்கள் வீசப்படுகின்றன என்றெல்லாம் தகவல்கள் வெளிவரத் தொடங்க, சர்வதேச மீடியா பரபரப்படைந்தது.

கலவரம் நடந்தது உண்மை. இருதரப்பிலும் ஏராளமான சேதங்கள் இருந்தது உண்மை. அதற்கு மேல் ஆயிரக்கணக்கில் படுகொலை என்று சொல்லப்பட்டது எல்லாம் பொய். ஆனால், வதந்திகள் தந்த கோபத்தில் மக்களின் ஆத்திரம் கட்டுக்கடங்காமல் போய் மிகப்பெரிய யுத்தமாக அது உருப்பெறத் தொடங்கியது.

அந்தச் சந்தர்ப்பத்தைத்தான் அரபாத் பயன்படுத்திக்கொண்டார். போராட்டம். மக்கள் போராட்டம். அறப்போராட்டம். ஆயுதத்தாக்குதல் வந்தால் மட்டும் தற்காப்புக்காகக் கற்களைப் பயன்படுத்தலாம் என்று மக்களின் எழுச்சியை ஒரு முகப்படுத்தி, அதற்கு இண்டி:.பதா என்று ஒரு பெயரளித்தார்.



கஸ்டடி மரணங்கள், கூட்டம் கூட்டமாகப் படுகொலை செய்வது, வீடுகளை இடிப்பது, கொடூரமான முறையில் சித்திரவதை செய்வது, நாடு கடத்துவது உள்ளிட்ட இஸ்ரேலிய அரசின் அரபு விரோத நடவடிக்கைகளை ஒவ்வொன்றாகப் பட்டியலிட்டு, இவை அனைத்துக்கும் எதிரான போராட்டம் என்று சொல்லித்தான் முதல் இண்டி:.பதா ஆரம்பமானது.

ஆரம்பத்தில், இது அரபாத்தின் யோசனையே அல்ல. மக்களின் இயல்பான எழுச்சியைத்தான் அரபாத் தன்னுடைய திட்டம்போல் வடிவம் கொடுத்து நடைபெறச் செய்துவிட்டார் என்றுகூடச் செய்திகள் வந்தன.

உண்மையில், மக்களை முன்னிறுத்தி ஒரு மாபெரும் போராட்டம் நடத்துவது பற்றி 1985–லிருந்தே அரபாத் யோசித்து வந்திருக்கிறார். 1986ஆம் வருடம் ஒரு பிரெஞ்சு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இதுபற்றி மிக விரிவாகப் பேசவும் செய்திருக்கிறார்.

பெயர் வாங்கிக்கொள்ளும் ஆர்வமோ, முன்னின்று நடத்துகிறோம் என்கிற கர்வமோ எங்களுக்கு இல்லை வேண்டியது, பலஸ்தீனின் விடுதலை.

**(தொடரும்)**



அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)
யாழ்ப்பாணம்

05

# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

**தென் ஆபிரிக்காவின் தேசத் தந்தையாக மட்டுமல்லாமல், உலக மக்களின் உள்ளங்கவர் கள்வராகவும் வாழ்ந்து விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை அந்த மக்களுக்கு பெற்றுக்கொடுத்த விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா அவர்களின் வாழ்க்கைப் பாதையை மீண்டுமொரு தடவை புதிய சிந்தனையுடன் மீட்டுப்பார்ப்பது பொருத்தம் என்ற அனேக வாசகர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப புதிய பகுதி தொடங்கப்படுகின்றது. வாசிப்பதோடு மட்டுமல்லாமல் வாசகர்கள் தமது அபிப்பிராயங்களையும் முரசுக்கு அனுப்புங்கள். அதையும் இதே பகுதியில் பிரசுரித்து அனைவரும் மகிழ்ச்சியடைவோம்.**

மண்டேலாவின் தாய் அவனை அரசர் ஜோங்கிந்தாபாவிடம் ஒப்படைத்து விட்டு புத்திமதிகளும் கூறிவிட்டு கட்டியணைத்து கண்ணீர்விட்டழுதார்.

மகனே நீ பெரியோருக்கு அடிபணிந்து நீதிதவறாத நியாயவானாக வளரவேண்டும் என்று வாழ்த்தி முத்தமழை பொழிந்து விட்டு சென்றுவிட்டார். மண்டேலா கண்களில் கண்ணீர் சிந்த திகைத்து நின்றான். தந்தையை இழந்த சோகம், தாயைப் பிரிந்த சோகம், குனுவை நண்பர்களை பிரிந்த சோகம் அவன் பிஞ்சு மனதை ஆட்டிவைத்தது. அரசர் ஜோங்கிந்தாபா அவனை ஆரத்தழுவி அணைத்துக்கொண்டார்.

அரசர் ஜோங்கிந்தாபாவுக்கு இரண்டு பிள்ளைகள். மகன் ஜஸ்டிஸ், மகள் நொமா:.பு. அரசர் ஜோங்கிந்தாபா தன் இரண்டு பிள்ளைகளுடன் மண்டேலாவையும் தன் சொந்தப் பிள்ளையாக நினைத்து வளர்க்கத் தொடங்கினார். அவரின் இரு பிள்ளைகளும் மண்டேலாவுடன் நெருக்கமானார்கள். அரசர் ஜோங்கிந்தாபா மூன்று பிள்ளைகளையும் ஒரே மாதிரியாகவே நடத்தினார். ஒரே அன்பு, ஒரே பரிவு, ஒரே பாசம், ஒரே கண்டிப்பு, ஒரே தண்டனை என ஓரவஞ்சனை இன்றி கவனித்தார்.



மண்டேலாவுக்கு வசதிக்கு குறைவில்லை. தைக்கப்பட்ட புதிய ஆடைகள், சுவையான ஆகாரம், பக்கத்தில் புதிய பள்ளி, விளையாட ஆடம்பர விளையாட்டுப் பொருட்கள், படுக்கப் பஞ்சு மெத்தை என ஆடம்பர வாழ்க்கையில் மூழ்கி இருந்தான். அவனது பழைய கிராமத்து வாழ்வும் தற்போதைய அரண்மனை வாழ்வும் மலையும் மடுவுமென மாறியது.

கல்வி, வாழ்க்கை முறை, பொழுது போக்கு, நடையுடை பாவனை அனைத்திலும் மேலைநாட்டு சாயல் மண்டேலாவிடம் குடிகொண்டுவிட்டது.

அரசர் ஜோங்கிந்தாபா கிறிஸ்தவ மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கைகொண்டவர். ஞாயிறு தவறாது அனைவரும் தேவாலயம் செல்லவேண்டும். தவறினால் தண்டனை, உண்பதற்கு முன்னால் கடவுளை வணங்கவேண்டுமென்று பல மத சம்பிரதாயங்களை கடைப்பிடிக்குமாறு கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தார். அதன்படி மண்டேலாவும் கிறிஸ்தவ மதக்கொள்கைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தினான்.

குனுவில் இருந்தபோது தேவாலயம், இயேசு கிறிஸ்து, புனித சடங்கு எதிலும் ஆர்வம் செலுத்தியதில்லை. ஞானஸ்தானம் செய்வித்த போது ஒரேயொரு முறை மட்டும் தான் தேவாலயம் சென்றான். ஆனால் அரண்மனை வாழ்வு அவனை மதநம்பிக்கைகளில் ஆழ்த்தியது.

அரண்மனை வாழ்வில் ஊறியிருந்த மண்டேலாவுக்கு தன் குடும்பத்தினரின் நினைவுகள் வருவது அரிதாகவே இருந்தன. அவ்வப்போது அம்மாவும் சகோதரிகளும் அரண்மனைக்கு வந்து செல்வார்கள். அவர்களுடன் உற்சாகத்துடன் பேசி மகிழ்வான் மண்டேலா. அவர்களின் வாழ்க்கைத் தரம் இவனுடையதைவிட பலமடங்கு கீழ்நிலையில் இருந்ததை அவன் உணரவில்லை. அரண்மனை வசதிகள் மண்டேலாவை ஒருவித மயக்கத்தில் ஆழ்த்தியிருந்தன.

**(தொடரும்)**

*வாசகர் உள்ளம்*

தங்கள் தினமுரசு பத்திரிகையில் வெளிவரும் நெல்சன் மண்டேலா பற்றிய கட்டுரை மிகவும் தரமானதாக இருக்கின்றது. தெரியாத விடயங்கள் பலவும் தெரிவிக்கப்படுகின்றது. இக்கட்டுரை எழுதும் இக்பால் அவர்களுக்கும் தினமுரசிற்கும் எனது வாழ்த்துக்கள்.

பொ.சிவானந்தன்,
வேளாதோப்பு, கல்வியங்காடு.

ஏ.எச்.ஏ.ஹுஸைன்
abdulhussein525@gmail.com

**ஊடகத்துறையிலே** உயர வேண்டும் என்று நினைத்த வித்தியா இப்பொழுது உலக ஊடகங்களிலே பேசுபொருளாகி விடுமளவுக்கு அவருக்கு அந்த கொடூரம் நடந்தேறி இருக்கின்றது.

புங்குடுதீவு மாணவியை அந்தக் காமுகர்கள் 10 பேரும் சேர்ந்து பங்கெடுத்துக் கொன்றிருக்கின்றார்கள்.

வித்தியா! அவர் இறந்தபின் பல்லாயிரக்கணக்கான நெஞ்சங்களில் துயரத்தால் இடம்பிடித்து உறவாகி மௌனித்துப்போன ஒரு ஜீவன். விசயத்தைக் கேள்விப்பட்டோர் புருவத்தை உயர்த்திப்பேசி, பெருமூச்சு விடுமளவுக்கு பெருந்துயரத்தோடு பிரபல்யமாகிப்போன பேதை.

### துளிர்க்கும் போதே கருக்கப்பட்ட இளந்தளிர்

காலையில் கலகலப்பாய் புறப்பட்டு கல்விக்கூடத்துக்குச் சென்ற சிட்டு.

பாதிவழியிலேயே பாதகர்களின் கையில் அகப்பட்டு பந்தாடப்பட்டு பதறப் பதற படுகொலை செய்யப்பட்ட தேசத்தின் புதல்வி. அக்கிரமம் செய்யப்பட்ட அன்னாரது ஆன்மா சாந்தியடைய அனைவருக்கும் பொதுவான ஆண்டவனை முதலில் நெஞ்சுருகி நினைந்தழுவோம்!!!

இந்தத் தேசத்திலுள்ளவர்களிடம் மனிதம் மரித்துவிட்டதற்கான தெளிவான சான்றுகள்தான் வித்தியா போன்ற தேச சொத்துக்களின் இழப்புக்கள்.

**வேண்டாம் இந்த வம்பு. வித்தியாவுக்கு நீதி வேண்டும் எனும் போராட்டம் வெற்றியாய் அமைய விவேகத்தோடு போராடுவோம். அதற்காக வீதிகளைக் கொளுத்த வேண்டாம், நீதிமன்றங்களுக்கு கல்லெறிய வேண்டாம், வீடுகளை எரிக்கவேண்டாம், வழக்குரைஞர்களை மிரட்ட வேண்டாம், வாகனங்களைச் சேதப்படுத்த வேண்டாம். இனங்கள் இணைந்து உணர்வுகளோடு ஒன்றிப்போன ஓர்மமான (மனஉறுதியான) போராட்டமே தேவை.**



# நீதிக்கான போராட்டத்தில் நிதானம் தேவை



விட்டில் பூச்சிகள் தெரியாத்தனமாக விளக்கில் வந்து விழுந்து மடிந்து விடும் என்பதனால் விளக்கே எரிக்காத மென்மையான உள்ளம் படைத்த நல்லவர்கள் வாழ்ந்த பூமி இது. அப்படிப்பட்ட பலரும் நம்மத்தியில் இன்னமும் வாழுகிறார்கள் என்பதால் தான் இன்றளவும் வானிலிருந்து வல்லபக் கடவுளின் கருணையாய் மழை பொழிகிறது.

ஆனால், அந்த அக்கிரமக்காரர்கள் அங்கு நடந்ததை அவ்வளவாக அலட்டிக்கொள்ளாமல் பதிலளித் திருப்பதுதான் நம்முன்னே எதிர் நோக்கியிருக்கும் ஆபத்தை உணர்த்து கிறது. புலி கொல்லும் என்று வெளிப் படையாக நமக்குத் தெரிவதால் நாம் எச்சரிக்கையோடு இருக்கின்றோம்.

ஆனால், வீட்டில் வளர்க்கும் பூனை நம்மை புலிபோன்று கடித்துக்குதறும் என்று யாரும் எதிர்பார்ப்பதில்லை. மானுடம் மரித்துப்போன பத்துப் பேரால் வித்தியா எனும் அந்த இளந்தளிர் பதறப் பதறக் பந்தாடப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கிறாள்.

போதாக்குறைக்கு அந்த அப்பாவி ஜீவன்மீது வக்கிரமம் புரிந்தவர்கள் அவளை நடுக்காட்டில் கட்டிவைத்து அவள் பதைபதைப்பதைப் பார்த்து ரசித்து படம் பிடித்தார்கள் என்கின்ற கதையும் உலாவருகின்றது.

உலுத்தர்களின் இந்தச் செயல் உள்ளத்தை உருக்குகிறதல்லவா. கடந்த 30 வருடங்களாய் வன்முறை களை அனுபவித்து கதிகலங்கிப் போய் நிற்கின்றது நம்தேசம். திரும்பும் இடமெல்லாம் கண்ணீரும் கம்பலையும் கதிகலங்கும் நெருக்கடிகளும் நோவினை களும். இங்கு எல்லா வகையான வன்மங்களும் தலைவிரித்தாடின.

கேட்பார் கவனிப்பாரின்றி தட்டழிந்து கிடந்த நம் தேசம் இப்பொழுதுதான் சற்று நிம்மதிப் பெருமூச்சுவிடுவதற்கு நிமிர்ந்து பார்க்கையில், மீண்டும் தலை விரித்தாடுகிறது பஞ்சமா பாதகங்கள். இனியும் இழப்பதற்கு எதுவுமில்லை என்று ஏங்கித் தவிக்கின்ற எம்மவர்க்கு கல்விதான் கரை சேர்க்கும் என்று எல்லோரும் நம்புகின்றோம்.

இனத்தால், மதத்தால், மொழியால் பிளவுபட்டுப்போன நம் தேசத்தை இணைக்க இன மத மொழி பேதங்களுக்கப்பால் இந்தக் கல்வி ஒன்றுதான் கை கொடுக்கும் என்பதும் தெளிவான விடயம். வித்தியா அந்தக் கல்வியைத் தொடரும்போது தான் விஷம் மாதிரி எங்கிருந்தோ வந்து அவரது ஆசைக் கனவுகளையும் எதிர் காலத்தையும் சிதறடித்து அவரை இந்த உலகத்தை விட்டே அனுப்பிவிட்டார்கள் பாதகர்கள்.

பாதகர்களின் கையில் அகப்பட்ட வித்தியா தனது கண்களை நிரந்தரமாக மூடும்வரை என்ன துடிதுடித்திருப்பார் என்பதை உணர்ந்து பார்க்கும்போதுதான் ஒரு கணம் உறைந்துபோகிறது நம் உயிர். கண்கள் கனக்கிறது, நெஞ்சம் நனைகிறது, நிழலாடுகிறது அவர்பட்ட வேதனை. நின்றுபோகிறது இதயம். வேண்டாம் இப்படி ஒரு சோகம் இனி நம் தேசத்திற்கு.

அது தமிழிச்சியாய், சிங்களத்தியாய், சோனகத்தியாய் யாராய் இருந்தாலென்ன மானிடப் பெண் என்ற மகிமையோடு அவளைக் காப்பதற்கு சபதம் எடுத்துக் கொள்வோம். தமிழருக்கோ, சிங்கள வருக்கோ, முஸ்லிமுக்கோ பெண்குலத்தின் சாபக்கேடு இனிவரவே கூடாது.

தனது மாணவி வித்தியா பற்றி துயரம் தாளாது அவரது ஆசிரியர் துஸ்யந்தன் துரைராஜா தனது முகப் புத்தகத்தில் பதிவுசெய்துள்ள குறிப்பு இது.

வித்தியா .................. நினைத்துப் பார்க்கிறேன்.

2010 இல், புங்குடுதீவு மகா வித்தி யாலயத்தில் எனது வகுப்பிற்கு புதிய மாணவி ஒருவர் வந்திருப்பதாக ஏனைய மாணவிகள் ஏக குரலில் கூறினர். பார்த்த போது வகுப்பின் கடைசி வரிசையில் வெருட்சியுடன் எழுந்து நின்றாள். பெயரை கேட்டபோது, "வித்தியா" என்றாள்.

ஆங்கில பாடம் என்றால் வித்தியா என்றே அந்த வகுப்பு மாணவர்கள் கூறும் அளவுக்கு அவளின் திறமை இருந்தது. எதிர்கால இலட்சியம் பற்றி ஒருமுறை நான் ஆங்கிலத்தில் எழுதச் சொன்னபோது, "தான் ஒரு பத்திரிகை யாளராக வருவதே நோக்கம்" என்று எழுதியிருந்தாள்.

உயர்தரத்தில் பத்திரிகைத் துறையைத் தான் அவள் ஒரு பாடமாகத் தெரிவு செய்து படித்துவந்தாள். ஜனாதிபதி செயலணிக் குழுவின் ஆங்கிலப் பாட இறுவெட்டுக்கள் கொழும்பில் வைத்து வழங்க வித்தியாவைத்தான் பாடசாலை சார்பில் தெரிவுசெய்தோம்.

மகா வித்தியாலயத்தில் இருந்து நான் இடம் மாற்றலாகிச் சென்றபோது அதை ரத்து செய்யமுடியாதா சேர் என்று ஒரு மகளை போல் அவள் வினவியது இன்னும் என் மனதை நெருடுகிறது. இறப்பு பொதுவானது. ஆனால் இத்தகைய கொடூரமான இறப்பு அந்த அப்பாவிப் பிஞ்சுக்குப் பொருத்தம் இல்லாதது.

எப்போதும் தலை வலிக்கிறது, கண் குத்துது என்று அடிக்கடி கண்ணீர் விடும் அவள் இறுதிநேரத்தில் என்ன அவஸ்தைப்பட்டிருப்பாள்... கடவுளே..... இறுதிச்சடங்கில் நாம் மழையில் தோய்ந்தபடி சென்றது நல்லதே... எமது கண்ணீர் வெளியில் தெரியக்கூடாது... போய் வா மகளே...

வித்தியாவின் ஆசிரியர் துரைராஜாவின் துயரப் பதிவுகள் நம் விழிநீரைக் குளமாக வெளியேற வைக்கிறது. வித்தியாவை நேரில் கண்டிராத, உணர்வுகளால் அவளோடு ஒன்றிப் போன ஆயிரமாயிரம் உள்ளங்கள் உலகை விட்டுப்போன அவளுக்காய் இப்பொழுது உருகிநிற்கின்றன. இதிலே இன மத மொழிபேதம் இல்லை. அவளின் துயரம் சுமந்த இறப்பு, நாட்டுக்கு நல்லதோர் ஐக்கியமாய் சங்கமிக்க வைத்திருக்கிறது.

சிங்களம், தமிழ், முஸ்லிம் என்றில்லாமல் சிந்திக்கவைத்திருக்கிறது. வித்தியா நமக்கெல்லாம் ஒரு பாடமாய் நிற்கிறாள். இந்நாட்டுப் பெண்களைப் போற்றிப் பாதுகாக்க அவளது இறப்பு ஒரு கலங்கரை விளக்காய் இருக்கிறது.

### பொறுப்பு யார்?

வித்தியா ஒரு பருவ யுவதி, காட்டு வழியால் தன்னந்தனியாகச் சென்ற அவள் அன்று பாடசாலைக்குப் போனாளா, இல்லையா? என்று பெற்றோர் பார்த்திருக்க வேண்டாமா? பாடசாலைக்கு வராத தங்கள் தோழியை சக மாணவிகள் விசாரித்திருக்கவேண்டாமா? வகுப் பாசிரியர் வரவுப் பதிவுசெய்யும் போது வித்தியா வராதது சிந்தனைக்கு வரவில்லையா? பாடசாலை அதிபர் ஓரக்கண் பார்வையில் நாளாந்த வகுப்பு நடப்புகளை அறியவேண்டாமா? பெற்றோர் முறையிட்டதும் பொலிஸார் செயற்பட்ட விதம்? சமூகத்தின் ஒட்டுமொத்தப் பொறுப்பு? என்று வித்தியாவின் கொலையோடு சம்பந்தப் பட்ட பல வினாக்களுக்கு விடை கண்டாகவேண்டும்.

### எங்கே தவறு? எங்கே சறுக்கல்?

தேசத்தின் சொத்தாகிப் போன வித்தியாவுக்காக நீதி வேண்டிப் போராடப் புறப்பட்ட நாம் ஆத்திர மேலீட்டால் அவஸ்தைப்படுகிறோம். இந்த வேகம் விவேகத்தை அழித்து கண்களை மறைத்து வன்முறைகளை வரவேற்று நிற்கின்றது.

மானத்தைக் காக்கப் புறப்பட்டு கடைசியில் கோவணத்தையும் இழந்த கதையாக இந்தப் போராட்டம் ஆகி விடக்கூடாது. வித்தியாவுக்கு அநீதி இழைத்தவர்களுக்கு பாரபட்சமின்றிய தண்டனை வழங்கப்படவேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமே இல்லை. அவர்களுக்கு வழங்கப்படும் அதியுச்சத் தண்டனை அடுத்த வித்தியாக்களைப் பாதுகாக்கும் ஒரு எச்சரிக்கைக் கவசமாக இருக்க வேண்டும் என்பதிலும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

(21ஆம் பக்கம் பார்க்க...)



# அதிகரிக்கும் வன்முறைகள்...

அளவெட்டி
ப.உதயகுமார்

**யாழ்.குடாநாடு** உள்ளிட்ட வடபகுதியெங்கும் என்றுமில்லாத அளவுக்கு வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றுப் பதிவாகிவருகின்றன. இவ்வன்முறைச் சம்பவங்கள் கட்டுக் கடங்காமல் அதிகரித்துச் சென்ற வண்ணமே உள்ளதனை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.

கொலை, கொள்ளை, கோஷ்டி மோதல், கற்பழிப்புகள், மற்றும் கூலிக்கு கொலை செய்தல், கடத்திச் சென்று கற்பழித்துக் கொலை பண்ணுதல், வாள்வெட்டுச் சம்பவங்கள் என்றெல்லாம் வன்முறைகளுடன் கூடிப்பிறந்த நிலமாக வடபகுதி மாறி வளர்ச்சி பெற்றுவருகின்றது.

இந்த அதிவேக வளர்ச்சியினைக் கட்டுப்படுத்தாதுவிட்டால் நிலைமை இன்னும் இன்னும் மோசமாகி மனிதனையே மனிதன் பிடித்துண்ணும் நிலைமை தோன்றலாம் என்றொரு அச்சமும் நிலை தோன்றிவருகின்றது.

வன்முறைகளுடன் கூடியதான வட பகுதியின் நாளைய நிலை என்ன என்பது சிந்திக்கவே முடியாத விடயமாகியும் வருகின்றது.

இதன்விளைவினால் பொதுமக்கள் ஒவ்வொருவரும் உயிரை, உடைமைகளையும் பெண்கள் கற்பினையும், உயிரையும் பணயம் வைத்துப் பயந்து, பயந்து வாழவேண்டிய நிலையிலே உள்ளனர்.

இப்போது வன்முறைக்களமாகிவரும் வடபகுதியிலே நடைபெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டு வருபவர்கள் வேறு யாருமே இல்லை. வேலியே பயிரைமேயும் கதையாகவே நிலைமை உள்ளது! தமிழனே தமிழனைக் கொல்லும், கொள்ளையடிக்கும், பெண்களைக் கடத்திக் கற்பழிக்கும், இழிவான செயலினைச்செய்து வருகின்றான் என்பதே ஒரு கணம் சிந்திக்க வேண்டியநிலையிலே உள்ளது!

தமிழ் என்றும், தமிழ் அரசு உருவாக வேண்டும் என்றும் நீண்டகாலம் போராடி உயிர்களை இழந்து உடைமைகளை இழந்து, ஏன் குடியிருந்த வீடு, குடியிருந்த நிலம், எல்லாவற்றினையும் தமிழன் இழந்து நிற்கின்றான் எனும் நிலையும் நிலைப்பாடும் மறந்துவிட்ட நிலைமையே காணப்படுகின்றன.

ஒரு காலத்திலே யுத்தம் நடைபெற்ற வேளையிலே இங்கு நிலைகொண்டிருந்த இராணுவத்தினரால் கிருஷாந்தி உட்படப் பலர் பாலியல் வல்லுறவுகளுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலைசெய்யப்பட்ட நிகழ்வுகளும் மறக்கப்பட்டுவிட்டன. கடற்படையினரால் சிறுமிகள் கெடுக்கப்பட்ட சம்பவங்களும் இங்கே நடந்தேறியது.

ஆனாலும் இவற்றினைச் செய்தது பெரும்பான்மையினத்தினைச் சேர்ந்தவர்கள் என்று கொதித்தெழுந்த நாட்கள் என் மனமதை முட்டிமோதி நினைவுச் சின்னமாக வலம்வருகின்றது.

அன்று அவர்கள் செய்த தவறினை இன்று எம் இனமெல்லவா? செய்கின்றது! இலங்கைப் படையினர் அத்துமீறிச் செயற்படுகின்றனர். எம் இனத்தின் விடுதலையினை தரமறுக்கின்றான். எமக்கு (தமிழர்) எதிராக செயற்படுகின்றனர் என்றெல்லாம் கோஷம் எழுப்பியே போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

> "வன்முறைகள் வளர்ச்சியடைந்து வருகின்றது என்பதற்குப் பின்புலமாக போதைமருந்து விற்பனையும் பாவனையும் உச்சநிலையிலே உள்ளது. அண்மையிலே வட்டுக்கோட்டை பகுதியிலே இருந்த இளம் பெண்ணொருவரை கழுத்து வெட்டிக் கொலை செய்துள்ளனர். ஒரு காதலின் விளைவாக இம்மரணம் நிகழ்ந்துள்ளது. ஆலயங்களிலே மிருக பலியிடல் வேண்டாம் என்று குரலெழுப்பி வரும் நிலையிலே மனிதர்களின் கழுத்தை வெட்டிக் கொலைசெய்யும் ஈனச்செயல் புது வடிவம் பெற்றுவருகின்றது."

இப்பிடியெல்லாம் போராடியவர்களிடமிருந்து விடுதலை கிடைக்கவில்லை. இப்போது போராட்டமும் கொச்சைப்படுத்தப்பட்ட நிலையிலே தமிழர்களின் வாழ்வே கேள்விக்குறியாகியுள்ளது.

இப்போது பாதுகாப்பற்ற இடமாக மாறிவரும் வடபகுதியிலே வாழ்ந்து வருபவர்கள் இங்குள்ள கயவர்களிடமிருந்து தப்பிப்பிழைத்தாலே போதும் எனும் நிலைமையே காணப்படுகின்றது. பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் பாதுகாப்பில்லை. ஒருவரை எதிர்த்தால் அன்றி பிழைகளைச் சுட்டிக்காட்டினால் கோஷ்டி மோதல், வீடு புகுந்து வாள்வெட்டு என்று அராஜகம் தலைவிரித்தாடி வருகின்றது.

யாருக்கு யாரிடமிருந்து பாதுகாப்பு கிடைக்கும், கிடைக்கப்போகின்றது எனும் எதிர்பார்ப்புகளுடன் வாழும் அல்லது வாழ்ந்துவரும் நிலையிலே குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை கிடைக்கவேண்டும் என்று எதிர்த்துக் குரலெழுப்பி மக்களுடன் கூடியிருந்து, மக்களின் வாழ்வுக்காகப் பாடுபட்டு வருபவர்களும் இல்லாமல் இல்லை.

அண்மையிலே கற்பழித்துக் கொல்லப்பட்ட புங்குடுதீவு மாணவியின் கொலையிலே தொடர்புபட்டவர்கள் ஒருபுறமிருக்க, குற்றவாளிகளில் ஒருவனுக்கு பாதுகாப்பு வழங்கி, பணம்பெற்று பத்திரமாக பயணம் அனுப்பிய அரசியல்வாதிகளும் இருக்கின்றனர் எனும் செய்தி தமிழர்கள் அனைவருமே வெட்கித் தலைகுனியவேண்டிய விடயமாயுள்ளது.

முழு இலங்கையர்களும் கொதித்தெழுந்து ஆர்ப்பாட்டம் கடையடைப்பு என்று நடாத்திக்கொண்டிருக்கும் சூழலிலே குற்றவாளியைக் காப்பாற்ற முனைந்த அரசியல்வாதியின் கட்சியினர் தமிழ் தேசியம் என்று இனிமேல் பேசமுடியாது.

ஒரு காலத்திலே ஈ.பி.டி.பி.யின் துணையுடன் படையினர் எம்மினத்தை அழித்துவருகின்றான் என்று பசப்பு வார்த்தைகள்பேசி, நீலிக்கண்ணீர் வடித்த குறித்த அரசியல் கட்சிப் பிரமுகர்கள் இனி என்ன சொல்லப் போகின்றனர். குற்றமிழைத்தவனைவிட, குற்றவாளிகளுக்கு, பாதுகாப்பு புகலிடம் வழங்குபவர்களே மோசமான குற்றவாளிகள் என்று கருதவேண்டும்.

ஒரு பாடசாலைச் சிறுமியை கடத்தி, கோரமான முறையிலே கற்பழித்து கொலை செய்தவனைக் காப்பாற்ற முனைந்த சட்டத்தரணி நடைபெறப்போகும் பாராளுமன்றத் தேர்தலிலே போட்டியிட இருந்தவர் எனும் செய்தியும் வெளிவருகின்றது.

பாரிய குற்றமிழைத்த ஒருவனைக் காப்பாற்ற முனைந்த கட்சியின் பிரமுகர் தேர்தலில் நின்றாலென்ன, தெருவிலே நின்றால் என்ன? என்று மக்கள் எண்ணத் தொடங்கியுள்ளனர். இது பயிரின் காவலுக்கு இருக்கும் வேலியே பயிரை மேயும் கதைக்கு ஒப்பீடானது.

வன்முறைகள் வளர்ச்சியடைந்து வருகின்றது என்பதற்குப் பின்புலமாக போதைமருந்து விற்பனையும் பாவனையும் உச்சநிலையிலே உள்ளது. அண்மையிலே வட்டுக்கோட்டை பகுதியிலே இருந்த இளம் பெண்ணொருவரை கழுத்து வெட்டி கொலை செய்துள்ளனர். ஒரு காதலின் விளைவாக இம்மரணம் நிகழ்ந்துள்ளது. ஆலயங்களிலே மிருக பலியிடல் வேண்டாம் என்று குரலெழுப்பிவரும் நிலையிலே மனிதர்களின் கழுத்தை வெட்டிக் கொலை செய்யும் ஈனச்செயல் புதுவடிவம் பெற்று வருகின்றது.

நிலைமை இவ்விதமிருக்க, இளைஞர்கள் மத்தியிலே உருவாகி வளர்ச்சிபெற்று வரும் குரோத உணர்வு பகை உணர்வு என்பன வாள்வெட்டு எனும் வடிவிலே தாண்டவமாடி வருகின்றது. இவர்களின் செயல்களைத் தண்டிக்கச் சட்டம் இருந்தாலும் சட்டத்தின் முன்னாள் இருக்கும், இருக்கக்கூடிய ஓட்டைகளை பயன்படுத்தி வெளியே வருவதுடன், மீண்டும் அதே பாணியிலே செயற்பட்டும்வருகின்றனர். இரவுநேர திருவிழா மற்றும் நிகழ்வுகளிலே கூடுவோர் சண்டையிட்டு குழப்பம் விளைவித்து பிரச்சினைகளை உண்டாக்கிவருகின்றனர்.

இளையோர் பலர் கூடுவதும் பின் கூட்டமாக இணைந்து வாள்வெட்டிலே ஈடுபடுவது! வேண்டாதவர்களை வீடு புகுந்து அடித்து நொருக்குவது!, விரும்பாத யுவதி- மீது காதல் வலைவீசுவது!, அவள் விரும்பாதுபோனால் அசிட்வீசி முக அழகினைக் கெடுப்பதுபோன்ற ஈனச் செயல்கள் தினமும் நடக்கின்றது.

குறிப்பாக இப்போதுள்ள இளம் சந்ததியினர் சட்டத்தை கையிலெடுத்துச் செயற்படும் நிகழ்வுகளுக்கு பஞ்சமில்லை. அண்மையிலே யாரோ ஒரு பகுதியினர் விரித்த நயவஞ்சக வலையிலே சிக்குண்டு 130 பேர்வரையிலே சிறையிலே உள்ளனர்.

மாணவி வித்தியாவின் படுகொலை ஊர்திரண்டு கண்டித்தது. கண்ணீர் சொரிந்தது. இது நியாயமானது. ஆனாலும் நீதிதேவதையின் இருப்பிடமான நீதி மன்றின்மீது தாக்குதல், வாகனங்களுக்கு கல்லெறிந்து சேதம் உண்டாக்கியமை, பொலிசாரை தாக்கி காயப்படுத்தியவை போன்ற செயற்பாடுகளுக்காக குற்றம் சாட்டப்பட்டு, இப்போது கம்பி எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இது அவசியமின்றி சட்டத்தைக் கையிலெடுத்ததன் விளைவாகவே கருதமுடியும். இதுவும் வன்முறைதான்.

யுத்தம் நடந்தேறியபோதும், அதன் பின்னர் இராணுவம், பொலிஸ் கடற்படையினர் என்று ஊர்முழுவதும் பரவியிருந்தபோது இத்தகைய ஈனம் மிக்க செயல்கள் இடம்பெறவில்லை. இளையோரின் வாள்வெட்டுக் கலாசாரம் நடைபெறவில்லை. ஆனாலும் ஆங்காங்கே சிற்சில சம்பவங்கள் இடம் பெறாமலுமில்லை. இவ்வளவு தூரம் பாரதூரமான விடயங்கள் நடைபெறுவது தடைப்பட்டிருந்தது.

ஆனாலும் சிறுவர்மீது நடைபெறும் துஸ்பிரயோகமும் வன்முறைகளாக பதிவாகிவருகின்றது. கடந்த வாரம்கூட அச்சுவேலிப் பகுதியிலுள்ள ஒரு கடை முதலாளி இனிப்பு டொபி கொடுத்து இரண்டு சிறுமிகளை ஏமாற்றி துஸ்பிரயோகம் செய்த சம்பவம் வெளிவந்துள்ளது. இப்படியான சம்பவங்களின்மூலம் நாட்டிலே குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளது.

பெண்கள், சிறுமிகள், யுவதிகளுக்கு பாதுகாப்பு இல்லாத துயரம்மிக்க நிலமை நீடித்தவண்ணமுள்ளது. வீதியிலே பெண்களும், மாணவிகளும் நடமாடமுடியாத சூழ்நிலை உருவாகிவருகின்றது. பாதுகாப்புக் கேள்விக்குறியாகியுள்ளது.

தமிழன் என்றொரு இனம் தலைகுனிவை சந்திக்கப் போகின்றது! சந்தி சிரிக்க இடம்வரப்போகின்றது. வேலியே பயிரை மேயும் கலாசாரம் நடைபெறுகின்றது.

தமிழர்களுக்கென்று ஒரு தீர்வுத் திட்டம் வருமோ? இல்லையோ அது வர முதலே எங்களுக்குள் போட்டி குறைய வில்லை. மனிதனே மனிதனைச் சாப்பிடும் நிலைமை உருவாகியே தீரும். அரசியல்வாதிகளும் சீரில்லை. ஆளும் தரப்பும் சரியில்லை.

உணவுக்கு மட்டுமே வாயினைத் திறக்கும் நிலை மீண்டும் தோன்றினாலும் ஆச்சரியப்பட இடமில்லை. ஏனென்றால் வீட்டுக்கு வீடு என்னும் அளவிலே வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றபடி உள்ளது.

# பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் தோல்வி



**தொ**ழிற்சங்கத் தலைவர்கள் போராட தொடங்குவதற்கு அழுத்தமளிக்கப்பட வேண்டும் என்று ஸ்கொட்டிஷ் தொழிலாளர்கள் கட்சி குறிப்பிடுகிறது. தொழிற்சங்கவாத மற்றும் சோசலிஸ்ட் கூட்டணியிலூ கூடுதலான தனது அங்கத்தவர்களை கொண்டுள்ள சோசலிஸ்ட் கட்சி, "ஐக்கியத்தின் பொதுச்செயலாளர் லென் மெக்கிளஸ்கியின்"மீது நம்பிக்கை வைக்கிறது. இவர் "தொழிற்கட்சியால் டோரிக்களைத் தோற்கடிக்க முடியாவிட்டால், ஒரு புதிய கட்சியைப் பார்ப்பதற்கு நேரம் வந்துவிட்டதாக அறிவுறுத்தியவராவர்". "முழு தொழிற்சங்க இயக்கமும்" இதை விவாதிக்க தொடங்கவேண்டுமென அது குறிப்பிடுகிறது.

**2015** ஐக்கிய இராச்சியப் பொதுத் தேர்தல் (United Kingdom general election of 2015) ஐக்கிய இராச்சியத்தின் 56ஆவது நாடாளுமன்றத்துக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 2015, மே 7 அன்று நடைபெற்றது. ஐக்கிய இராச்சியத்தின் அனைத்து 650 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கும் தேர்தல்கள் நடைபெற்றன. ஒவ்வொரு தொகுதியிலும் இருந்து மக்களவைக்கும், கீழவைக்கும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார். இப்பொதுத்தேர்தலில், இலண்டன் பெருநகர்ப் பகுதிதவிர்ந்த இங்கிலாந்தின் ஏனைய பகுதிகளில் உள்ளூராட்சி அவைகளுக்கும் தேர்தல்கள் நடைபெற்றன.

டேவிட் கேமரூன் தலைமையிலான பழமைவாதக் கட்சிக்கும், எட்மிலிபாண்ட் தலைமையிலான தொழிற்கட்சிக்கும் இடையில் கடும் போட்டி நிலவும் எனவும், தொங்கு நாடாளுமன்றம் அமையும் வாய்ப்புகளே அதிகம் எனவும் பெரும்பாலான கருத்துக் கணிப்புகள் தெரிவித்திருந்தபோதும், நடைபெற்ற தேர்தலில் பழமைவாதிகள் பெரும்பான்மையுடன் கூட்டணி இன்றி ஆட்சியமைக்கத் தேவையான தொகுதிகளைப் பெற்று வெற்றிபெற்றனர்.

தாராண்மைவாத சனநாயகவாதிகளுடன் கூட்டணி அமைத்து 2010 முதல் ஆட்சிசெய்து வந்த பழமைவாதக் கட்சி 36.9 வீதம் வாக்குகளைப் பெற்று, 331 தொகுதிகளை வென்று நாடாளுமன்றத்தில் 12 அதிகப்படியான இடங்களுடன் தனித்து ஆட்சியமைக்கிறது. 1992 இற்குப் பின்னர் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்கும் முதலாவது கன்சர்வேட்டிவ் அரசு இதுவாகும். அத்துடன், 1900 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிகரித்த விருப்பு வாக்குகளுடன் மீளத் தெரிவு செய்யப்பட்ட முதலாவது பிரதமர் என்ற பெருமையையும், மார்கரெட் தாட்சருக்குப் பின்னர் அதிக தொகுதிகளுடன் மீள வென்ற தலைவர் என்ற பெருமையையும் டேவிட் கேமரூன் பெற்றார்.

எட் மிலிபாண்ட் தலைமையிலான தொழிற்கட்சி, 232 தொகுதிகளை 30.4 வீதம் வாக்குகள் பெற்று இரண்டாவதாக வந்தது. 1987ஆம் ஆண்டுக்குப் பின்னர் தொழிற்கட்சி அடைந்த மிகப்பெரும் தோல்வி இதுவாகும்.

இங்கிலாந்து பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்த தொழிற்கட்சி, "புதிய தொழிற்கட்சியாக" திரும்புவதற்கும் மற்றும் அதன் முன்னாள் தலைவர் டோனி பிளேயரின் பாரம்பரியங்களுக்கு திரும்புவதற்கும் காலந்தாழ்,த்தாது பல கோரிக்கைகளை செய்துவருகிறது என்பதே தொழிற்கட்சி எந்தளவிற்கு வலதுசாரியாக திரும்பியுள்ளது என்பதற்கு ஓர் அளவுகோலாகும்.

பேராவல் மிகுந்த மத்தியதர வர்க்கங்களுக்கு தொழிற்கட்சி அழைப்புவிட தவறியதனாலேயே! அது தோல்வியடைந்தது என்ற தகவலை மீள்வலியுறுத்துவதற்கு பிளேயரும் மற்றும் அவரது தலைமை மூலோபாயவாதி பீட்டர் மாண்டெல்சனும் தலையீடு செய்துள்ளனர். மாண்டெல்சன் கருத்துப்படி, அக்கட்சி "ஏழைகளுக்கானது, பணக்காரர்களை வெறுக்கிறது" என்ற உணர்வை அது காட்டியதுதான் மிகவும் மோசமானதாக இருந்ததாம்.

எட் மிலிபாண்ட் இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, தலைமைக்கான போட்டி நடந்துவருகிறது. அதில் ஏற்கனவே ஏழு பேர் முக்கிய வேட்பாளர்களாக உள்ளனர். அனேகமாக இன்னும் பலரும் அதில் சேரக்கூடும். இவர்கள் அனைவருமே மதிப்பிழந்த பிழைப்புவாதிகள், நெறிமுறையற்ற முதலாளித்துவம், தனியார்மயமாக்கல் மற்றும் இராணுவவாதத்தின் மூர்க்கமான பாதுகாவலர்களாவர். மிலிபாண்ட் மிகவும் இடதுசாரியாக இருந்து, அவரது மூலோபாயத்தை அக்கட்சியின் மையக்கருவான தொழிலாளவர்க்க வாக்குகளை ஒன்றுதிரட்டுவதன்மீது ஒருமுகப்படுத்தியதால்தான் தொழிற்கட்சி தோற்றுப்போனது என்றும் அதற்கு பதிலாக, பிளேயரின் 'பெரிய முகாம்' மூலோபாயத்திலும் மற்றும் பழமைவாத கட்சியின் வாக்காளர்களை வென்றெடுப்பதற்கான முயற்சிகளிலும் தொழிற்கட்சி திரும்பி இருக்கவேண்டுமென்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

இந்த மதிப்பிழந்த அரச கட்சியிடமிருந்து யாரும் எதிர்கட்சிக்குரிய ஒரு பாசாங்குத்தனத்தைக்கூட எதிர்பார்க்க முடியாது என்ற உண்மையை அடிக்கோடிடும்வகையில், பத்து ஆண்டுகால நிகழ்ச்சிப்போக்கில் தொழிற்கட்சியை மறுகட்டுமானம் செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் நடக்கின்றன.

உண்மையில் தொழிற்கட்சி மத்திய வாக்காளர்கள் வட்டத்தை இழந்திருப்பதையே இத்தேர்தல் நிரூபித்துள்ளது. அதேவேளையில் அக்கட்சியை தொழிலாளர்கள் கைவிட்டுவிட்டார்கள். ஏனென்றால் ஏற்கனவே அவர்கள் அதை பழமைவாத கட்சியின் இரண்டாம் நகலாக பார்ப்பதுடன், அதனோடு சேர்ந்து வாக்காளர்களில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கினர், எந்த கட்சியிடமும் தமக்கு வழங்குவதற்கு எதுவும் இல்லை என்பதால் மொத்தத்தில் வாக்களிப்பதிலேயே எந்த அர்த்தமும் இல்லை என்று பார்க்கின்றனர்.

இதை நோக்கிய மிலிபாண்டின் நொண்டி சாக்குபோக்குகள் சிறிதும்கூட நம்பத்தக்கவையாக இல்லை. இது பெருவணிகங்களின் ஒரு கருவியாக மற்றும் ஈராக் போரின் வடிவமைப்பாளராக இருந்த பிளேயர் மற்றும் அவருக்கு அடுத்துவந்த கோர்டன் பிரௌனின் உண்மையான வரலாற்றை அதற்கு பின்னால் மறைக்க தகைமையற்றதும் மற்றும் சிக்கன நடவடிக்கைகளுக்கு கட்டுப்பட்ட ஒரு கட்சியிலிருந்து இது வருகிறது.

இந்த காரணத்திற்காக தான், தொழிற்கட்சியின் மிகப்பெரிய தோல்விகள் ஸ்கொட்லாந்திலிருந்து வந்தன என்ற உண்மையைக் குறித்த எவ்வித கருத்தும் கூட அங்கே அரிதாக உள்ளது. ஸ்கொட்லாந்தில் ஸ்காட்டிஷ் தேசிய கட்சி (SNP) அது சிக்கன நடவடிக்கைக்கு எதிராக இருப்பதாக பொய்யாக அறிவித்தது.

தொழிற்கட்சிக்கு எதிரான வர்க்க கோபத்தை, ஸ்கொட்டிஷ் தேசிய கட்சியால் ஒரு தேசியவாத திசையில் வெற்றிகரமாக திருப்பிவிட முடிந்தது. இதனால் அவர்கள் பிரிட்டிஷ் தேசியவாதத்தையும், ஆங்கிலேய தேசியவாதத்தையேகூட தூண்டிவிட்டு பழமைவாதிகள் வெற்றியடைய கூடியதாக இருந்தது. அது ஐக்கிய இராச்சிய சுதந்திர கட்சி (UKIP), முன்பு தொழிற்கட்சியின் வலுவான பிடியிலிருந்த இடங்களுக்குள் கணிசமாக ஊடுருவுவதற்கும் உதவியது.

தொழிலாள வர்க்கத்தினுள் பிளவுகளை விதைப்பதில் மற்றும் எல்லையின் இரு தரப்பிலும் தேசியவாதிகளின் கரங்களைப் பலப்படுத்துவதில், போலி இடது அமைப்புகள் முக்கிய அரசியல் பொறுப்பேற்கின்றன.

பல ஆண்டுகளாக, அவை ஸ்கொட்டிஷ் தேசிய கட்சி மற்றும் ஸ்கொட்டிஷ் பிரிவினைவாதம் (Scottish separatism) ஆகியவற்றை வெஸ்ட்மின்ஸ்டர் ஆட்சிக்கு ஒரு முற்போக்கான மாற்றீடாக பாதுகாத்துள்ளன. தேர்தலுக்கு முன்னதாக, அவை தொழிற்கட்சியைச் சாடின, அது தொழிலாள வர்க்கத்தைக் காட்டிக்கொடுத்ததற்காக அல்ல, மாறாக ஒன்றியத்தை அது பாதுகாப்பதற்காக.

ஸ்கொட்டிஷ் தேசிய கட்சியின் வெற்றிக்குப் பின்னர், அவற்றின் முன்னோக்கு, ஸ்கொட்டிஷ் முதலாளித்துவ வர்க்கத்தின் அந்த கட்சியுடன் ஏதேனும் வடிவத்தில் கூட்டணி அமைப்பதன்மீது குவிந்துள்ளது. அல்லது, அது முடியாமல் போனால், சிக்கன நடவடிக்கையை எதிர்ப்பது மற்றும் சுதந்திரத்திற்காக போராடுவது என்ற அதன் வாக்குறுதிகளை நிறைவேற்ற அழுத்தமளிப்பது என்பதாக உள்ளது.

எல்லைக்கு தெற்கே, தொழிற்கட்சியின் தோல்வியின்மீது போலி இடதுகள் அவநம்பிக்கையுடன் ஓலமிட்டன. ஆனால் தொழிற்கட்சி மற்றும் தொழிற்சங்கங்களை இடத்திற்கு திருப்ப அழுத்தமளிப்பது என்ற திவாலான வாதங்களைத் தவிர, அவற்றிடம் தொழிலாள வர்க்கத்திற்கு வழங்குவதற்கு மீண்டும் ஒன்றுமில்லை.

"தொழிற்சங்கத் தலைவர்கள் போராட தொடங்குவதற்கு அழுத்தமளிக்கப்பட வேண்டும்" என்று ஸ்கொட்டிஷ் தொழிலாளர்கள் கட்சி குறிப்பிடுகிறது. தொழிற்சங்கவாத மற்றும் சோசலிஸ்ட் கூட்டணியில் கூடுதலான தனது அங்கத்தவர்களை கொண்டுள்ள சோசலிஸ்ட் கட்சி, "ஐக்கியத்தின் பொதுச்செயலாளர் லென் மெக்கிளஸ்கியின்" மீது நம்பிக்கை வைக்கிறது. இவர் "தொழிற்கட்சியால் டோரிக்களைத் தோற்கடிக்க முடியாவிட்டால், ஒரு புதிய கட்சியைப் பார்ப்பதற்கு நேரம் வந்துவிட்டதாக அறிவுறுத்தியவராவர்". "முழு தொழிற்சங்க இயக்கமும்" இதை விவாதிக்க தொடங்கவேண்டுமென அது குறிப்பிடுகிறது.இந்த போக்குகளில் எதுவுமே தொழிலாள வர்க்கத்தைக் குறித்து பேசுவதில்லை.

● தொகுப்பு: வேணு கிருஸ்ணா ●

[தொடர்ச்சி 22ஆம் பக்கம்]





நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த உங்களைப் போலொரு அண்ணா படிப்பிலும், விடாமுயற்சியாலும் விஞ்ஞானியாக உயர்வதைக் கூறும் குட்டித் தொடர்கதை...

பரமண்ணா



# "விளையும் பயிரின் முளை!"



இருப்பினும் இந்நூலைப் படித்து முடித்தபோது ஏற்பட்டிருந்த நிறைவைப் போன்று இதுவரை அவன் படித்திருந்த எந்த நூல்களையும் படித்து முடித்தபோது ஏற்பட்டிருக்கவில்லை.

எதையோ அந்நூலைப் படித்து முடித்த பின்பு, அடைந்துவிட்ட பிரமை!

அதற்கு இப்புத்தகம் மட்டும்தான் காரணமா இல்லை. முன்பு படித்து முடித்திருந்த புத்தகங்களும் காரணி என்பதை அவனால் சிறுகச் சிறுக உணர்ந்து கொள்ளக்கூடிய தாகவும் உள்ளது.

அதன் பின்பாகச் சேகரனுக்கு கண்களில் படுகின்ற பொருட்கள் எதுவானாலும் அணுகி ஆராயவேண்டும் என்னும் ஆர்வமே மிகை யாகத் தோன்றிக் கொண்டிருந்தன.

அத்தகைய விருப்பம் அவனுக்கு அறிவு விளங்கத் தொடங்கிய காலத்தில் இருந்தே நிறைய உண்டு!

எனினும் இத்தனை காலமும் அவன் விருப்பப் பட்டவை இனம்புரியாத கற்பனைகளாகவே இருந்தும் வந்துள்ளன.

இன்று அவனால் ஆர்வம் கொண்டவற்றை தன்னுடைய ஆளுமைக்குட்படுத்தி நன்கே தெரிந்துகொள்ளவும் கூடியிருந்தது.

அவற்றை இப்போ தன்னால் செயற்படுத்த முடியுமென்ற நம்பிக்கையும் இதயத்தில் வேர்விடத் தொடங்கியிருந்தன.


சிந்தனைச் சிற்பி என்றே சேகரனை கூறலாம். எப்பொழுதுமே அவன் எங்காவது தனிமையில் இருப்பதையே பெரிதும் விரும்புவான். அப்படியான சூழல் கிடைத்துவிட்டால் சிந்தனைகளால் மூழ்கடிக்கப்பட்டே போவான்.

சமீபத்தைய அவனில் ஏற்பட்டிருக்கும் மாற்றம், வீட்டில் எவருக்குமே தெரிந்திருக்க நியாயமில்லை.

கொஞ்சம் கொஞ்சமாகத் துளிர்விட்டு பெரிய விருட்சமாக வளர்ந்தாலே எதுவும் மற்றவர்களின் பார்வைகளிலும் படுகிறது. ஆயினும் சேகரின் இம்மாற்றத்துக்கு என்றோ அத்திபாரம் இடப்பட்டிருக்கையில் அதனைத் தெரிந்துகொள்வதில் மற்றவர்களுக்கு ஏன்தான் தாமதம் ஏற்படப்போகின்றது?

## சிந்திக்க...

### சிறுவன்




உலகப் புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளர் டால்ஸ்டாய் காந்தியடிகளைச் சந்திக்க இந்தியா வருவதாகக் கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் அடிக்குறிப்பாக வழிகாட்ட ஒரு சிறுவனை விமான நிலையத்திற்கு அனுப்பிவைக்கும்படி கேட்டிருந்தார்.

குறிப்பிட்ட தினத்தில் டில்லி பாலம் விமான நிலையத்திற்கு யாரையும் அனுப்பாமல் காந்தியடிகளே போய்க் காத்திருந்தார். விமான நிலையத்திலிருந்து இறங்கிவந்த டால்ஸ்டாய்க்கு காந்தி அடிகளைக் கண்டதும் பெரும் அதிர்ச்சி.

"நீங்களே வந்துவிட்டீர்களே...! ஒரு சிறுவனைத்தானே அனுப்பும் படி கேட்டிருந்தேன்" என்றார் டால்ஸ்டாய். "டில்லி முழுவதும் தேடிப் பார்த்தேன்... என்னைவிட சிறுவன் யாரும் தென்படவில்லை" என்றார் காந்தியடிகள். டால்ஸ்டாய் வியந்து போய் நின்றார்.

### புகழ்பெற்ற ஓவியம்



புகழ்பெற்ற பிக்காசோவின் ஓவியத்தை பெரும் தொகைக்கு விற்றுவிட்டார் ஒருவர். சில நாள்கள் கழித்து வாங்கியவருக்குச் சந்தேகம் வந்தது. உண்மையிலேயே அது பிக்காசோவின் ஓவியம் தானா? என்று. பிக்காசோவிடமே அதை எடுத்துச்சென்றார் அவர்.


"இது நீங்கள் தீட்டியதுதானா" என்றுகேட்டார். பிக்காசோ நேரிடையாகப் பதில் சொல்லாமல் என்ன விலைக்கு வாங்கினீர்கள்?" என்றுகேட்டார். "ஒரு லட்சம் டொலருக்கு" என்றார் அவர். "அப்படியானால் நான் தீட்டியதாகத்தான் இருக்கும். வேறு யாருடைய ஓவியத்துக்கும் அவ்வளவு விலை தரமாட்டார்கள்" என்றார் பிக்காசோ.

### விடுகதைகள்

1. உடம்பில்லாத ஒருவன் பத்துக்கும் மேல் சட்டை போட்டிருப்பான். இவன் யார்?
2. எவர் கையிலும் சிக்காத கல், எங்கும் விற்காத கல். இது என்ன?
3. நான்கு கால்கள் உள்ளவன். இரண்டு கைகள் உள்ளவன். உட்கார்ந்தே இருப்பான். இவன் யார்?
4. இலையுண்டு கிளையில்லை. பூ உண்டு மணம் இல்லை. கன்று உண்டு பசு இல்லை. இது என்ன?
5. வெள்ளை ஆடை உடுத்திய மஞ்சள் மகாராணி. இவள் யார்?
6. காதைத் திருகினால் பாட்டுப் பாடுவான். இது என்ன?
7. உடம்பெல்லாம் பல்கொண்ட ஒருத்திக்குக் கடிக்கத் தெரியாது. யார் இவள்?
8. செய்தி வரும் பின்னே, மணியோசை வரும்முன்னே. இது என்ன?
9. காட்டிலே பச்சை, கடையிலே கறுப்பு, வீட்டிலே சிவப்பு. இது என்ன?

விடைகள்:
1. வெங்காயம், 2. விக்கல், 3. நாற்காலி, 4. வாழை, 5. முட்டை, 6. வானொலிப் பெட்டி, 7. சீப்பு, 8. தொலைபேசி, 9. மரம், கரி, நெருப்பு

### பாதையை கண்டுபிடியுங்கள்



போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 08.06.2015

வர்ணம் தீட்டும் போட்டி இல.1098
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.


வர்ணம் தீட்டும் போட்டி இல:

பரிசுக்குரியவர்: 1096
வ.கம்சாயினி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

பாராட்டுக்குரியவர்கள்

01. த.சானு, புலோலி தெற்கு, புலோலி.
02. எம்.காவேரி, வாகரை, மட்டக்களப்பு.
03. வ.தனுசன், குருநகர், யாழ்ப்பாணம்.
04. நு.தஸ்மிகா, உடப்பு, புத்தளம்.
05. பி.சாமினி, முள்ளியவளை, முல்லைத்தீவு.
06. யோ.றெஜினா, கச்சேரி வீதி, யாழ்ப்பாணம்.
07. என்.நர்மதா, பிரதான வீதி, நுவரெலியா.
08. எம்.எம்.நுர்கான், நிந்தவூர், மட்டக்களப்பு.

### சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



# உண்மைத் தொடர்

**அதிர் இடி 92**

# இடி அமீன்



> எல்லாமே உங்களுக்குத்தான் பகிர்ந்து தரப்போகிறேன். உங்களை இங்கிருந்து பிணமாக அனுப்ப விரும்பவில்லை. அதனால்தான் பண மாகத் தருகிறேன். பெற்றுக்கொண்டு நான் சொல்வதற்கெல்லாம் ஒப்புக்கொள்ளுங்கள்!"

தன் மேசைமீது கிடந்த பொதி ஒன்றைப் பிரித்தான் அமீன். அதற்குள் என்ன இருக்கப்போகிறதோ என்று மாணவர்களின் இதயத் துடிப்பு எகிறிக் கொண்டிருந்தது. மிரண்டு நின்றனர்.

ஆனால் அதற்குள் இருந்து அமீன் எடுத்தது பணநோட்டுக் கட்டுகள். மடமடப்பான புதுநோட்டுக் கட்டுக்கள்.

அவற்றை மேசையில் அழகாக அடுக்கினான். திறந்த விழிமூடாது நின்ற மாணவர் தலைவர்களைப் பார்த்துக் கண்சிமிட்டினான்.

"என்ன பார்க்கிறீர்கள்? எல்லாமே உங்களுக்குத்தான் பகிர்ந்து தரப் போகிறேன். உங்களை இங்கிருந்து பிணமாக அனுப்ப விரும்பவில்லை. அதனால்தான் பணமாகத் தருகிறேன். பெற்றுக்கொண்டு நான் சொல்வதற்கெல்லாம் ஒப்புக்கொள்ளுங்கள்!" என்ற அமீன் உரத்து சிரித்துவிட்டு கூறினான்,

"ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இல்லையானால் உங்கள் குடும்பங்களை நீங்கள் தேடவேண்டியிருக்கும்!"

அமீனின் சொற்படி நடக்க அவர்கள் ஒப்புக்கொண்டனர். நடுங்கும் கரங்களால் பணக்கட்டுக்களை பெற்றுக்கொண்டனர்.

"அவர்களிடம் அமீன் என்னடா அமீன் எங்கள் போராட்டத்திற்கு பயந்து, பணிந்து பணம் கொடுக்கிறானோ என்று நினைத்தால் நீங்கள் படித்த முட்டாள்கள். உங்களை அழிப்பதைவிட உங்களை வைத்தே எதிர்ப்புகளை அழிப்பதுதான் எனக்கு இலாபம். நாளை நான் ஒரு அறிக்கை விடப்போகிறேன். அதனை வரவேற்று மாணவர்களைத் தணிப்பதுதான் உங்கள் வேலை புரிந்ததா? போய்வாருங்கள்!"

அதேபோல் தாதிமார் சங்கத் தலைவியும், செயலாளரும் அதே நாள் நள்ளிரவில் அமீன் முன்பாக நிறுத்தப்பட்டனர்.

"அழகாகத்தான் இருக்கிறீர்கள், உங்களைப் பார்த்தாலே நோயெல்லாம் பஞ்சுபோலப் பறந்துபோகும். மருந்து ஏன்? மாத்திரை ஏன் ஏனம்மா என்னோடு விளையாட ஆசையாக இருக்கிறதா?" என்று திடீரென்று கேள்வி ஒன்றைத் தூக்கிப்போட்டான் அமீன்.

சட்டென்று அவர்களில் ஒருத்தியை நெருங்கி அவள் மார்பைத் தன் கையால் அழுத்தினான்.

உங்கள் இருவரையும் என் ஆட்களிடம் ஒப்படைக்கலாம் என்று நினைக்கிறேன். அவர்களும் அனுபவிக்கட்டுமே! என்ன சம்மதமா? இப்படி மதமதப்பாக இருக்கிறதே யாருக்குத்தான் ஆசை வராது? என்று மேலும் அழுத்தினான்.

அமீனின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் தோட்டாக்களாக அவர்களது உறுதியைத் துளைத்தது. அவர்கள் நிலைகுலைந்து போனார்கள்.

கைகூப்பி நின்றனர். கண்களில் இருந்து தாரைதாரையாகக் கண்ணீர். போதும் நிறுத்துங்கள்! உங்களைப் போன்ற அழகான பெண்களை ஆண்டவன் படைத்தது அழுவதற்காகவா என்று இடிச்சிரிப்பை உதிர்த்தவன். மேசையை நோக்கிப் போனான். மேசையில் இன்னொரு பொதி கிடந்தது. அதனைப் பிரிக்க அதற்குள்ளும் பணநோட்டுக்கள் கிடந்தன.

மாணவர் தலைவர்களுக்கு கூறியதையே அவர்களுக்கும் கூறினான்.

அமீனின் ஒவ்வொரு அசைவுக்கும் நடுங்கிக் கொண்டிருந்த தாதிகள் இருவரும், அமீன் சொன்னதற்கு எல்லாம் தலையாட்டினார்கள்

பணக்கட்டை அவர்களிடம் கொடுத்த அமீன் அவர்களை அனுப்பி வைக்கும்போது தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் இருவரையும் தன் இரு கைகளாலும் இழுத்து அவர்களது உதடுகளைக் கௌவி இருவரையும் மாறிமாறி முத்தமிட்டான்.

மறுநாள் அமீனின் அறிக்கை வெளியானபோது அமீனின் தந்திரத்துக்கு பலன் இருந்தது.

"ஜனாதிபதிக்கு எதுவுமே தெரியவில்லை. நாமாவது அவரது கவனத்திற்கு கொண்டு சென்றிருக்கலாம். இப்போது அவராகவே உண்மையைக் கண்டுபிடித்து உரிய நடவடிக்கை எடுத்துவிட்டார். இனி எதற்குப் போராட்டம்? நிறுத்தவேண்டியதுதான்" என்று மாணவர் தலைவர்கள் நான்கு பேரும் கூறிவிட்டனர்.

அமீனின் அறிவிப்பை சந்தேகித்த மாணவர்களின் குரல் எடுபடவில்லை. அதேபோலவே தாதிகளது போராட்டமும் நிறுத்தப்பட்டது.

அதிபர் அமீன் அவர்கள் நீதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். பாதிக்கப்பட்ட தாதிகள் நீதி விசாரணைக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று தாதிகள் சங்கம் அறிக்கை விடுத்திருந்தது.

அறிக்கையைப் பார்த்த அமீன் இடிச்சிரிப்பை இறக்கினான்.தன் முன்னால் அமர்ந்திருந்த அமைச்சர் சியம்பாவிடம் பார்த்தீரா ஜனநாயகத்தை. ஆர்ப்பாட்டக்காரர்களை நான் நினைத்திருந்தால் சுட்டுத் தள்ளியிருக்க முடியும். அப்படிச் செய்திருந்தால் கொஞ்சம் கெட்டபெயர் சேர்ந்திருக்கும். இப்போது பாரும் அவர்களின் தலைவர்கள் என்று வலம் வந்தவர்களை வைத்தே அவர்களை வழிக்கு கொண்டு வந்துவிட்டேன்! என்றான்.

அமீனின் மூளைக்குள் குயுத்தியான திட்டங்கள் சுலபமாக தோன்றிவருகின்றன. அமீன் தந்திரத்தில் நன்கு தேறிவிட்டான்.

இனி உகண்டா மக்கள் முட்டாள்களாகப் போகிறார்கள் என்று உள்ளூர நினைத்துக்கொண்டார் சியம்பா.

அவரது நினைப்பை மேலும் உறுதிப்படுத்துவது போல அமீன் கூறினான். மிஸ்டர் சியம்பா! எனது ஆட்களை வைத்தே கட்சிகள் ஆரம்பித்து எனக்கு எதிராக கோசம் போட வைக்கப்போகிறேன்!

சியம்பாவுக்கு புரியவில்லை, விழித்தார். அவரது குழப்பத்தை ரசித்த அமீன் கூறினான்.

நம் ஆட்கள் நமக்கு எதிராக கோசம்போட்டால் நமது உண்மையான எதிரிகள் நமக்கு எதிராக கோசம் போட சந்தர்ப்பம் இருக்காதல்லவா?'

சியம்பாவுக்கு அமீனின் நாசகார மூளை அச்சமூட்டியது. மிகப் பயங்கரமான ஒருவனிடம் உகண்டாவின் எதிர்காலம் வசமாக சிக்கிக் கொண்டதாக நினைத்தார்.

ஆனால், அடுத்தடுத்து நடந்த கொடூர சம்பவங்கள் அமீனின் தந்திரங்களையும் மீறி அவனது பயங்கர சொரூபத்தை காண்பித்தன.

(தொடரும்..)

---

**வாசக நெஞ்சங்களே!**
**உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

## குறுக்கெழுத்துப் போட்டி - 627

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | | 29 | 30 |
| 31 | | 33 | 34 | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 625 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உ 1 | ண் 2 | மை 3 | அ 4 | ன் 5 | பு 6 |
| ண 7 | ப 8 | ம் 9 | ல 10 | ப 11 | ப் 12 |
| ர் 13 | டா 14 | க 15 | ட் 16 | | று 18 |
| க 19 | | | சி 22 | ரு 23 | சு 24 |
| ரு 25 | ஆ 26 | | ய 28 | ப 29 | று 30 |
| வி 31 | சி 32 | த 33 | ம் 34 | | சு 36 |

**மேலிருந்து கீழ்**

01.மஸ்கெலியாவில் உள்ள நீர்த்தேக்கம்.
02. இத்தாலி நாட்டிற்கும். குரோசியா நாட்டிற்கும் இடையில் கடலால் சூழ்ந்த இடம்.
03. பக்குவம் பெற்றவன் ; சுங்கம் ; வங்கி.
05. உயர்தரம். (குழம்பியுள்ளது)
06. அழகு; அசைச்சொல். (திரும்பியுள்ளது)
16. முகத்தில் இது வரும்.
24. உயர்ந்தோர். (குழம்பியுள்ளது)

**இடமிருந்து வலம்**

01.திரௌபதியின் சபத நிறைவேற்றமே ..........
07. கட்டடங்களில் பாதுகாப்புக்காக அமைப்பதில் ஒன்று. (திரும்பியுள்ளது)
11. சர்ப்பம் (திரும்பியுள்ளது)
13. ஆண்டுதோறும். (குழம்பியுள்ளது)
19. பனைமரம். (குழம்பியுள்ளது)
25. நித்திரையில் காண்பது . (குழம்பியுள்ளது)
29. தித்திப்பு ; தேசம். (திரும்பியுள்ளது)
33. .......... இல்லாமல் விலங்குகளால் வாழ முடியாது. ஆனால் ......... செய்து மனிதர்களால் வாழமுடியாது. (குழம்பியுள்ளது)

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **08.06.2015** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - **627**
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.

தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.625 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எஸ்.தர்மிகா,
ஜின்னாநகர், திருகோணமலை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. சி.பாலசுந்தரம், கல்வளை, சண்டிலிப்பாய்.
02. க.சத்தியபாமா, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
03. எஸ்.காவியா, பூநகரி, மன்னார்.
04. என்.செந்தில், பிரதான வீதி, புத்தளம்.
05. எம்.எம்.எம்.தஃபியா, பேராதனை, கண்டி.
06. தி.நாவண்ணன், திருநாவற்குளம், வவுனியா.
07. சு.காவேரி, கந்தசுவாமி கோயிலடி, உசன்.
08. ம.சதாசிவம், புலோலி தெற்கு, புலோலி.
09. வ.றொசான், பிரதான வீதி, புத்தளம்.
10. ம.சாம்பவி, சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.



எலி



ஹைக்கூ

## வெள்ளித்[...]
## சூர்ய[...]

விரைவில் ஜே[...]
நடிக்கவிருப்பதாக கு[...]
'பூவெல்லாம் கே[...]
ஒரு காதல்' ஆகிய[...]
நடித்தார்கள். படங்[...]
திருமணம் செய்[...]
என இரண்டு குழ[...]
திருமணத்திற்[...]
நடிக்காமல் இரு[...]
'36 வயதினிலே'[...]
இருக்கிறார் ஜே[...]
இந்நிலையி[...]
இணைந்து நடி[...]
அறிவிப்பு வெ[...]
கதை கேட்டு[...]
கதைகள் பி[...]
ஆனால்[...]
முதலில் தி[...]
வருடத்தில்[...]
பதிலளித்தி[...]

## கல்யாண சமையல் சாதம் ரீமேக்கில் சுருதிஹாசன்

பிரசன்னா, லேகா வாஷிங்டன் நடிப்பில் வெளியான படம் 'கல்யாண சமையல் சாதம்'. இப்படத்தை ஆர்.எஸ்.பிரசன்னா இயக்கியிருந்தார். வித்தியாசமான கதைக்களம் கொண்டு வெளியான இப்படம் ரசிகர்களிடம் பரவலான வரவேற்பை பெற்றது. இருப்பினும் பிரசன்னாவின் நடிப்பு பலராலும் பாராட்டப்பட்டது.

தற்போது இப்படம் இந்தியில் ரீமேக்காக உள்ளது. இதில் இம்ரான்கான் நாயகனாகவும் சுருதிஹாசன் நாயகனாகவும் நடிக்கவுள்ளனர். இப்படத்தை ஆனந்த் எல்.ராய் இயக்கவுள்ளார்.

தமிழில் சுமாரான வரவேற்பை பெற்ற இப்படம் இந்தியில் பெரியளவில் வெற்றிப் பெறும் என்று பொலிவூட் தரப்பினர் எதிர் பார்க்கின்றனர்.



## இரகசிய திருமணமா? நயன்தாரா – விக்னேஷ் சிவன் மறுப்பு

எங்கள் இருவருக்கும் திருமணம் ஆகவில்லை என்று நடிகை நயன்தாராவும் இளம் இயக்குநர் விக்னேஷ் சிவனும் கூட்டாக மறுப்பு தெரிவித்துள்ளார். இந்த நிலையில், திருமணச் செய்தி குறித்து நயன்தாரா கூறும்போது, "திருமணம் நடந்ததாக வெளியான தகவலில் துளிகூட உண்மையில்லை.

எனது வாழ்க்கையில் தற்போதைய நிலையில் நடக்கும் ஒரு விஷயம் சினிமாவில் நடிப்பது தான். தேவையில்லாத இல்லாத செய்திகளை உருவாக்கி பரப்பும் பத்திரிகைகள் கொஞ்சம் தங்களது வேலைகளை சரியாக பார்க்கவேண்டும்.

திருமண செய்தி குறித்து இயக்குநர் விக்னேஷ் சிவன் தனது ட்விட்டர் பக்கத்தில் கூறியிருப்பது, "திருமணம் நடந்ததாக வெளியான செய்தி பைத்தியக்காரத்தனமானது. அதில் எதுவும் உண்மை இல்லை.

இதுபோன்ற செய்திகள் என்னை தனிப்பட்ட முறையிலும் தொழில் முறையிலும் மிகவும் பாதிக்க செய்கிறது. பத்திரிகைகள் கொஞ்சம் நிலையாக செயற்படவேண்டும்" என்று தெரிவித்து இருக்கிறார்.

## அர்னால்டின் செல்ஃபி மோகம்

பிரபல ஹொலிவூட் நட்சத்திரம் அர்னால்ட் சுவார்சனேகர் தான் சமூக வலைதளங்களின் ரசிகன் என்றும், ரசிகர்களுடன் செல்.்.பி படங்கள் எடுப்பது மிகவும் பிடித்திருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார். சமீபத்தில் அர்னால்ட் நடிப்பில் வெளியான 'மேகி' என்ற படத்தின் திரையிடலைத் தொடர்ந்து, அர்னால்டுடன் ரசிகர்கள் செல்.்.பி படங்கள் எடுக்க அனுமதி அளிக்கப்பட்டது. இது குறித்து பேசிய அர்னால்ட், என்னுடன் புகைப்படம் எடுத்துக் கொள்ளமுடியாது என நினைத்தவர்கள் எல்லாம் அன்று எடுத்துக்கொண்டனர். சமூக வலைத் தளங்களில் எனக்கு அருமையாக நேரம் கழிகிறது. சிலருக்கு அவை பிடித்துள்ளன, சிலருக்கு பிடித்திருக்கிறது. எனக்குப் பிடித்திருக்கிறது. அவ்வளவுதான்.

எனது பதிவுகளைப் பற்றி என் பிள்ளைகள் எதுவும் கூறுவதில்லை. அவர்களுக்கு அதில் எந்த தர்மசங்கடமும் இல்லை. அதுவும் இந்த வயதில் (67) நான் சமூக வலைத்தளத்தில் இருப்பதைக் கண்டு பலருக்கும் நம்பிக்கை வந்துள்ளது.





கெத்து



## இரகசியம் எமி பரகசியம் இல்லை

படத்துல, சந்தானம் இல்லை... காமெடி இருக்கு. நயன்தாரா இல்லை... எமி ஜாக்சன் இருக்காங்க் அக்சன் இருக்கு... சிக்ஸ்பேக் இல்லை. ஆக, எது மாதிரியும் இல்லாத புது மாதிரியா உதயநிதி நடிக்கும் கெத்துனு தாராளமா சொல்லலாம்! கொலரை உயர்த்திச் சொல்கிறார் உதயநிதி ஸ்டாலின். காமெடி விற்றமினுடன் ட்ரிபிள் ஜம்ப் அடித்துவிட்டு, நான்காவது படத்தில் கெத்து என அக்ஷன் காட்டுகிறார்.

எந்த வம்புதும்புக்கும் போகாம, எப்பவுமே யோகா, தியானம்னு அமைதியா இருக்கிற பையன். அசைவம்கூட சாப்பிடமாட்டான். ஆனா, அவன் அப்பா அவனுக்கு நேரெதிர். சின்ன தப்பைக்கூட ர.்.ப் அண்ட் ட.்.ப்பா தட்டிக் கேட்கிற ஆளு. அப்பாவின் கோபத்தால மகனுக்கு ஒரு பிரச்சினை. அதை அவன் [illegible] இதான் கதை.

மான் கராத்தே இயக்குநர் திருக்குமரன்தான் கெத்து பண்றார். ஏ.ஆர். முருகதாஸ் சார்கிட்ட அசோஸியேட்டா இருந்தவர். என்னை இந்தப் படத்துல நடிங்கனு சொன்ன முருகதாஸ் சேர், பட டிஸ்கஷன்லயும் நாலைஞ்சு நாள் கலந்துக்கிட்டார். முதல்முறையா சத்யராஜ் சேர்கூட அவருக்கு மகனா நடிக்க??

## இ[...]

ஜிகர்தன[...]
இறைவி பட[...]
சித்தார்த்[...]
ஜிகர்தண்டா[...]
தொடர்ந்து[...]
சி.வி.கும[...]
தயாரிக்கவி[...]
இப்படத்தின்[...]
விஜய் [...]
படத்து[...]
சந்தோ[...]

# வெள்ளித்திரையில் இணையும் சூர்யா - ஜோதிகா


விரைவில் ஜோதிகாவோடு இணைந்து ஒரு படத்தில் நடிக்கவிருப்பதாக சூர்யா தெரிவித்திருக்கிறார்.

'பூவெல்லாம் கேட்டுப்பார்', 'காக்க காக்க', பேரழகன்', 'சில்லுனு ஒரு காதல்' ஆகிய படங்களில் சூர்யா - ஜோதிகா இணைந்து நடித்தார்கள். படங்களில் நடிக்கும்போதே இருவருமே காதலித்து திருமணம் [illegible] இந்த தம்பதிக்கு தியா, தேவ் என இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள்.


திருமணத்திற்கு [illegible] ஆண்டுகள் எந்த படத்திலும் நடிக்காமல் இருந்[illegible] தற்போது சூர்யா தயாரித்த '36 வயதினிலே' மூலம் மீண்டும் நடிப்பு உலகிற்கு திரும்பி இருக்கிறார் ஜோதிகா.

இந்நிலையில் சூர்யாவிடம், மீண்டும் ஜோதிகாவோடு இணைந்து நடிப்பீர்களா என்று கேட்டதற்கு, "நான் தெளிவாக அறிவிப்பு வெளியிட விரும்புகிறேன். இரு இயக்குநர்களிடம் கதை கேட்டு வருகிறேன். எங்கள் இருவருக்குமே அந்தக் கதைகள் பிடித்திருக்கின்றன.

ஆனால் 10 மாத காலம் அவகாசம் கேட்டுள்ளோம். முதலில் திரைக்கதையை முடிப்பவரோடு அடுத்த வருடத்தில் படம் தொடங்கப்படலாம்" என்று பதிலளித்திருக்கிறார் சூர்யா.



மாஸ்



வந்தாமல

# இளம் இசையமைப்பாளர்களை ஊக்குவிக்கும் யுவன்

தமிழில் முன்னணி இசையமைப்பாளராக வலம் வருபவர் யுவன்சங்கர் ராஜா. அரவிந்தன் படம்மூலம் இசை யமைப்பாளராக அறிமுகமானவர் தற்போது 100 படங்களுக்கு மேல் இசையமைத்துள்ளார். இவரது இசையில் பல பாடல்கள் சூப்பர் ஹிட்டாகியுள்ளது. தற்போது இவரது இசையில் மாஸ், யட்சன், சிப்பாய், தரமணி உள்ளிட்ட பல படங்கள் வெளியாகவுள்ளது.

இந்நிலையில் யுவன் 'யு1' என்ற ஓடியோ நிறுவனம் ஆரம்பித்துள்ளார்.

இதுகுறித்து யுவன் கூறும்போது, "யு1 ஓடியோ நிறுவனம் தனி அல்பங்களைத் தயாரிக்கும். நிச்சயம் இது இளம் கலைஞர்களுக்கான சிறந்த அறிமுகத்தளமாக இருக்கும் என நம்புகிறேன்" என்று கூறியுள்ளார்.



வி.ஐ.பி - 2



# இறைவி படப்பிடிப்பு ஆரம்பம்

ஜிகர்தண்டா படத்தைத் தொடர்ந்து கார்த்திக் சுப்புராஜ் இயக்கும் இறைவி படத்தின் படப்பிடிப்பு சென்னையில் தொடங்கியது.

சித்தார்த், பாபி சிம்ஹா, லட்சுமி மேனன் நடிப்பில் வெளியான ஜிகர்தண்டா படத்தை இயக்கியவர் கார்த்திக் சுப்புராஜ். அப்படத்தைத் தொடர்ந்து தனது படத்தின் பணிகளை கவனித்து வந்தார்.

சி.வி.குமார் மற்றும் ஸ்டூடியோ க்ரீன் நிறுவனம் இணைந்து தயாரிக்கவிருக்கும் [illegible] இறைவி என்று தலைப்பிட்டார்கள். இன்று இப்படத்தின் படப்பிடிப்பு சென்னையில் துவங்கியிருக்கிறது.

விஜய் சேதுபதி, பாபி சிம்ஹா, எஸ்.ஜே.சூர்யா, கருணாகரன், காளி வெங்கட், [illegible] நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். இறுதிச் சுற்று பட[illegible] சிவா இப்படத்துக்கு ஒளிப்பதிவு செய்யவிருக்கிறார். சந்தோ[illegible]

[illegible] இப்படத்தில் இருக்கிறார்கள். முன்னணி நடிகைகளுடன் [illegible]

## தேன் கிண்ணம்

மாப்பிள்ளைகளுக்கும்
விலைவாசி
அதிகமாகிப் போனதால்
தொலைந்து போனது
கன்னிகளின்
கல்யாணக் கனவு
மட்டுமல்ல - பல
பெற்றோரின்
தாத்தா, பாட்டி
கனவுகளும் தான்.

# கல்யாணக் கனவு

ஜெ.சிந்து, வேலணை -02



# நட்பே... கோபமா...?



நேசிக்கும் நட்பே
பூஜிக்கும் உறவே
நட்பினை நேசித்து
ஞாபகமாய் ஒன்று தந்திடவே
எண்ணினேன்,
நட்பே ஏன் அதை
ஏற்கவில்லை.

என்னில் கோபமா...?
என்னை வெறுத்துவிட்டதா..?
யாதுமே புரியாமல்
ஏங்குகிறேன் தெரியுமா...?
யாரிடமும் பேசியதில்லை
நட்பாய் பழகியதுமில்லை.
இருக்கும் ஓர் நட்பை

மிகவும் கண்ணியமாய்
நேசித்து வந்தேன்.
ஆனால் என்னை கைவிட்டுச்
செல்கிறது போலும்.

பெரியதாய் தந்திட
என்னிடம் ஏதுமில்லை.
பார்க்காமலே ஏன் மறுத்ததோ
தெரியவில்லை.
என் நட்பை,
மறக்கத்தான் நினைக்கிறேன்
விரைவில் மறந்திடுவேன்
நிம்மதியாய் இருக்கவும்
என் நட்பு மௌனிக்கிறது
நானோ மரணிக்கிறேன்.

செவ்வந்தி, அல்வாய் வடமேற்கு.

# உன் உள்ளத்தை எனக்கு உயிரெழுதி தந்துவிடு

மண்ணின் மேனியில்
உனது மல்லிகைப் பாதங்கள்
பயிலும் போது
பூக்களுக்கெல்லாம்
ஒரு யுகத்திற்கான
புல்லரிப்பு!!!

உனது தாவணிக் காற்றை
சுவாசித்தால்
காகிதப் பூக்களும்
கர்ப்பமாகும்!!!

பொன்னலை பாயும்
உன் கண்களின் பார்வையில்தான்
இந்த உலகமே இன்னும்
உயிரோடு இருக்கின்றது!!

சலங்கை ஓசையாய்
நீ சிரிக்கும்போது
மற்ற ஒலிகளெல்லாம்
தங்கள்... தங்கள்
திசைகளுக்கு சென்று
ஒளிந்து கொள்கின்றன!!!

வானத்து மேகங்கள்
அனைத்தும்
ஒன்றுகூடி பட்டிமன்றம்
நடத்துகின்றன
உனது கூந்தலைப் பற்றி
இதனால் மழைபொழிவதை
சில காலமாகவே
மறந்துவிட்டன!!!

உனது சிவந்த
உதடுகள் எனக்கு
செம்பருத்தி
மலரிதழ்களையே
ஞாபகப்படுத்துகின்றன!!

உனது கூந்தலை உரசுவதால்
காற்று தனது கூந்தலை
சிங்காரித்துக் கொள்கின்றன!!!

உன்னை ஒருமுறையாவது
தொடுவதற்கு உன் உள்ளத்தை
எனக்கு உயிரெழுதி தந்துவிடு!!!



கே.வாலேந்திரன், கொள்ளுப்பிட்டி.

# உன் முகம்

விண்மீன்களின் பாதை
கொண்ட பால்வீதியோ
உன் நெற்றி!!

உன் அழகில் நாணப்பட்டு
தலை கவிழ்ந்தனவோ
புருவங்களாக இருபிறைகள்!!

வெள்ளை வான்வெளியில்
இரு கறுப்பு நிலாக்களோ
உன் விழிகள்!!

பனித்துளிகளின் திரட்சியோ
உன்தன் மூக்கு!!
தேன் சிந்தும் பூவிதழ்களோ
உன் உதடுகள்!!

முத்துமணிக் கோர்வையோ
உன்தன் முத்துப்பற்கள்!!

வெண்ணெயில் உருவான
வெண்மதியோ உன்
கன்னங்கள்!!

உன்தன் பூவிதழ் இதழ்களை
சுற்றி கருவண்டுகளாக
இரு மச்சங்கள்!!
உன்தன் முகவொளியில்
தினந்தோறும்
குளிர்காய்கின்றவோ
உன்தன் கேசம்!!

பார்ப்போரை மிரள வைக்கும்
படைத்தவனின்
படைப்புதனில்
பாவை உன்தன் வதன
படைப்பே சிறப்பு!!

எம்.யூ.அல்சாத், ஓட்டமாவடி.



# மீண்டும் தொடங்கட்டும்




**சிம்பாப்வே** கிரிக்கெட் அணி மூன்று ஒருநாள் போட்டிகள் மற்றும் இரண்டு இருபதுக்கு இருபது போட்டிகளுக்காக பாகிஸ்தான் செல்லவுள்ளது. 2009இல் இலங்கை கிரிக்கெட் வீரர்கள்மீது பாகிஸ்தானில் வைத்துத் தீவிரவாதிகள் தாக்குதல் தொடுத்தபின் இதுவரை எந்த சர்வதேச அணியும் பாகிஸ்தான் செல்லவில்லை. இதன் காரணமாக பாகிஸ்தானில் விளையாடவேண்டிய சர்வதேச ஆட்டங்கள் கட்டார், டுபாய் போன்ற நாடுகளிலேயே நடைபெற்றன. பாகிஸ்தானின் கிரிக்கெட் அட்டவணை இந்தவகையில் தடைகளின்றி முன்னெடுக்கப்பட்டாலும் பாகிஸ்தான் ரசிகர்கள் சர்வதேச ஆட்டங்களை தம் மண்ணில் பார்க்கமுடியாமல் ஏமாற்றம் அடைந்தனர்.

ஆனால், சிம்பாப்வே அணி பாகிஸ்தான் செல்வது புதிய அத்தியாயத்தின் ஆரம்பமாக அமையவுள்ளது. இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சஹாரியார் கான் ஏனைய சர்வதேச அணிகளும் பாகிஸ்தான் வருவதற்கு இது வழிசமைக்கும் என்றும், ஆசிய நாடுகள் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு வருவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

# திரும்பிப் பாருங்கள்

கடந்த வருடத்தில், இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் நிர்வாகம்சார்ந்த சிலர், வீராங்கனையிடம் பாலியல் தொந்தரவுகள் செய்ததாகவும், அணியில் இடம்பெறவேண்டுமாயின் சில விடயங்களுக்கு சம்மதிக்கவேண்டும் என்று மிரட்டியதாகவும் புகார்கள் எழுந்தன. இதுதொடர்பில் கடந்த அரச விளையாட்டுத் துறை அமைச்சர் இலங்கை கிரிக்கெட் சபையிடம் இதுபற்றி ஆராய ஒரு குழு அமைக்கும்படி கேட்டிருந்தார். அது தொடர்ந்து தற்போது குழுவின் அறிக்கை வெளிவந்துள்ளது.


இந்த அறிக்கையின்பின் பல உண்மைகள் வெளிவரும் என்றும் குற்றவாளிகள் தண்டனைக்கு உள்ளாவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இது இப்படியிருக்க, சர்வதேசரீதியாக ஆண்கள் கிரிக்கெட்டுக்கு இருக்கும் பிரபல்யம், துரதிர்ஷ்ட வசமாக மகளிர் கிரிக்கெட்டுக்கு கிடைப்பதில்லை. ஆனால் சர்வதேசரீதியாக மகளிர் கிரிக்கெட் நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கிறது.

இந்தவகையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இலங்கை வந்து எதிர்கொள்ளவிருக்கும் இலங்கை மகளிர் அணி வீராங்கனைகளின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இவர்கள் இருபதுக்கு இருபது சுற்றுப்போட்டி ஒன்றில் ஈடுபடுவார்கள்.

**சாமரி அத்தபத்து (தலைவி), இஷவானி லொகுசூரிய (உதவி அணித்தலைவர்), யசோதா மென்டிஸ், டிலானி மனோதரா, சசிகலா சிரிவர்த்தன, ஸ்ரீபாலி வீரக்கொடி, நிபுனி ஹன்சிகா, அமா காஞ்சனா, இனோகா றணவீர, சுகந்திகா குமாரி, ஹாசினி பெரேரா, உதேசிகா பிரபோதினி, சத்துராணி குணவர்தன, மதுரி சாமுதிக்கா.**

# எது உண்மை





**ருபெல் ஹொசேன்** பங்களாதேஷ் அணியின் முக்கியமானதொரு கிரிக்கெட் வீரர். இவர்மீது இவரது காதலி முன்வைத்த பாலியல் வழக்கொன்றை எதிர்கொண்ட ருபெல் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். இருந்தும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் அவர் பங்கு கொள்ளும் சந்தர்ப்பம் ஒன்றை வழங்குவதற்காக, நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் உலகக் கிண்ணப் போட்டிகளில், தனது திறமையை மிகச் சிறப்பாகவே வெளிப்படுத்தினார். இவரது திறமையால் மகிழ்ந்துபோன இவரது காதலியும் நடிகையுமான நஸ்னின் அக்தார், தனது வழக்கையும் வாபஸ் பெற்றுக்கொள்வதாகவும் அறிவித்திருந்தார். ஆனால் அவர் அப்போது சொன்னதற்கு மாறாக, மீண்டும் ருபெல் மீதான வழக்கை முன்னெடுத்துச்சென்றார். ஆனால் தற்போது ருபெல் குற்றமற்றவர் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ருபெல் தன்னைக் காதலித்ததாகவும், திருமணம்செய்து கொள்வதாக உறுதி கூறியதால்தான் ருபெலுடன் மிக நெருக்கமாகத் தான் இருந்துவிட்டதாகவும், தற்போது தன்னை மணக்க மறுக்கிறார் என்பதே நஸ்னின் குற்றச்சாட்டு. ஆனால் அப்படியேதும் வாக்குறுதி வழங்கவில்லை என்றும் அந்தரங்கமாகப் பழகவில்லை என்பதும் ருபெலின் வாதம்.

இப்போது ருபெலுக்குச் சாதகமாக வழங்கப் பட்டுள்ள தீர்ப்பைப் பற்றி நஸ்னின் பகுதியினர் கொஞ்சமும் மகிழ்ச்சியாக இல்லை. நீதிமன்றம் இவரை ஒரு கிரிக்கெட் வீரராகவே முதன்மைப் படுத்தியதுபோல தீர்ப்பு அமைந்துவிட்டதாக எதிர்த்தரப்பினர் கருதுகிறார்கள். எது எவ்வாறா யினும் பங்களாதேஷ் அணியின் சிறந்த வீரர் ஒருவர் சர்ச்சைகளில் இருந்து தப்பிவிட்டார்.



- ஜோசப் கிருஷ்ணா -

# புதிய மாற்றம்






**இங்கிலாந்து** கிரிக்கெட் அணி, உலகக்கிண்ண ஒருநாள் போட்டிகளில் மிகமோசமாக விளையாடி நாடுதிரும்பி, அதன்பின் மே.இந்தியத் தீவுகள் உடனான டெஸ்ட் தொடரையும் வென்றுகொள்ள முடியாமல் சமநிலைப்படுத்தியதைத் தொடர்ந்து இங்கிலாந்தின் பயிற்சியாளர் பீற்றர் மூர்ஸ் பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

இந்த இடத்தை யார் நிரப்பப் போகிறார்கள் என்ற நிலையில் முன்னாள் அவுஸ்திரேலிய வீரர் ஜஸ்ரின் லாங்கிரின் பெயர் அடிபட்டாலும் அவர் அதனை மறுத்து விட்டார். ஆனால் தற்போது இன்னொரு அவுஸ்திரேலியர் இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியை பெற்றுக் கொள்ளக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவர்தான் ஜேசன் கிலெஸ்பி. இவர் தற்போது இங்கிலாந்தின் யோர்க்ஷயர் அணியின் பயிற்றுவிப்பாளராக இருக்கின்றார். இங்கிலாந்து கிரிக்கெட் சபைப் பணிப்பாளர் அன்ரு ஸ்ரோசுடன் இதுதொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டு வரும் இவ்வேளையில் நியூசிலாந்து அணி இங்கிலாந்தில் டெஸ்ட் தொடருக்காகப் போய் இருக்கிறது. தற்போது இங்கிலாந்து அணிக்குப் பொறுப்பாக இருப்பவர் உதவிப் பயிற்றுனர் போல் பார்பிராஸ். நியூசிலாந்துக்கு எதிரான தொடர் முடியும்வரையில் பார்பிராசே அணிப் பொறுப்பைக் கவனிப்பார் என்று முடிவு செய்யப்பட்டுளளது.

எனினும் ஜூலை மாத்தில் ஆஷஸ் தொடர் தொடங்கும் போது கிலெஸ்பி இங்கிலாந்தின் பயிற்றுனராக பொறுப் பேற்பார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. இது பற்றி இங்கிலாந்து அணித்தலைவர் அலிஸ்ரர் குக் கருத்துத் தெரிவிக்கும்போது, சிறிது தாமதமானாலும் சரியான தொரு நபர் புதிய பயிற்றுனர் பொறுப்பில் வரவேண்டும். தற்போது பார்பிராஸ் தன் பணிகளைத் திறம் படச் செய்துகொண்டுவருகின்றார்.

எனினும் ஆஷஸ் தொடர் தொடங்கும்போது மிகப் பொருத்தமானவர் பயிற்றுனர் பதவியில் இருப்பார் என்று கூறியுள்ளார்.

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்றுக் கொண்டிருக் கிறது. இந்தத் தொடரில் நியூசிலாந்து வேகப் பந்து வீச்சாளர் ரிம் சவுத்தி மிக அதிகமாக எதிர்பார்க்கப்படுகின்றார்.

இரண்டு வருடங்களுக்குமுன் லோர்ட்ஸ் மைதான த்தில் சவுத்தி 108 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து பத்து விக்கெட்டுக்கள் வீழ்த்தியிருந்தார்.

ஆனால் அந்த ஆட்டத்தில் நியூசிலாந்து, இங்கிலாந்திடம் தோல்வியே கண்டது.

உலகக் கிண்ணப் போட்டியின் போது, இங்கிலாந்துக்கு எதிராக ஏழு விக்கெட்டுக்கள் சரித்து சாதனை புரிந்தார். அதோடு நியூசிலாந்து இறுதிப்போட்டிவரை முன்னேறியது. 2013இல் இருந்து பார்க்கும்போது 4 டெஸ்ட் போட்டி களில் வெற்றியும் 2 டெஸ்ட் போட்டி களில் தோல்வியும் கண்டிருக்கிறது நியூசிலாந்து. எனவே நடைபெற்றுக் கொண்டிருக்கும் தொடரை வெற்றி கொள்ளவே நியூசிலாந்து விரும்பும். அதோடு இங்கிலாந்து அணி பலவீனமான அணியாகவும் இருக்கிறது.

இதெல்லாம் நியூசிலாந்து வேகப் பந்துவீச்சாளர் ரிம் சவுத்திக்கு வாய்ப்பாகவே அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதுபற்றி ரிம் சவுத்தியிடம் கருத்துக்கேட்டபோது, இங்கிலாந்து அணி இலகுவானதல்ல. இப்பொழுதான் மே.இந்தியத் தீவு களுடன் 1-1 என்று சமன் செய்து உள்ளார்கள். நான் கடந்த வருடம் இங்கிலாந்துக்கு எதிராக அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியதோ, உலகக் கிண்ணப்போட்டிகளில் இங்கிலாந்தை வீழ்த்த உதவியதோ பெரிய விடயமல்ல. ஒவ்வொன்றையும் புதிதாகவே ஆரம்பிக்க வேண்டும். அந்த வகையில் இந்த தொடரையும் புதிதாக ஆரம்பிக்க உள்ளேன் என்று கூறி உள்ளார்.

**சில** வார்சனைத் திரவியங்கள் அதிக வாசனைகொண்டவை யாக உள்ளன. பலருக்கு அந்த வாசனைபிடிக்காமல் தலைசுற்றல், தலைவலி போன்றவை இருக்கும். அப்படியான வாசனைத் திரவியங் களை தவிர்த்து எல்லோரும் விரும்பத்தக்க வாசனை திரவியங்களை உபயோகித்தல் நல்லது.

பழங்காலத்தில் இருந்தே உலகமெங்கும் வாசனைத் திரவியங்கள் பயன்படுத்தப்பட்டதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. முதன்முதலில் வாசனைத் திரவியங்களை பயன்படுத்திய பெருமை எகிப்தையே சேரும். ஒரு காலத்தில் அரசர்கள், பெரும் மதிப்புக்கு உரியவர்கள்



# வாசனைத் திரவியங்கள்

மட்டுமே வாசனைத் திரவியங்களை உபயோகித்துவந்தனர். பொது வைபவங்கள், விழாக்களுக்கு செல்லும்போது மட்டுந்தான் வாசனைத் திரவியங்களை பயன்படுத்தவேண்டும் என்ற வரைமுறை எதுவும் கிடையாது. இன்னார்தான் பயன்படுத்தவேண்டும் என்ற கட்டுப்பாடும் இல்லை. சிலர் எளிதில் தூங்குவதற்காக இரவில் தூங்குவதற்குமுன் மென்மையான வாசனைவீசும் திரவியங்களை பூசிக்கொள்வர்.

பொதுவாக வாசனைத் திரவியங்கள் ஒருவித வசீகரமான சூழ்நிலையை ஏற்படுத்துகின்றன. இதனால் தாழ்வு மனப்பான்மை இல்லாமல் சந்தோஷமாக வெளியில் சுற்றமுடிகிறது. பலர் இருக்கக் கூடிய இடத்தில் உங்களை தனித்தன்மை வாய்ந்தவராகக் காட்டுகிறது. தன்னம்பிக்கையுடன் செயற்பட முடிகிறது.

வெயில் காலத்தில் லேசான வாசனைத் திரவியங்களையும், குளிர்காலங்களில் அதிக வாசனை தரக்கூடிய திரவியங்களையும் பயன்படுத்தவேண்டும். இயற்கையான நறுமணப் பொருட்களில் மட்டுமின்றி, இரசாயனங்கள், ஒயில், அற்ககோல் போன்றவற்றில் இருந்தும் வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப்படுகின்றன.

உடலில் பூசிக்கொள்பவை, உடையில் பூசிக்கொள்பவை என இரண்டுவிதமான வாசனைத் திரவியங்கள் உள்ளன. அதில் உங்களுக்கு எது உகந்ததோ அதைத் தேர்ந்தெடுப்பது நல்லது. உடலில் பூசும் வகையிலான வாசனைத் திரவியங்களை பயன்படுத்தும்போது அலேர்ஜியை ஏற்படுத்தாத வாசனைத் திரவியங்களாக பார்த்து பயன்படுத்தவேண்டும். வாசனைத் திரவியங்கள் தயாரிக்கும் நாடுகளில் பிரபலமானது, பிரான்ஸ்தான்.



## லேடீஸ் ஸ்பெஷல்

பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

தலையில் சராசரியாக 1,20,000 முடிகள் இருக்கும். தினமும் சராசரியாக 100 முடிகள் உதிர்வது இயற்கை. அதற்கு மேல் முடி உதிர்ந்தால்தான் பிரச்சினை. கோடை நாட்களில் முடியின் வளர்ச்சி வேகமாகவும், குளிர்காலத்தில் மெதுவாகவும் இருக்கும்.

உடல் ஆரோக்கியம், மனநிலையைப் பொறுத்து கூந்தல் அடர்த்தியாகவும், அழகாகவும் இருக்கும். ஒரு முடி 25 தடவை உதிர்ந்து, பிறகு அதே இடத்தில் வளர்ந்தும்விடும். ஆனால், அதற்கு மேல் விழுந்தால் வளராது. மனஅழுத்தம், பதற்றம், தூசி, பரம்பரைவாகு, இரத்தச்சோகை, புரதச்சத்து குறைபாடு, ஹோர்மோன் கோளாறுகள், தூக்கமின்மை அல்லது வேறு ஏதாவது நோய்க் கான அறிகுறி போன்ற பல காரணங்களால் கொத்துக் கொத்தாகத் தலைமுடி உதிரும். சுத்தமின்மை, ஈரப்பதம், எண்ணெய்ப் பசை இல்லாமல்போனால், முடி வறண்டு உதிரும்.

* தலைக்கு ஒழுங்காக எண்ணெய் வைப்பது, தலை குளிப்பதற்கு ஒரு மணிநேரம் முன் எண்ணெய் வைத்து மசாஜ் செய்வதன்மூலம் முடி உதிர்வதைத் தடுக்கலாம்.

* ஒலிவ் எண்ணெய், தேங்காய் எண்ணெய் இரண்டையும் சேர்த்து இளஞ்சூடாக்கி, தலை யில் மயிர்க்கால்களில் தடவி விரல்களால் மசாஜ் செய்யவேண்டும். ஒரு துண்டை வெந்நீரில் நனைத்துப் பிழிந்து தலையில் நன்றாக இறுக்கிக் கட்டி, அரை மணிநேரத்திற்குப் பிறகு தலைக்குக் குளிக்கவும். தினமும் தொடர்ந்து ஒரு வாரம் செய்துவர, முடி உதிர்வைக் கட்டுப்படுத்தலாம். தலைக்குப் புத்துணர்வு கிடைப்பதுடன் முடி வளர்ச்சியையும் தூண்டும்.

* மாங்கொட்டையில் உள்ள ஓட்டை எடுத்து விட்டு, அப்படியே அரைத்துக்கொள்ளுங்கள். இதற்கு மேங்கோ பட்டர் என்று பெயர். இந்த பட்டர் ஒரு மேசைக்கரண்டியுடன், வேப்பம்பூ சேர்த்து அரைத்துக்கொள்ளலாம். இதனுடன் விளக்கெண்ணெய் சேர்த்து கலந்து தலைக்கு நன்றாக மசாஜ் செய்யுங்கள். பிறகு, கடலைமா, பயத்தமா, சீயக்காய் மூன்றையும் கலந்து தலைக்கு தேய்த்து அலசுங்கள். இது, முடி உதிர்வதைத் தடுத்து வளர்ச்சியைக் கூட்டும்.

* வெட்டிவேர் - 10 கிராம், சுருள் பட்டை - 100 கிராம், வெந்தயம் - 2 கரண்டி, விளாம் மர இலை - 50 கிராம் இவற்றைக் கால் லீற்றர் தேங்காய் எண்ணெயில் போட்டு, ஒரு வாரம் தொடர்ந்து வெயிலில் வைத்து வடிகட்டிக்கொள் ளுங்கள். இந்தத் தைலத்தை சிறிது தேங்காய் எண்ணெயில் கலந்து தினமும் தலைமுடி வேர்க்கால் முதல் நுனிவரை தடவுங்கள். முடி கொட்டுவது நிற்பதுடன் கருகருவென வளரும்.




# முடி உதிர்வை தடுக்கும் மசாஜ்

# முக வசீகர யோகா

மேலைநாடுகளில் முக வசீகர யோகா பிரபலமாகிவருகிறது. இதன் மூலம் முகத்தில் உள்ள சுருக்கங்கள் மறைகின்றன. 15 வருடம் இளமையாகத் தோன்றலாம். என்பது யோகா நிபுணர்களின் கருத்து. நமது முகத்தில் 57 தசைகள் இருக்கின்றன. முகத்தால், கேலிசெய்ய வலிப்பதுபோல, பல வேடிக்கைகளைச் செய்யவேண்டும். ஆனால் அதை முறைப்படுத்தி சரியாக செய்யவேண்டும் என்று சொல்கிறார் டேனியல் காலின்ஸ் என்ற பிரிட்டிஷ் யோகா ஆசிரியை.

இவர் ஒரு முறையை வகுத்துள்ளார். முகத்தை மசாஜ் செய்தல், கன்னத்தின் சதைகளை இழுத்தல், அனுமார் மாதிரி வாயை வைத்துக் கொள்ளல், வானத்தை நோக்கி முத்தம் கொடுத்தல், ஆந்தைபோல கண்களை வைத்துக்கொண்டு கை விரல்களால் கண் காட்டுதல், முகத்தில் சில இடங்களை அமுக்குதல் இப்படிப் பல போஸ்கள் உண்டு. இந்த முறையான பயிற்சியினால் கழுத்தில் உள்ள வளையங்கள் மறையும், முகத்திலுள்ள சுருக்கங்கள் பறந்துவிடும், தொய்ந்துபோன சதைகள் பொலிவுபெறும். முகத்தில் தேஜஸ் பெருகும் என்று ஆய்வாளர்களால் சொல்லப்படுகிறது.






# பெண்களுக்கு ஆண் நட்பு தேவையா?

பெண்ணுக்கு திருமணமாவதற்கு முன்பு ஒரு மாதிரியாகவும், திருமணமான பின்பு இன்னொரு மாதிரியாகவும் பார்க்கப்படுகிறது. திருமணமானாலும், திருமணமாகாவிட்டாலும் நட்பு எப்போதும் நட்புதான். அதில் ஒரு வித்தியாசமும் தெரிவதில்லை.

ஆனால் மற்றவர்களின் பார்வையில்தான் அது வித்தியாசமாகப்படுகிறது என்கிறார்கள், திருமணமான பெண்கள். வேர்க் பிரண்ட்ஷிப் என்பது புதிய விஷயம் அல்ல, பழைய காலத்திலும் ஒன்றாக வேலைசெய்யும் ஆண் பெண்களிடம் அந்த நட்பு இருக்கத்தான் செய்தது. ஆனால் அதைப் பற்றி வெளிப்படையாக பேசிக்கொள்ளமாட்டார்கள்.

இப்போது வெளிப்படையாக பேசும் சுதந்திரம் பெண்களுக்கு இருக்கிறது. வேலைக்காக வெளியே செல்லும் பெண்களுக்கு, உடன் வேலை செய்பவர்களுடன் நட்பு இருந்தே ஆகவேண்டும். வேலைபார்க்கும் இடத்திற்கு சென்றுவிட்டாலே ஆண்கள் மத்தியில்தான் இருந்தாகவேண்டும். பெரும்பகுதி நேரத்தை அங்குதான் செலவிடுகிறோம். சுகதுக்கம் அனைத்தையும் அங்கே அவர்களோடு பங்கிட்டுத்தான் ஆகவேண்டியதிருக்கிறது. திருமணம் என்பது ஆண் நட்பிற்கு தடையில்லை. நல்ல ஆண் நண்பர்கள் கிடைத்தால், அவர்கள் ஆலோசனைப்படி கல்யாண வாழ்க்கையையும் சிறப்பாக அமைத்துக்கொள்ளலாம். ஆண் - பெண் நட்பு பற்றி நான் மற்றவர்களைப்போல் மேலோட்டமாக மட்டும் பேசவிரும்புவதில்லை.

ஒரு பெண் பத்து நண்பர்களிடம் பழகுகிறாள் என்றால், யாராவது ஒருவரிடம் செக்ஸ்ரீதியான ஈர்ப்பு ஏற்படத்தான் செய்யும். ஒருவேளை அதுபோல் எதிரத் தரப்பில் அந்த ஆணுக்கும் ஏற்படும். அப்போதுதான் இருவருக்குள்ளும் சொல்லக்கூடிய, சொல்லமுடியாத சில மாற்றங்கள் ஏற்படும். காதல்வசப்படுவார்கள்.

இது இருவருக்கும் திருமணமாகவில்லை என்றால் சாதாரணமானதுதான். யாராவது ஒருவருக்கு திருமண-மாகி இருந்தாலோ அசாதாரணமாகிவிடுகிறது. பெண்கள், தோழிகளிடம் என்னவேண்டும் என்றாலும் பேசலாம் ஆண் நண்பர்களிடம் அவ்வாறெல்லாம் பேசமுடியாது.

**250/= பரிசு** வாரம் ஒரு **அதிர்ஷ்டசாலி**

பரிசுப் போட்டி இல :-472

**கேள்வி:** வாசனைத் திரவியங்கள் தயாரிக்கும் நாடுகளில் பிரபலமானது எது?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 08 .06. 2015

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 472
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

பரிசுப் போட்டி இல :- 470 இற்கான விடை :-
துளசி, புதினா இலைகளுடன் நீரைக் கொதிக்க வைத்து ஆவி பிடிக்கவேண்டும்

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :-
எம்.ஜெமில், மாஞ்சோலைச்சேனை, கிண்ணியா -03

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

472

பெயர் : ..................
முகவரி : ..................
..................
தே.அ. அட்டை இல : ..................
விடை : ..................
..................
கையொப்பம் : ..................



## வித்தியா கொலைக் குற்றவாளிகளுக்கு அதியுச்ச தண்டனை வேண்டும்

மொக்கன் கேட்கிறான்



மாகாண சபையில நாங்கள் வெண்டுட்டம் இனித் தமிழனை தமிழனே ஆளுவான். இனி அந்த மாதிரி ஆட்சி நடக்கப்போகுது எண்டு எல்லாரும் சொல்லிச்சினம். கூட்டமைப்பாரும் புழுகிச்சினம். நாங்களும் நம்பினம். ஆனால் இண்டைக்கு நடக்கிறது என்ன? தண்ணிப் பிரச்சினை, சட்ட ஒழுங்குப் பிரச்சினை எண்டு எல்லாப் பிரச்சினையும் பெருத்துக் கொண்டுவருகுது.

புங்குடுதீவில நடந்த விஷயம் எங்கட ஊர் உலகத்தில இனி எவருக்கும் நடக்கக்கூடாது எண்டு மொக்கன் சொல்லுறான். சங்கதியைக் கேட்ட நாள் தொடங்கி மொக்கி ஒரே ஒப்பாரி. சமையல் சாப்பாட்டிலும் அக்கறை இல்லை. மொக்கனுக்கும் 3 நாளா வயிறு காஞ்சுது. போனமுறைதான் மொக்கன் கதிர்காமத்துச் சிங்களச் சகோதரி பிரேமாவதியை பற்றிச் சொல்லியிருந்தன். அதோட எங்கட முதல் பெண் போராளி தியாகி சோபாவைப் பற்றியும் சொல்லியிருந்தன்.

இண்டைக்கு வித்தியாவின்ர துயரமான சாவு நடந்து முடிஞ்சு விட்டுது. இனித்தான் ஒரு முடியாத கதை ஒண்டு தொடங்கப் போகுது. அது தொடங்கிவிட்டுது. மொக்கன் ஒரு அளவான பருவமா இருக்கேக்க கச்சேரி சத்தியாக்கிரகத்துக்கு சனம் எழுச்சி கொண்டு பங்குபற்றிச்சுதுகள். அப்ப மொக்கனும் போனவன்தான். இண்டைக்கு 55 வருஷத்துக்குப் பிறகு அப்படிப்பட்ட ஒரு மக்கள் எழுச்சியை மொக்கன் பார்க்கிறான்.

மொக்கனுக்கு இப்ப வயசு போட்டுது. முந்தி எண்டால் இந்த அநியாயத்தை அறிஞ்ச உடன மொக்கன் வெட்டுக்கத்தியோட வெளிக்கிட்டிருப்பான். அந்த நாயளைப் பிடிச்சு மடக்கி பால் முத்திக் கொடூரம் செய்த தண்டுகளை எல்லாம் துண்டு துண்டா வெட்டிச் சீவி றோட்டில போட்டிருப்பான். மொக்கனுக்கு ஒரு அளவான வயசில வடமராட்சி கரவெட்டி சுடலை ஒண்டில ஊர்க்காமுகன் ஒருவன்ர ஆண் உடம்புத்தண்டு வெட்டப்பட்டுத் தனியாக் கிடந்தது. இண்டைக்கு மொக்கனுக்கு அந்த யோசினைதான் வருகுது. ஆனால் இப்ப யோசனை வந்துதான் என்ன? யாரும் தள்ளி விழுத்தினால் பிடிச்சு எழுப்பிறதுக்கு 2 பேர் தேவைப்படுகுது. மனசுக்குள்ள புழுங்கிக்கொண்டு பொருமிக்கொண்டு இருக்கவேண்டியதுதான். மொக்கியும் இவங்கள் புழுத்திச்சாவானுகள், பாழ்பட்டுப் போவானுகள் எண்டு இராப்பகலா திட்டிக்கொண்டே இருக்கிறாள். இதுக்குள்ள மொக்கனுக்கு மனசுக்குள்ள ஒரேயொரு ஆறுதல். ஆம்பிள, பொம்பிள, கிழடுகள், சிறுசுகள் எண்டு பேதம் இல்லாமல் சனம் எழுச்சிகண்டு நிக்குதுகள் எண்டதுதான்.

1972ஆம் ஆண்டு எங்கட கல்வியைக் கொடுக்கிறதுக்கெண்டு சிறிமா அரசாங்கம் தரப்படுத்தலை கொண்டு வரேக்க ஒரு மாணவர் எழுச்சி ஏற்பட்டது. அந்த எழுச்சிதான் போராளிப் பொடியங்களை உருவாக்கிச்சுது. அந்தப் பொடியங்கள் இருந்துதான் இயக்கத் தலைவர்மார் எல்லாம் வந்தவை. இண்டைக்கும் அந்த தலைவர்மார் சிலர் இருக்கினம்.

இப்ப இருக்கிற தலைமைகள் நல்லாப் பயன்படுத்தி உருப்படுத்தி எடுக்கவேணும். இதைத்தான் மொக்கன் இண்டைக்குக் கேட்கிறான். டக்ளஸ் தம்பிக்கும் இதில ஒரு பெரிய பங்கு இருக்கு. வித்தியாவின்ர விஷயத்தில கனபேற்ற வேஷம் வெளிச்சுப் போச்சு. வரப்போற எலெக்ஷனல முக்கியமான ஒரு வேட்பாளர் என்று கதை அடிபட்ட சட்டத்தரணி தமிழ்மாறன் எப்படிப்பட்டவர் எண்டதை ஊர் உலகம் அறிஞ்சிருக்குது. கடைகெட்ட காமுகன்களை எல்லாம் காப்பாத்த வெளிக்கிட்ட வெள்ளை வேட்டி கள்ளரையெல்லாம் சனம் நல்லாக் கண்டு கொண்டுதுகள். தமிழ்நாட்டில ஆச்சிரமத்தில வந்து சேர்ந்த அவலைப் பிள்ளைகளை கதறக் கதற கற்பழிச்சச் சீரழிச்ச கள்ளச்சாமி பிரேமானந்தாவை குருவாகக் கொண்ட வெள்ளைவேட்டி குங்குமப்பொட்டு விக்கி ஐயா போன்ற எல்லாரும் எப்படிப்பட்டவை எண்டதை சனம் இப்பத்தான் நல்லா விளங்கிக் கொண்டுதுகள். பாதகனுக்கு அடிவிழ கூடாது எண்டு கையை நீட்டித் தடுத்த விஜயகலா அம்மையாரைப் பற்றியும் எங்கட பொம்பிளையள் எல்லாருக்கும் இப்ப விளங்கீட்டுது. இனி எலக்ஷன் கேட்க வரட்டும் எண்டு சனம் காத்துக்கொண்டு இருக்குதுகள்.

இவனுகள்தான் எங்களுக்குத் தலைவர்மாரா என்று மொக்கனும் கேட்கிறான். மொக்கியும் கேட்கிறாள். கொடூரமாய் செத்துப் போனாள் வித்தியா. ஆனால் முள்ளிவாய்க்காலில் முடிஞ்சுபோச்சு எண்டு இருந்த எங்கட வாழ்க்கையில ஒரு எழுச்சியைத் தந்திட்டுப்போன வரலாற்றுத் தியாகியாய் என்றும் வித்தியா இருப்பாள். அவள் இண்டைக்குச் செத்துப் போனாள்.

உண்மைதான். ஆனால் எங்கட தமிழ்ச்சாதி சனம் இருக்கும்வரை அவள் வாழத்தான் போகிறாள். அப்பிடி இல்லையா? என்று மொக்கன் கேட்கிறான். "கற்பூரக் காட்டினிலே கனல் வந்து வீழ்ந்ததம்மா..."

**மொக்கன் இப்பவும் கேட்கிறான், இனியும் கேட்பான்.**

# பெண்கள் ஒடுக்கப்பட்டால் வன்புணர்ச்சி தொடருமா?



வன்புணர்ச்சி சம்பவங்களை சரியான பார்வையில் பார்க்க உதவும்விதமாக, திருமதி சொஹைலா அவர்களின் 1983ஆம் ஆண்டு கட்டுரையை ஏற்கனவே மொழிபெயர்த்து அளித்திருந்தேன். இதோ 2013 ஆண்டு கட்டுரையின் மொழிபெயர்ப்பு:

33 வருடங்களுக்கு முன்பாக, என் 17 வயதில் பம்பாயில் நான் வாழ்ந்து கொண்டிருந்தபோது, ஒரு கும்பலால் நான் வன்புணர்ச்சிக்கு ஆளாகி சாவின் விளிம்பை சந்தித்து வாழ வாய்ப்பு கொடுக்கப்பட்டேன். அதற்கு பிறகு, 3 வருடங்கள் கழித்து, வன்புணர்ச்சிக்கு ஆளானவர்களின் அமைதியை யும், வன்புணர்ச்சி பற்றி மக்களுக்கு இருந்த தவறாக கருத்துக்களையும் தகர்க்கவேண்டி, ஒரு பெண்ணிய இதழில் என் உண்மையான பெயரிலேயே, என்னுடைய அனுபவங்களை விவரித்து ஒரு தீவிரமான கட்டுரையை எழுதினேன். அந்த கட்டுரை பெண்கள் மத்தியிலும், என் குடும்பத்திலும் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது, ஆனால் துரதிர்ஷ்டவசமாக விரைவில் மறக்கப்பட்டுபோனது.

டெல்லியில் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டு இறந்துபோன இளம்பெண்ணுக்காக நடத்திய போராட்டங்களின் ஒரு பகுதியாக என்னுடைய அந்தக் கட்டுரையை யாரோ இணையத்தில் பதிவேற்றம் செய்ய, அது பலரை சென்ற டைந்தது. அப்போதிலிருந்து, எனக்கு ஆதரவு தந்து பலரும் மின்னஞ்சல் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

வன்புணர்ச்சியின் குறியீடாக இருப்பதென்பது எனக்கு சந்தோஷம் தரவில்லை. நான் ஒன்றும் இதில் வல்லுநர் கிடையாது, நான் வன்புணர்ச்சியால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரின் பிரதிநிதியும் இல்லை. மற்ற வன்புணர்ச்சிக்கு ஆளானவர்களாலும் செய்ய முடியாத ஒன்றை நான் செய்கிறேன் என்றால் அது, என் கதையை உங்களுக்கு தொடர்ந்து சொல்வதுதான்.

அந்த இரவில் வாழ நான் போராடியபோது, எதற்காக நான் போராடிக்கொண்டிருந்தேன் என்று எனக்கே சரியாய் தெரியாது என்றுதான் சொல்லவேண்டும். என் வீட்டுக்கு அருகில் இருந்த மலைக்கு நானும் என் நண்பனும் சென்றிருந்தோம், நான்கு ஆயுதம் வைத்திருந்த ஆண்கள் எங்களை பிடித்து, ஆள் அரவம் இல்லாத இடத்துக்கு ஏறவைத்து, என்னை அங்கு பல மணிநேரத்திற்கு வன்புணர்ச்சிக்கு ஆளாக்கி, எங்கள் இருவரையும் அடித்து துன்புறுத்தினர். எங்களை கொல்வதா?, வேண்டாமா? என்று அவர்களுக்குள் விவாதம்செய்து, கடைசியில் போகட்டும் என விட்டுவிட்டனர்.

17 வயதில் நான் ஒரு குழந்தைதான், வாழ்க்கை எனக்கு உயிர்பிழைக்க வாய்ப்பு அளித்தது. காயப்பட்டு, கடும் மனவேதனைக்கு உள்ளாகி, தட்டுத்தடுமாறி வீடுவந்து என் அன்பான குடும்பத்திடம் சேர்ந்தேன். அவர்கள் எனக்கு அளித்த முழுஆதரவுடன், இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன். என்னிடம் உண்மையான அன்புகொண்டவரை நான் கண்டுகொண்டேன், புத்தகங்கள் எழுதினேன், காட்டில் வாழும் ஒரு கங்காருவை பார்த்தேன், ரயில்களை நழுவவிட்டு பேருந்துகளை பிடித்தேன், ஒரு புத்திசாலியான குழந்தையை பெற்றெடுத்தேன், நூற்றாண்டு மாறியது, எனக்கு முதல் நரைமுடி தோன்றியது.

ஆனால் என்னைப்போல இவற்றை மற்ற பலர் அனுபவிக்கமுடியுமா என்று கேட்டால், அது முடியாது. எல்லாம் நன்றாக ஆகிக்கொண்டிருப்பதை அவர்களால் பார்க்க முடியாது.

ஆண்களின் புத்திசாலித்தனம் என்னவோ அவர்களின் பாலுறுப்பில்தான் இருக்கிறது என்ற கருத்தை நான் நிராகரிப்பதை போல என் பாலுறுப்பிலேயே என் நல்லொழுக்கம் குடி கொண்டிருக்கிறது என்ற கருத்தையும் நான் நிராகரிக்கிறேன். இந்த சமன்பாட்டிலிருந்து, கௌரவத்தை நீக்கிவிட்டாலும்கூட, வன்புணர்ச்சி என்பது கொடூரமானதே! ஏனெனில் அது ஓர் அந்தரங்கமான பயங்கரவாதம் ஒன்றும் சமுதாய பயங்கரவாதம் இல்லை. நம்மால் துன்புறுத்தப்பட்ட பெண்களுக்கு உண்மையில் என்ன வேண்டுமோ அவற்றை கொடுக்க முடியும், அதிர்ச்சியை தாங்கிக்கொள்ள அவர்களுக்கு தேவை நமது அன்பும் ஆதரவுமே! அவர்கள் எப்படி குற்ற உணர்வையும், அவமானத்தையும் உணரவேண்டும் என்ற வியாக்கியானங்கள் அல்ல!

நான் தாக்கப்பட்ட ஒரு வாரம் கழித்து, அருகிலுள்ள ஒரு புறநகர் பகுதியில் வன்புணர்ச்சிக்கு ஆளான ஒரு பெண்ணைப்பற்றி கேள்விப்பட்டேன். அவள் வீட்டுக்கு வந்தாள், சமையலறைக்குள் சென்றாள், தீக்குளித்து இறந்துபோனாள். என்னிடம் இந்த கதையை சொல்லியவர், அவளது கணவனின் கௌரவத்தை காப்பாற்ற அவள் இவ்வாறு செய்தாள் என்று அவளை மெச்சினார். கௌரவம் என்று அவர்கள் சொல்வது எனக்கு என்றென்றும் புரியாமல் இருப்பதற்கு, நான் என் பெற்றோர்களுக்கு நன்றிகூறுகிறேன்.


சட்டத்தால் வன்புணர்ச்சி கொள்பவர்களுக்கு தண்டனை அளிக்கமுடியும். ஆனால் வன்புணர்சசிக்கு ஆளானவருக்கு, இந்த சமுதாயமும், குடும்பங்களுமே அன்பும் ஆதரவும் அளிக்கமுடியும். எப்படியொரு பதின்வயது பெண், அவளது குடும்பத்தின் ஆதரவு இல்லாது அவளை வன்புணர்ச்சிக்கு ஆளாக்கியவர்கள்மீது வழக்கு தொடுக்க முடியும்? வன்புணர்ச்சிக்கு ஆளானதால், தன் மனைவி கொடூரமான துன்புறுத்தப்பட்டாள் என்பதனை காட்டிலும், அந்த கணவன் தனக்கு ஏற்பட்ட அவமானம் என்று கருதினால் எப்படி அந்த மனைவி தன்னை தாக்கியவர்களை சட்டத்திற்கு முன்நிறுத்த முடியும்?

நான் 17 வயதாக இருக்கும்போது, அவ்வாறு துன்புறுத்தப்பட்டதையே என் வாழ்வில் மிக கொடூரமான விஷயம் என்று கருதினேன். என் 49வது வயதில், அது தவறு என உணர்கிறேன்: மிகக்கொடூரமான விஷயம் என்று இப்போது எனக்கு தோன்றுவது என்னவென்றால், என் 11 வயது குழந்தை அவ்வாறு துன்புறுத்தப்பட்டால் என்ன ஆகும் என்பது. அதற்கு காரணம், என் குடும்ப கௌரவம் இல்லை, இந்த உலகத்தின்மேல் அவள்கொண்ட நம்பிக்கையை அவள் இழந்து போய்விடுவாளே என்பதுதான்.

நான் என் வாழ்க்கையை திரும்பிபார்த்தால், 17 வயதான எனக்கொன்றும் அதிகமான அன்பும், ஆதரவும் தேவைப்படவில்லை, என் பெற்றோர்களுக்கே அதிகமான அன்பும் ஆதரவும் தேவைப்பட்டது. இந்த உலகத்தின் மேல் நான்கொண்ட நம்பிக்கை சுக்குநூறாக உடைந்துபோய் கிடக்கையில், அங்கும் இங்கும் கிடந்த துண்டுகளை அவர்கள்தான் ஒன்றாக சேர்த்து எனக்கு நம்பிக்கையூட்டினார்கள்.

இங்குதான் நாம் செய்யவேண்டியவை நிறைய இருக்கின்றன. நம்மில் அடுத்த தலை முறையை உருவாக்குபவர்கள், தங்கள் குழந்தைகளை சுதந்திரமான, கண்ணியமான குடிமக்களாக இருக்க கற்றுத்தரவேண்டும். பெண்களை துன்புறுத்தும் ஆண்கள் தண்டனைக்கு உள்ளாவார்கள் என்று அவர்களுக்கு தெரிந்திருக்கவேண்டும்.

வன்புணர்ச்சி என்பது ஒன்றும், வானிலையைப் போல தவிர்க்கமுடியாதது அல்ல! ஒன்றுக்கும் உதவாத கௌரவம், நல்லொழுக்கம் ஆகியவற்றையும், பெண்கள்தான் அப்படி உடை அணிந்து, கவர்ச்சிகாட்டி ஆண்களை வன்புணர்ச்சி கொள்ளச்செய்கிறார்கள், இப்படி பெண்கள் நடந்துகொண்டால், ஆண்கள் என்ன செய்வார்கள், பாவம் என்பதுபோன்ற கருத்துக்களையும் தள்ளி வைத்துவிட்டு, வன்புணர்ச்சி சம்பவங்கள் நடப்பதற்கான பொறுப்பாளிகள் யார் என்று ஆராய்ந்தால், பெண்களை துன்புறுத்தும் அந்த குறிப்பிட்ட ஆண்களும், அவர்களை அவ்வாறு செய்ய விட்டுவிட்டு, நமக்கென்ன என்ற உணர்வில் வன்புணர்ச்சிக்கு ஆளானவரை கைகாட்டி பழிசுமத்தும் இந்த சமுதாயத்தில் வாழும் நாமுமே என்ற பதில் கிடைக்கும்.



**திருக்கணித பஞ்சாங்கக் கணிதர் கலாபூஷணம் சி.சிதம்பரநாதக் குருக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது 80ஆவது வயதில் காலமானார். அவரின் மறைவையொட்டி இவ் ஆக்கம் பிரசுரமாகிறது.**

# குருத்துவ மரபின் வழிகாட்டி

# சிவஸ்ரீ சிதம்பரநாதக் குருக்கள்

> **“தான் அறிந்த சோதிட நுட்பங்களை மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். இதற் கென வீட்டில் அவ்வப்போது இலவச சோதிட வகுப்புக் களை நடத்தினார். அவரது கிரியைகளின் போது சமஸ்கிருத மந்திரங் களை அறுத்து உறுத்துக் கூறுவார். இந்த மந்திரம் எதற்காகக் கூறப்படுகின்றது. கிரியையின் பலன் என்ன என்பதை அடியவர்களுக்குச் சொல்லியவண்ணம் இருப்பார்.”**

**திருக்கணித** பஞ்சாங்கக் கணிதர் கலாபூஷணம் சி.சிதம்பரநாதக் குருக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (24) அன்று அதிகாலை 5 மணியளவில் யாழ். போதனா மருத்துவமனையில் காலமானார். 18.12.1935 இல் பிறந்த இவருக்கு இறக்கும்போது வயது 80. இவ்வாண்டு பீமரத சாந்தி மற்றும் அமுவிழா என அவருக்கு விழா எடுத்து அழகுபார்க்கவேண்டும் என அவருடைய அன்பர்கள் ஆர்வப்பட்டிருந்தனர். ஆனால் விதியின் வலியை யாரறிவார்?

அவரது வாழ்க்கைப் பயணம் குறித்து நான் ஏற்கனவே எங்கள் சரசாலை வீரமாகாளி அம்மன் ஆலய கும்பாபிஷேக மலருக்காக எழுதிய கட்டுரையை (தகவல்கள் அவரிடம் நேரடியாகப் பெற்றவை) தற்போது ஒரு சில மாற்றங்களுடன் இங்கே பிரசுரிக்கின்றேன்.

### பிறப்பு

“மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்துக் காளி அன்னை மேல் மந்திரஞ் சொல்லி பூசிக்கும் குருமூர்த்தமாகத் திகழ்ந்தவர் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள். இந்தியாவின் கேரள மாநிலத்தில் உள்ள திருவிதாங்கூர் இவரது பிறப்பிடம். சிதம்பரஐயருக்கும் ஜானகி அம்மாளுக்கும் 18.12.1935இல் மகனாகப் பிறந்த இவர் சிறு வயதிலேயே திருக்கணித பஞ்சாங்கக் கணிதர் சி.சுப்பிரமணியக் குருக்களால் இங்கு அழைத்துவரப் பெற்றார்.

### கல்வி

இளமைக் கல்வியை கல்வயல் சண்முகானந்த வித்தியாலயத்திலும் தொடர்ந்து இடைநிலைக் கல்வியை மட்டுவில் மகா வித்தியாலயத்திலும் உயர்கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்றார். கற்கும் காலங்களில் கணிதத்துறையில் அதிக ஈடுபாடுகொண்டார். அந்தண மரபுக்கிணங்க 12.06.1948இல் இவரது உபநயனம் (பூணூல் சடங்கு) இடம்பெற்றது.

### இல்லறம்

வளரும் பயிரை முளையிலேயே தெரியுமன்றோ? குருக்கள் அவர்களின் திறமையையும் ஆற்றலையும் கண்டுணர்ந்த காளி கோவிலின் பிரதம குருவாகிய பொன்னுஸ்வாமிக் குருக்கள் தனது மகளான இராஜேஸ்வரி அம்மாவை 18.05.1956இல் திருமணம் செய்து கொடுத்தார். தொடர்ந்து 18.04.1962 இல் ஆச்சார்ய அபிஷேகம் (குருப்பட்டாபிஷேகம்) செய்துவைத்தார். சரசாலைக் காளி கோவிலின் பூசைப் பொறுப்புக்களையும் வழங்கினார். 1962ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்பாளின் மெய்தீண்டிப் பக்திபூர்வமாகப் பூசைப் பணிகளை ஆரம்பித்தார்.

குருக்கள் தம்பதியர் இல்லற வாழ்வை ஓம்பி ஆறு ஆண் குழந்தைகளையும் இரு பெண் குழந்தைகளையும் பெற்றெடுத்தனர். இவர்களுள் சி.ஜெகதீஸ்வரசர்மா கொழும்பு திருக்கணித நிலைய அதிபராகவும், சண்முகானந்தசர்மா சாவகச்சேரி இந்துக் கல்லூரியில். விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராகவும் ஆங்கிலத்துறை விரிவுரையாளர் ஸ்ரீதரசர்மா அமெரிக்காவிலும் கிருபாகரக்குருக்கள் குருத்துவப் பணிகளையும் வாகீஸ்வரசர்மா கணினித் தொழிநுட்பவியலாளராகவும் குமரேஸ்வர சர்மா குருத்துவப் பணிகளையும் மேற்கொள்கின்றனர். மகள் மனோகரி சபாநாதசர்மா ஜேர்மனியில்* வசிக்கின்றார். சியாமளா என்றொரு மகள் இளவயதில் அமரராகிவிட்டார்.

### குருத்துவம்

குருக்கள் அவர்கள் கல்வி கற்கும் காலத்திலேயே பஞ்சாங்க கணிதமும் பயின்றுவந்தார். 19.08.1970 இல் திருக்கணித பஞ்சாங்கக் கணிதராக விளங்கிய சி.சுப்பிரமணிய ஐயர் சிவபதமடையவே அந்தப் பொறுப்பு சிதம்பரநாதக் குருக்களிடம் சேர்ந்தது. இறக்கும் காலம்வரை கணினியை இயக்கிப் பஞ்சாங்கக் கணிப்புக்களை மேற்கொள்ளும் இளைஞனாகவே குருக்களை நான் தரிசித்தேன்.

விவாகம், புதுமனைப் பிரவேசம் முதலிய மங்கள காரியங்களையும் அந்தியேட்டி முதலிய கருமங்களையும் குருக்கள் மூலம் நிறைவேற்றுவதில் தென்மராட்சி மக்கள் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தனர். அவரது காலத்தில் பதினான்கு மஹா கும்பாபிஷேகங்களை நிறைவேற்றிய பேற்றினைக் கொண்டுள்ளார்.

சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி (1985, 1999, 2013), மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் (1984, 1998, 2010), சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் (1969, 1987), கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் (1988), புலோலி ஆலடிப் பிள்ளையார் (1991), குமரபுரம் முருகன் கோவில் (1993), கல்வயல் புலுட்டையன் பிள்ளையார் (1997), வவுனியா சிந்தாமணி விநாயகர் (1989), வட்டக்கச்சி முருகன் (1996) ஆகிய ஆலயங்களிலே பிரதிஷ்டா பிரதம குருவாகச் செயற்பட்டு மஹா கும்பாபிஷேகங்களை நிறைவேற்றினார்.

மட்டுவில் வேரற்கேணி கந்தசுவாமி கோவில், கைதடி கயற்றிசிட்டி கந்தசுவாமி கோவில், உசன் கந்தசுவாமி கோவில் ஆகிய ஆலயங்களின் மகோற்சவ குருவாகச் செயற்பட்டுள்ளார். இன்றும் மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார், சரசாலை ஸ்ரீ வீரமாகாளி கல்வயல் ஆயிலடி விநாயகர் ஆகிய ஆலயங் களின் பிரதம மஹோற்சவக் குருவாக மிக நீண்டகாலமாகச் செயற்பட்டார்.

### திருப்பணிகள் நிறைவேற...

சரசாலை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயத்தைத் தனது சொந்தக் கோவிலாகக் கருதிப் பணிகளை மேற்கொண்டார். இவரது காலத்தில் ஆலயத் திருப்பணிகள் உயர்நிலை பெற்றன. அம்பிகையை நாடும் அடியவர் திருக்கூட்டமும் பெருகியது. பிள்ளையார் கோவில், வசந்த மண்டபம் வைரவர் கோவில், யாகசாலை, மடைப்பள்ளி, களஞ்சியம், ஆலயச் சுற்றுக் கொட்டகை, நிலவேலை, தண்ணீர் வசதி, மின்சார வசதி, குருக்கள் வசிப்பிடம், கோபுரம், வில்மண்டபம் எனப் பல திருப்பணிகள் நிறைவேற உபயகாரரைத் தேர்ந்தும் ஆலோசனைகள் நல்கியும் உதவினார். திருப்பணி வேலைகளில் தானும் பங்கேற்றார்.

### நூல்கள் ஆக்கம்

தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் என மூன்று மொழிகளில் ஆளுமை கொண்டவராதலால் பல நூல்களை ஆக்கி வெளியிட்டுள்ளார். இதற்கு வசதியாக திருக்கணித பதிப்பகத் தையும் நிறுவினார். ஸ்நபன மஞ்சரி என்ற சமஸ்கிருத நூலையும் சோதிடம் கற்போம், திருமணப் பொருத்தம் என்ற தமிழ் நூல் களையும் வெளியிட்டுள்ளார். திருக்கணித பஞ்சாங்கத்தைப் புலம்பெயர் தேசங்களுக்கு ஏற்ற நேரக் கணிப்பில் வெளியிடுகின்றார். சோதிட மலர் என்ற மாத சஞ்சிகையையும் வெளியிட்டார்.

### வேதாகம சோதிட அறிவு மக்கள் மத்தியில் பரவவேண்டும் என்ற வேட்கை

தான் அறிந்த சோதிட நுட்பங்களை மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். இதற்கென வீட்டில் அவ்வப்போது இலவச சோதிட வகுப்புக் களை நடத்தினார். அவரது கிரியை களின் போது சமஸ்கிருத மந்திரங் களை அறுத்து உறுத்துக் கூறுவார். இந்த மந்திரம் எதற்காகக் கூறப்படு கின்றது. கிரியையின் பலன் என்ன என்பதை அடியவர்களுக்குச் சொல்லிய வண்ணம் இருப்பார். தமிழகத்தில் சாதாரண மக்களும் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம பாராயணம் செய்கின்றனர். காளி கோவிலிலும் இந்நிலைமை ஏற்படவேண்டும் என முயன்றார்.

1990ஆம் ஆண்டில் மேற்கொண்ட இம்முயற்சியில் கணிசமான அளவு வெற்றியும் கிட்டியது. நான் உட்படப் பலர் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம ஜெபம் மேற்கொள்ளும் பாக்கியத்தைப்பெற்றோம்.

### கௌரவப் பட்டங்கள்

குருக்கள் அவர்களின் ஆளுமைத் திறத்தைக் கண்டு நயந்தவர்கள் கௌரவ பட்டங்கள் வழங்கி அவரைக் கௌரவித்துள்ளனர். மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவிலின் சார்பில் வேதாகம சோதிட பூஷணம் என்ற பட்டம் பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்களால் வழங்கப்பட்டது. இதேபோல் சிவாச்சார்ய திலகம் என்ற பட்டம் சரசாலை வீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் சார்பில் பேராசிரியர் நா.சுப்பிரமணிய ஐயரால் வழங்கப்பட்டது. வட்டக்கச்சி முருகன் கோவிலால் சிவாகம பூஷணம் என்ற பட்டமும் லண்டன் சைவத் திருக்கோவில் ஒன்றியத்தால் வேதாகம வித்தகர் என்ற பட்டமும் வழங்கப்பட்டன. இலங்கை அரசு சோதிடத் துறை சார்ந்து கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவித்தது.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் குருக்கள் மீது நிறைந்த மதிப்பு வைத்திருந்தார். அவரது சோதிடக் கணிப்புக்களின் நம்பகத்தன்மையால் ஈர்க்கப்பட்ட அவர் துர்க்கை அம்மன் கோவில் செயற்பாடுகளை திருக்கணித பஞ்சாங்கத்தின் அடிப்படையில் முன்னெடுத்தார்.

குருக்களின் சோதிட அறிவு குறித்து என்னுடன் ஒரு சந்தர்ப் பத்தில் நயந்து பேசிய கலாநிதி ஆறு.திருமுருகன் 1992இல் தனது சாதகத்தைச் சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் குருக்களிடம் திருமுருகனன் சாதகம் என அறியாதவாறு காட்டிய தாகவும் அப்போது இச்சாதகம் மிகவும் அருமை வாய்ந்தது. இவர் ஆன்மீக மற்றும் சமூகப் பணிகளில் உச்சநிலை அடையக்கூடியவர் என்று அன்றே குருக்கள் உரைத்தார் எனவும் என்னிடம் குறிப்பிட்டார். குருக்களின் பணிகளை விதந்து தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலும் சில ஆண்டுகளுக்கு முன்னர் குருக்களைக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

“அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்”

என்ற வள்ளுவத்தைப் பொருத்திப் பார்க்கத்தக்க வகையில் வாழ்ந்த சிதம்பரநாதக் குருக்கள் தென்மராட்சி யின் ஆன்மீகம்சார்ந்த நெறிகளில் இரண்டறக் கலந்தவர். அவரது நாமம் என்றும் இம்மண்ணில் வாழும்.

**– ச.லலீசன் –**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

# உடல் எடையை அதிகரிக்கும் காரணிகள்



**படுக்கை** அறையில் விளக்குகள் எரிவது, தொலைக்காட்சி பார்த்துக்கொண்டே தூங்கிப் போவது மற்றும் செல்போன் பயன்படுத்துவது உடல் எடையை அதிகரிக்கும் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

நெதர்லாந்து நாட்டை சேர்ந்த லைடன் பல்கலைக்கழக மருத்துவ மையம் சமீபத்தில் நடத்திய ஆய்வு முடிவுகள் அறிவியல் இதழ் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளது.

புதிய ஆய்வின்படி நல்ல இருட்டான அறையில் தூங்காமல், செயற்கை ஒளியிருக்கும் அறையில் தூங்குவது, தொலைக்காட்சி பார்த்துக்கொண்டே தூங்கிப்போவது மற்றும் செல்போன் பயன்படுத்துவது போன்றவற்றால் உடலின் இயல்பான செயற்பாடு மற்றும் கலோரிகளை எரிக்கும் பழுப்பு கொழுப்பு செல்களின் செயற்பாடுகள் அதிகமாக பாதிக்கப்படுவதாக தெரியவந்துள்ளது. இதன் காரணமாக உடல் எடை அதிகரிப்பதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் மக்கள் சராசரியாக வாரத்தில் 20 மணிநேரம் இணையத்தில் செலவிடுவதாகவும், இதுவே 16 முதல் 24 வயதுக்கு உட்பட்டவர்கள் 27 மணிநேரம் இணையத்தில் செலவிடுவதாக தெரியவந்துள்ளது.

# கருத்தரித்தலை தடுக்கும் அதிநவீன சிப்

கருத்தரித்தலை தடுக்கக்கூடியதும், ரிமோர்ட்கொன்ரோல் மூலம் இயக்கக்கூடியதுமான அதிநவீன சிப் உருவாக்கப்பட்டுள்ளது.


கடந்த 16 ஆண்டு கால முயற்சியிலும், மைக்ரோசொப்ட் நிறுவுனர் பில்ஹேட்ஸ்ஸின் ஆதரவுடனும் இச் சிப் உருவாக்கப்பட்டுள்ளது.

இதனை பிட்டம், மேல் கை, அடி வயிற்றின் தோல் போன்ற இடங்களில் பொருத்தமுடியும்.

இதன்மூலம் வெளியேற்றப்படும் விசேட ஹோர்மோன் கருத்தரித்தலை கட்டுப்படுத்துகின்றது.

எனினும் பெண்கள் தமக்கு தேவையான நேரத்தில் வயர்லெஸ் தொழில்நுட்பம் மூலம் இதனை செயல் இழக்கச் செய்யவோ அல்லது மீண்டும் செயற்படுத்த செய்யவோ முடியும்.

இந்த சிப் 2018 ஆம் ஆண்டில் சந்தைக்கு வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஒரு நாளைக்கு எவ்வளவு உப்பு தேவை?



"உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்னும் பழமொழியைச் சொல்லிச் சொல்லி, சாப்பிடும் எல்லாப் பண்டங்களிலும் உப்பைச் சேர்த்துவிடுகிறோம். ஆனால், "உப்பைத் தின்றவன் தண்ணிய குடிப்பான் தப்பை செய்தவன் தண்டனை பெறுவான்" என்றொரு பழமொழியும் இருக்கிறது. உடலில் உப்பின் அளவு கொஞ்சம் அதிகரித்தாலும் பிரச்சினைதான்.

அன்றாடம் நாம் சாப்பிடும் உணவுப் பொருட்கள், காய்கறிகள், பழங்கள், கீரைகள் எல்லாவற்றிலுமே இயற்கையான உப்பு வகையில் ஒன்றான சோடியம் குளோரைட் (சமையல் உப்பு) கலந்திருக்கிறது. இது போதாதென்று ரெடிமேட் தோசை மா போன்றவற்றில் பேக்கிங் சோடாவைப் போடுகிறார்கள். பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளான பர்கர், பீட்ஸா போன்றவற்றிலும் அதிக உப்பைச் சேர்க்கிறார்கள். இது உடலுக்குத் தீங்கை விளைவிக்கும்.

மோனோ சோடியம் குளூட்டமேட், சோடியம் நைட்ரேட், சோடியம் சோக்கரின், சோடியம் பைகார்பனேட், சோடியம் பென்சாயேட் போன்றவை உப்பின் பல வகைகள். இதில் ஏதாவது ஒன்று, நாம் சாப்பிடும் உணவுப் பொருட்களிலும் சோஸ்களிலும் நிரம்ப இருக்கிறது.

அதிக உப்பைக் கொண்ட வடாம், வத்தல், மோர் மிளகாய் போன்றவற்றைத் தவிர்ப்பது நல்லது. அயோடின் கலந்த தூள் உப்பைவிட, சாப்பாட்டில் கல் உப்பைப் பயன்படுத்துவதே சிறந்தது.






# கசிவு

எம்.ரிஷான் ஷெரீப்

“நாயோட வாலுல புடிச்சுக் கட்டி வுட்டாப்புலல்ல இந்தப் பய நாலுதெரு சுத்தறான். எதுக்குங்குறே. ஒண்ணுத் துக்கும் பிரயோசனமில்ல. சும்மா சும்மா தெரு அளந்துட்டுத் திரியுறான். நீ ஒருக்காப் போய் தேடிப் பார்த்துட்டு வாயேன் ராசா. காலைல வெளிய இறங்கினவன்.

பசி தாங்கமாட்டானே புள்ள “வழமையாக சோறு வடித்து, பானையை இறக்கி வைக்கும்போதே பசியெனக் கத்திக் கொண்டு வந்து நிற்பவனை இன்னும் காணவில்லை என்று புலம்பிக் கொண்டிருந்த வள்ளித்தாயி, வாசலோடு ஒட்டிய உள்தரையில் அமர்ந்திருந்தாள். அவள் ஏவிய மூத்தவன், அவளது பேச்சே தன் காதுகளில் விழாததுபோல சாக்குக் கட்டிலில் படுத்து, கூரைத் தகரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். கண்ணுக்கெட்டிய வரை வெளியே எட்டி தெருவைப் பார்த்தாள்.

எப்பொழுதும் பழைய சைக்கிள் டயரை உருட்டியபடியோ, கூட்டாளி களோடு விளையாடியபடியோ அத் தெருவே பழியெனக் கிடப்பவனை இன்று காணவில்லை. அவளது குடிசையின் தகரக் கூரையிலும் சத்தத்தோடு விழ ஆரம்பித்தது. அவள் தெருவிலிருந்து தூரத்தே தெரிந்த மலைத் தொடருக்கு பார்வையை நகர்த்தினாள்.

மூத்தவன் எதையும் காது கொடுத்துக் கேட்கவில்லை. காதில் விழுந்ததுதான். ஆனால் சொல்லப்படுவது தனக்கில்லையென்பது போல அமைதியாக இருந்தான். ஏதோ இவள் மட்டும் தன்னைச் சுற்றியிருக்கும் நான்கு சுவர்களுக்கும் கேட்கும்படி புலம்பிக் கொண்டிருந்தாள். தகரக் கூரையின் ஓட்டைகளிலிருந்து துளித்துளியாக சொட்டிய நீர் களிமண் பூசிய தரையில் விழுந்து, விழுந்த இடத்தைக் குழியாக்கியது. விட்டு விட்டுப் பெய்யும் மழையின் காரணமாக நிலமே ஈரலித்துக் கிடந்தது. மூலையில் அடுக்கியிருந்த சில மண்சட்டிகளைக் கொண்டுவந்து கூரையிலிருந்து தண்ணீர் ஒழுகும் இடங்களைப் பார்த்துத் தரையில் வைத்தவள், அப்படியே சாக்குக் கட்டிலருகே போய் மூத்தவனை தோளில் பிடித்து உசுப்பிவிட்டாள்.

“ராசா... மின்னல் வெட்டுது..இடி விழுது... சின்னவன் எங்கிட்டிருக்கானோ.. பயப்புடுவான்... போய்ப் பார்த்துட்டு வாயேண்டா” என்றாள் திரும்பவும்.

“சும்மா போம்மா... நேத்துத்தான் பொறந்தாம் பாரு மடியில வச்சுப் பாத்துக்கிடறதுக்கு. பத்து வயசாச்சு. நாலு ஆடு கண்டுகளப் புடிச்சுக் குடுத்து மேச்சுட்டு வான்னு அனுப்பியிருந்தாலும் அர வயித்துக்காவது தேறும். என்னவுட்டு தேடச் சொல்றியா?”

அவன் சலிப்போடு கத்திக் கொண்டு அடுத்த பக்கம் திரும்பி ஒருக்களித்துப் படுத்துக் கொண்டான். திடீரென நினைவு வந்தவன் போலவும், குளிரெடுத்தவன் போலவும் திரும்பவும் மல்லாந்து படுத்து, உடுத்திருந்த சாரத்தை அவிழ்த்து கழுத்துவரை இழுத்துப் போர்த்திக் கொண்டு, திரும்பவும் அடுத்த பக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டான். இனி அவனை எழுப்பமுடியாது என உணர்ந்தவள், மீண்டும் வாசலுக்கு வந்து தெருவை எட்டிப் பார்த்தாள். முகத்தில் மழைச் சாரலடித்தது. அது அவளை உசுப்பிவிட்டது.

“ஆமா. சின்னவனை வேலைக் கனுப்பித்தா இந்தக் கெழவி பட்டும், மூக்குத்தியுமாப் போட்டு மினுக்கிக்கப் போறேம் பாரு. அமர்ந்தபடி குரலெழுப்பிச் சொன்னாள் வள்ளித்தாயி.

“க்கும். தெருவுல போற ஆனக்கிச் சாப்பாடு கொடுக்குறது இருக்கட்டும்... முதல்ல வளக்குற பூனக்கி மீதியைக் கொடுங்குற கதையா, இருக்குற ஒரு பட்டறக்கே அப்பவோ இப்பவோன்னுதா வேலை வருது. எல்லாத்துக்கும் மெஷினுன்னு வந்தபொறவு எவன் வாறான் அருவா செய்ய கோடரி செய்ய மம்பட்டி செய்யன்னு. இதுல இவனயும் கூட்டிட்டுப் போய் வெட்டியா சோறுபோடச் சொல்றியா?”

இதுவரையிலும் நிலத்திலமர்ந்து, சுவரின் மூலையில் சாய்ந்து, கிழிந்த துணியொன்றைத் தைத்துக் கொண்டிருந்த மருமகள் முதன்முதலாக வாயைத் திறந்து சொன்னதைக் கேட்டதும் ஆவேசம் வந்தவளைப் போலானாள் அவள்.

“எண்ட ராசா எங்கிட்டும் போய்ச் சோத்துக்குக் கெஞ்சப் போறதில்ல. இந்தக் கெழவிக்கு ஒடம்பு குளுந்து போகாம இருக்குற மட்டும் அவன நா பாத்துப்பே. பெத்தவளுக்கு வளக்கத் தெரியாது? வக்கப் போருல மழக்கி மொளச்ச காளானப்போல போகையில், விசயம் கேள்விப்பட்டு விசாரிப்பவர்களிடமெல்லாம் வசியம் வைத்து, மருந்து கொடுத்து தன் மகனை மயக்கிவிட்டதாக மருமகளைக் குறைசொல்லி திட்டியபடியே இருந்தாள்.

“ராசா மகளோ இல்லயோ... எங்க அப்பன் என்ன ராசா மக போலத்தான் வளத்தாரு... செறப்பாத்தானே இருந்தேன்...மகராசா ஒரு நாளாச்சும் நேத்து வந்தவளுங்கெல்லாம் அவனுக்குப் பொங்கிப்போடத் தேவல்ல. நடு முதுகுல வந்த கட்டி மாதிரி சொமையா நெனக்கத் தேவயுமில்ல. நா எதுக்கிருக்கே. நா ஆக்கிப் போடுறே.. நா பார்த்துப்பே”

இதைக் கேட்டதும் மருமகளுக்கு இப்பொழுது கோபம் வந்துவிட்டது. தைத்துக்கொண்டிருந்த துணியைச் சுருட்டி ஒரு மூலைக்கு எறிந்தாள். குளித்த தலை காய, அவிழ்த்துப்போட்டிருந்த கூந்தலைக் கொண்டையாகக் கட்டிக் கொண்டு, வலுத்த மழை தகரக்கூரையில் எழுப்பும் சத்தத்தை விட அதிகமான சத்தத்தோடு அவளும் குரலுயர்த்தினாள். அவளுக்குக் கீச்சுக் குரல். தகரத்தில் கம்பியால் கீறுவதைப் போல அது மாறியிருந்தது இப்பொழுது.

“நேத்து வந்தவளாம்ல.. சூடு சொரணயிருக்குறவங்க இதுக்கு மேல இங்க இருப்பானுங்களா? இதுக்குத்தா நா இதுககிட்ட படிச்சுப் படிச்சுச் சொன்னே. நம்மள மதிக்காதவோ வூட்டுக்கு எதுக்குப் போவணும்னு... கேட்டுச்சா இது? ஏதோ வூட்டுல மூட்ட மூட்டயா பொதையல் கட்டி வச்சிருக்காப்புலல்ல வூட்டுக்குப் போவணும்னு அடம்புடிச்சுக் கூட்டி வந்துச்சு?”

அவளுக்கு தன் மாமியார் வீட்டுக்கு வர விருப்பமே இருக்கவில்லை. ஊரில் கல்யாண காலம் இது. சமையல், கூலி வேலைகளுக்குப் போனால் கொஞ்சம் பணம் சம்பாதித்துக் கொள்ளலாம். உடுத்துக் கொள்ளப் பழந்துணிகளும் கிடைக்கும். போதாதற்கு மாமியார் வீட்டுக்கு மூன்று பஸ்கள் மாறி மாறி வரவேண்டும். அவன் எங்கே கோபித்துக் கொண்டு தனியே போய்விடுவானோ என்ற பயத்தில் அவன் தன் அம்மா வீட்டுக்குக் கூப்பிடும்போதெல்லாம் முடியாதென அடம் பிடித்துச் சண்டை போட்டுவிட்டுப் பின்னர் அவனுடன் சேர்ந்து வந்துவிடுவாள்.

நகரத்தில் இரும்புப் பட்டறை வேலைக்கெனப் போனவன் ஒரு நாள் அவளைக் கோயிலில் வைத்துத் தாலி கட்டிக் கையோடு கூட்டிக்கொண்டு வந்து நின்றான். வள்ளித்தாயி வாசலருகே இருந்து முதலில் கத்திப் பார்த்தாள். அவனை எப்படியெல்லாம் தான் கஸ்டப்பட்டு வளர்த்த கதையைச் சொல்லி, ஒப்பாரி வைத்து அழுதாள். அக்கம்பக்கத்து வீட்டு ஆட்களெல்லாம் வந்து சமாதானம் செய்த பிறகுதான் அவர்களை உள்ளே விட்டாள்.

முதல் சில நாட்களுக்கு மகனையோ, மருமகளையோ ஏறெடுத்தும் பார்க்க வில்லை. மூலைக்கு மூலை அமர்ந்து புலம்பி அழுதுகொண்டிருந்தாள். வீடுகளுக்கு பாத்திரம் கழுவப் என்னப் பட்டினியில போட்டிருக்குமா... இப்படி எங்கிட்டோ வந்து கதறத்தான் விட்டிருக்குமா... செருப்புக்கு அளவா கால, வெட்டிக்கிடற மாரி வெட்டிக்கிட்டு ஓடிவந்து கானல் தண்ணிய நம்பிப் பாழுங்கெணத்துக்குள்ள குதிச்ச கதயாப் போச்சு யேன் வாழ்க்க”

“பெத்தவன் மேல அம்புட்டுப் பாசமிருக்குறவ இப்படி எதுக்கு எவன் கூடவாவது ஓடியாரணும்...? ஓலப்பாயில நாய் ஒண்ணுக்கடிச்ச மாதிரி சலசலன்னு பொலம்பிட்டுக் கெடக்கணும்...? அவன வுட்டுப் போயிட வேண்டியதுதான்?”

இப்பொழுது வள்ளித்தாயி குரலுயர்த்த, தனக்கு இருபுறத்திலிருந்தும் ஆதர வில்லை என்பதை உணர்ந்தவள் வாய்க்குள் ஏதேதோ முணுமுணுத்தபடி வெடித்து அழுதாள். அவள் இவனுடன் வந்ததிலிருந்து, அவளது வீட்டில் அவளைச் சேர்க்கவில்லை. திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அவளுக்கு மூத்தவளும் இளையவள்களுமாக வீட்டில் ஐந்து பேர். அம்மா இல்லை. அப்பாவும் மற்றவர்களும் கூலி வேலைகளுக்குப் போய் எப்படியோ சீவனம் நடத்திக் கொண்டுபோக, இவளால் ஏற்பட்ட அவப்பெயர் மற்றப் பெண்களின் திருமணத்திற்குப் பெறும் குறுக்கீடாக இருந்தது. அவனது அம்மாவுடன் சண்டை போட்டுக்கொண்டு போன பிறகு அவளிடம் இருந்த தோடுகளையும் வளையலையும் விற்று, அவளது ஊரில் வாடகைக்கு ஒரு சிறிய வீடுதேடிக் குடியேறியிருந்தார்கள்.

“வுட்டுப் போறதுக்கா நம்பிக் கழுத்த நீட்டினேன்? எத்தன சொம வந்தாலும் கண்ண மூடுற காலம் மட்டும் ஒண்ணாச் சேந்திருப்போமுன்னுதான் இந்தக் கழுத மஞ்சக் கெழங்கச் சொமந்து வாக்கப்பட்டுச்சு. பாத்துக்க. பெத்த பயலுக்கு பொஞ்சாதியக் காலம் பூராம் நல்லபடியா வச்சுக் கஞ்சி ஊத்துன்னு சொல்லிக் குடுக்காம கெழவி என்னெல்லாம் சொல்லிக் குடுக்குது. சோத்துக்கு வக்கத்த க்குடும்பம்னாலும் கெட்டது சொல்லிக் குடுக்க மட்டும் நல்லாத் தெரிஞ்சிருக்கு பூராத்துக்கும்”

அவள் விசும்பிக்கொண்டே இருந்தாள். அமர்ந்திருந்த இடத்திலேயே காலை நீட்டிப் படுத்துக்கொண்டாள். ஈரலித்த மண் தரை குளிர்ந்திருந்தது. உடல் சிலிர்த்தது.

க்கும்.. செவப்புத் தோலுக்கு மயங்கினானோ... முழிக்குற முழிக்கு, ஆட்டுற நடக்கி மயங்கினானோ... நோய்காரின்னு தெரியாம கட்டிக்கிட்டு வந்து நின்னவன் எம் பேச்சக் கேட்டானா? உண்டதுமில்ல..கொண்டதுமில்ல... பூவச்சுக் கட்டக் கொண்டயுமில்ல... நாலு சுத்து சுத்திக்கட்ட சேலயுமில்லங்குற கதயா உருப்படியில்லாத மலட்டுச் சிறுக்கியக் கட்டிக் கூட்டிக்கிட்டு வந்தான். அப்பவே அத்துட்டிருந்தா நாறச் சிறுக்கி மக இப்படிப் பழிபோட்டுப் பேசுவாளா?”

நான்கு வருடங்களுக்கு மேலாகியும் தனக்குக் குழந்தையில்லையென்ற கவலை உள்ளூர ஊறிப் போயிருந்தது அவளுக்குள். அந்தப் புண்ணைக் கிளறி விட்டது வள்ளித்தாயியின் பேச்சு. வலிக்க வலிக்கக் கீறப்படும் ரணம். போகுமிடமெல்லாம் அன்பான விசாரிப் புக்கள் போலப் புறப்படும் முட்கள். புண்ணைக் கீறி, மேலும் மேலும் ரணமாக்கி, பெரும் வலியில் வெளிப்படும் அவளது அழுகையைக் காணும் உள்ளூர ஆவலுடனான விசாரணை அது. அவளுக்குப் பின்னால் ஊர் முழுதும் அவளைப் பற்றிப் பேசப்படும் பேச்சுக்கள் குறித்து அவள் அறிந்திருந்தாள். கணவனிடம் சொல்லிப் பல தடவை அழுதிருக்கிறாள்.

“ந்த... ஒண்ணுமில்லாத விசயத் துக்குத் தொண தொணன்னுக்கிட்டு.. செத்த கண்ணசர வுடுறீங்களா...முட்ட போட்ட கோழிங்க மாரி கொக்கரிச்சுக் கிட்டு... மனுச இருப்பானா இந்த வூட்டுல”

மழை விட்டிருந்தது. கட்டிலில் இருந்து லேசாகக் கழுத்தை உயர்த்தியவன் இருவரையும் பார்த்துக் கத்தினான். அவனது சத்தம் பலமாக இருந்தது. இடி இடிப்பதைப்போல. பெரிய மரமொன்று உடைந்து விழுவதைப் போல. வாசலருகே அமர்ந்திருந்த வள்ளித்தாயியின் குரல் அடங்கியது. ஏதோ வாய்க்குள் முணுமுணுத்தாள். மருமகளது விசும்பல் தொடர்ந்தும் கேட்டது.

மழைக்குச் சாத்தியிருந்த கதவைத் தள்ளிக்கொண்டு அவள் இவ்வளவு நேரமும் தேடிக் கொண்டிருந்த அவளது இளைய மகன் “அம்மா..பசிக்குது” எனக் கத்திக் கொண்டு உள்ளே வரும்வரை அந்த நிலையே நீடித்தது. பின்னங்கால் களில் பொட்டுப் பொட்டாய்ச் சேறு. தலை, உடலெல்லாம் மழை ஈரம். கைகளில் நெளிந்த சைக்கிள் டயர். ஒரு நீளக் குச்சி. அவனைக் கண்டதும் அவ்வளவு நேரமும் புகைந்துகொண்டிருந்த தணல் பற்றியெரிவது போல ஆவேசத்தோடு எழுந்த வள்ளித்தாயி, அவன் கையிலிருந்த குச்சியைப் பிடுங்கி தாறுமாறாய் அவனை அடிக்கத் தொடங்கினாள்.

“உனக்கு இன்னிக்குச் சோறு கெடயாது... பட்டினி கெட எரும மாடு... உன் காலு ரெண்டையும் முறிச்சுப் போடுறேம் பாரு... ஏங்கிட்டுச் சுத்தப் போறேன்னு பாக்குறேன் நானு இனிமே”

வலிதாங்காமல் அவன் கத்தியழ ஆரம்பித்தான். வள்ளித்தாயி இப்பொழுது குச்சியை விட்டுவிட்டு கையால் அவன் முதுகில் ஓங்கி ஓங்கி அறைய ஆரம்பித்தாள். அவன் “அம்மா அம்மா” என்றே கத்தியழுதான். மூத்தவன் திரும்பிப் பார்த்துத் திரும்பவும் கண்ணை மூடிப் படுத்துக் கொண்டான். மருமகள் எழும்பி ஓடி வந்து சின்னவனை இழுத்தெடுத்துத் தனக்குப் பின்னால் மறைத்துக் கொண்டாள்.

“சின்னப் புள்ளயப் போட்டு மாட்டுக்கு அடிக்கிற மாரி அடிக்குற? பெத்த அம்மாவா நீயி?”

மிகச் சத்தமாய் மருமகள் கத்தியதும், வள்ளித்தாயியின் ஆவேசமெல்லாம் அடங்கிப் போனது போல, அப்படியே தரையில் அமர்ந்து கொண்டாள். மருமகள், அவன் முகத்தில் வழிந்த கண்ணீரை அழுந்தத் துடைத்துவிட்டாள். தான் கட்டியிருந்த சேலை முந்தானையெடுத்து அவன் தலையைத் துவட்டிவிட்டாள். பின்னர் உள்ளே போய்த் தட்டெடுத்து அதில் சோறு, ரசமென ஊற்றிப் பிசைந்து எடுத்துவந்தாள். அவன் இன்னும் கத்தி அழுதுகொண்டே தன் அண்ணியின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு அவள் பின்னால் நின்றுகொண்டிருந்தாள். வள்ளித்தாயி தன் அழுகையை மறைக்கப் போல முற்றத்துச் சகதியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“பாரு மேலெல்லாம் எப்படி வீங்கியிருக்குன்னு... அழுவாத ராசா.. அண்ணன் தூங்குதில்ல... இந்தா சாப்டு ராசா” அவனை அருகிலமர்த்தி, அவளும் அமர்ந்து, விம்மிக்கொண்டே சோற்றைப் பிசைந்து அவனுக்கு ஊட்டிவிட ஆரம்பித்தாள்.


வாரமலர் தினமுரசு
மே 28 - ஜூன் 03, 2015

## நூல் விமர்சனம்

## மிருசுவில் தமிழ்த்தாசனின் இரண்டாவது சிறுகதை நூல்

# ‘மனிதர்கள்’




மிருசுவில் தமிழ்த்தாசன் ஒருவருட காலத்துள்ளே இரண்டு சிறு கதை நூல்களை வெளியிட்டுச் சாதித்துள்ளார். முதலில் "யதார்த்தம்" நூல் பத்துக் கதைகள் "மனிதர்கள்" தொகுதியில் மொத்தம் இருபது கதைகள் வெளியிடப்பட்டுள்ளன.

சிறுகதைகளைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

1. "யாரை எங்கே வைப்பது?" பெண்களால் தனிவழி இன்றுவரையில் நடக்காத காரியமாகவே இருந்தும் வருகிறது.

சிவகுரு வாத்தியார் ஓய்வூதியம் பெறுப வரானாலும் ஒய்யாரத்தில் விருப்பம் குறைந்த வரல்லர். அவரிடம் இருந்து தப்பிப் பால சுப்பிரமணியம் மாமாவிடம் சிக்குகிறாள் அமுதா. அதிலிருந்து விடுபட்டு வந்தவளை விடலைப் பருவ இளைஞன் உந்துருளியில் ஏத்திப்போய் பக்குவமாக வீடு சேர்க்கிறான்.

தொலைதூரங்களில் இருந்து கடைச் சிப்பந்திகளாக சென்று உழைத்துவரும் அமுதா போன்ற எத்தனையோ பெண் பிள்ளைகள் எத்தனை நாட்கள் அனுபவித்து வரும் சில்லெடுப்பு. அழகாகக் கதையை நகர்த்திச் சென்றுள்ளார்.

2. "உறவுகள் கலைவதில்லை" சகோதரர்கள் கனகசபை, தங்கராசாவினது நீண்டநாள் பகை, தறுதலை தம்பிராசன் தலையீட்டால் முடிவுக்கு வருகிறது.

வேலிச் சண்டை தர்மபத்தினிகளின் கோழிச் சண்டையாகவும், உருவெடுக்கிறது. கனகமணியும், பவளமும்கூட பகைக்கு முன்பாக ஒருவருக்கு ஒருவர் பாலும், தேனும் போலதான் வாழ்ந்ததுகள், தங்கசாராவின் பெடியன் ஊருக்குள்ளாலை கொண்டு வந்த துளவாரம் இரண்டு குடும்பங்களிலும் ஏற்பட்டிருந்த முரண்பாட்டைத் தீர்ப்பதும் அல்லாமல் சகோதர வாஞ்சையையும் எடுத்துக்காட்டியுள்ளது.

3. நாங்கள் நாங்கள்தான். தங்கராசாரூறுக்கு பஸ்சைக் கொண்டு வெளிக்கிட இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று லீஸிங் கட்டுக் காசை இம்மாசம் சரிக்கட்டலாம். அடுத்து சிங்களச் சனங்களைப் பார்த்து மனையாள் பூபதிபோட்ட திட்டத்தை நிறைவேற்றுவது.

இதுக்கிடையேலை வெளிக்கிட்ட சொந்த பந்தங்கள், ஒண்டிலை இருந்து இன்னொண்டைச் சாட்டிமுரண்பட்டுக் கொண்டதால் பூபதிக்குச் சிங்களச் சனங்களைப் பார்த்து வெளிக்கிட்ட பயணத்தில் திருப்திப்படேலாமல் போய் விடுகிறது.

4. "கடிவாளம்" பல்வேறு விடயங்களுக்காக வெளிநாடுகளுக்குப் போகும் பெண்கள். சாரதிப் பயிற்சி பெற்றுப்போவதும் புதிய நடை முறை. யாழ்.கோட்டை முனியப்பர் கோவிலடிக்கு பயிற்சிக்காக வந்தவர் களில் ரேவதியும் ஒருத்தி.

அவளது பலவீனத்தை தன்னுடைய தேவைக்குப் பயன்படுத்துகிறான் சுரேஷ். சுவிஸ்லாந்தில் தமையன் பாக்கும் மாப்பிள்ளைக்கு வழங்கவேண்டிய இடத்தை சுரேசுக்கு வழங்கியதால் ரேவதி கர்ப்பமாக்கப்பட்டதை அறியாமல் சிவப்பிரகாசம் சாயி கிளினிக் டாக்டர் சத்தியசீலன்மூலம் அறிந்த மாத்திரத்தில் வீழ்ந்து மரணிக்கிறார்.

5. "மனிதர்கள்" இராசதுரை மனைவி வைகுந்தத்துக்கு ஏற்பட்ட பீடையைத் தீர்க்க இரண்டாயிரம் கடனாக மாற முடியாமல் உழைச்சுக் கொடுத்த ஆறுமுகம் முதலாளி, குணம் முதலாளிகளால் கைவிடப்பட மரணித்த அவளது பிணத்தை அமர்க்களமாகச் சுடலைக்குக் கொண்டுபோக மேளம், வெடிகளுக்குச் செலவிட்டு புகழ்பெறும் பகட்டு மனிதர்களே என அவர்களை இராசதுரை நினைத்துப் பார்க்கிறான்.

6. "மனநோயாளிகள்" சுமன்போன்ற படாடோப வெளிநாட்டுக் கூலி அடிமைகளும் உள்நாட்டுப் பரதேசிகளான ரகுக்களும் அழகாக கதாசிரியரால் மனநோயாளிகளில் உலவ விடப்பட்டுள்ளனர்.

7. "மாறாதையா மாறாது" சுபாவின் சுபாவத்தைப் புரிந்துகொள்ளாமல், தெய்வீகன் மதுவே தெய்வமெனப் போனதால் இருவரது வாழ்வும் மாறிப் போனது. மதுப் பாவனைக்கு எதிரான பிரசாரத்துக்கு பயன்படுத்தக்கூடிய கதை.

8. "திருந்தாரோ வருந்தாரோ" வன்னிப் போரில் கணவன் யசோத்ரனையும் மகன் அறிவழகனையும் செல்லரக்கனுக்கு பலிகொடுத்த தேவகி மகள் பொன்மனச் செல்வியுடன் கிண்ணத்தில் குதித்து தற்கொலை செய்யப்போகும் கதை.

9."சிக்குப் புக்கு சிக்கு புக்கு ரயிலே" அகிலாண்டேஸ்வரியும், கணவனும் பதினொரு புத்திர பாக்கியங்களுடன் மாமன் ஆட்டுப் பட்டிக்கார அருளம்பலத்தார், மாமி மங்கம்மா ஆகிய பதினைந்து உருப்படிகள் வடபகுதிக்கு 25 வருடங்கள் கழிச்சுவந்த ரயிலைப் பாக்க 50ஆயிரம் ரூபாவுக்கு அடமானம் வைச்சு கொழும்பு போய்த் திரும்புவதாக எழுதப்பட்டுள்ளது.

இயல்பாகவே நகைச்சுவை தூக்கலாக எழுதும் மிருசுவில் தமிழ்த்தாசன் வெளுத்து வாங்கியுள்ளார். தென்னிந்திய நகைச்சுவை எழுத்தாளர் எந்த மூலைக்கு?

10. நினைப்பதெல்லாம் நடந்து விட்டால்... 11. விடையில்லா வினாக்கள், 12. கூடிழந்த பறவைகள், 13. இவர்கள் ஏன் இப்படி? 14. சொந்த மண், 15. ஆயிரத்தில் ஒருவன் 16. மனச்சாட்சி, 17. தெளிவு, 18. காசு பணம் துட்டு, 19. சந்தோசக்கேடு, 20. எழுதா விதிகள் மிருசுவில் தமிழ்த்தாசன் மொத்தம் 20 கதைகளை அனாயாசமாக எழுதித் தள்ளியுள்ளார்.

கையாண்ட மொழிநடையில் மண்ணுக்கே உரிய வாசனை வீசுகிறது. கதைகளில் செம்மண் கலந்தே வந்துள்ளது. இக்கதைகளில் விடையில்லா வினாக்கள் ஒரே கதையைத் தவிர ஏனைய கதைகள் பண்ணப்பட்ட கதைகளாகவே தேறுகிறது.

இவருக்கு நகைச்சுவைக் கதைகள் எழுத நன்றாகவே வருகிறது. "சிக்கு புக்கு சிக்கு புக்கு ரயிலே..." நல்ல உதாரணம். ஒரு சிலர் எழுதும் கதைகள் விளங்குவதில்லை என்னும் குறைபாடு இலக்கிய உலகில் சொல்லப்படுவது வழமை! இவரிடம் அக்குறை துளிகூடக் காணமுடியாது.

தமிழ்த்தாசன் மிக விரைவாக சிருஸ்டி இலக்கியக் கோட்பாடுகளில் உள்ள சுழிவு நெழிவுகளைப் புரிந்து சரியான தடத்தில் தன்னுடைய இலக்கிய ஆக்கங்களைத் தருவாரென எதிர்பார்க்கலாம்.

— தேவி பரமலிங்கம்.

## (08 ஆம் பக்கத் தொடர்ச்சி...) நீதிக்கான...

### அப்படியென்றால் அதற்காக நாம் ஆற்றவேண்டிய பணிகள் என்ன?

வித்தியாவின் படுகொலைக்குப் பின்னர் ஏன் எதற்கு என்றில்லாமல் சில பல விரும்பத்தகாத காரியங்கள் சங்கிலித் தொடர்போல நடந்தேறியிருக்கின்றன. இது சோகத்தில் துவண்டுபோய் நிற்கும் நம்தேசத்து மக்களுக்கு உகந்ததல்ல.

அவளை மொத்தமாய்ப் பதம் பார்த்துவிட்டு செத்த பின்னும் சுகம்கண்டு சாமியின் சந்நிதிக்கும் சவக்காலைக்கும் கூடச் சென்று சாதனை படைத்திருக்கிறார்கள் போதையில் உழன்ற அந்தப் பாதகர்கள்.

இத்தனைக்கும் மத்தியில் போதை தரும் சாலைகளுக்கு பூரண பாதுகாப்பை சமூகம் வழங்கியிருக்கின்ற அதே வேளை, நீதிதரும் இடங்களுக்கு கல்லெறித் தாக்குதலும் டயர் எரிப்பும் என்று வழமையான நமது தீவிரவாதத்தை நீதிக்காகப் போராடுவதாகக் கூறிக்கொண்டு நிறைவேற்றி இருக்கின்றோம்.

விளைவு உணர்ச்சி வசப்பட்ட 129 பேர் உள்ளே தள்ளப்பட்டிருக்கின்றார்கள். அதுவும் அனுராதபுரக் கூண்டுகளில். அவர்களது குடும்பம், பிள்ளைகள், மானம் என்று இனி எல்லாமே சீரழிவுதான்.

எதற்காக வீதிக்கு வந்தோம், எதற்காக பெனர் பிடித்தோம் என்று கூடத்தெரியாமல் இன்னொரு சாரார் கூச்சல் குழப்பத்தோடு எகிறி (குதித்து) நிற்கிறார்கள். இதில் ஆண்களும் பெண்களும் இளவயதினரும் மூத்தோரும் மொத்தமாய் அடக்கம்.

அந்தோ பரிதாபம். பல எதிர்ப்பு ஊர்வலங்களிலுள்ள புகைப்படங்களை உற்றுக் கவனித்துப் பாருங்கள். ஏன் வீதிக்குவந்து பெனர் பிடித்திருக்கின்றோம் என்று கூடத்தெரியாமல், இங்கிதமில்லாமல் சிரிப்பும் கதையுமாய் ஒரு கூட்டம். சிம்மசொப்பனமாய் (திகிலை ஏற்படுத்தும் பயங்கரம்) மறு கூட்டம்.

வித்தியாவின் போராட்டத்தில் உணர்வே இன்றி சிரிப்பும் கதையுமாய் ஊர் வம்பளந்துகொண்டு நின்றதைக் கண்ணுற்ற பொழுது இந்தப் போராட்டம் தேவைதானா என்ற கேள்வி எழுந்தது. கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வரிசையாய் நின்ற மாதர்குலத்தவர் பலர் சிரிப்பும் கதையுமாய் நின்றதைக் கண்டு நான் திட்டியதையும் இங்கே குறிப்பிட்டாகவேண்டும்.

வித்தியா துடிதுடித்து மூர்ச்சையாகிப் போனதைக் கொண்டாடவா இங்கு வந்து சிரிப்பும் கதையுமாய் நிற்கிறீர்கள்? என்று நான் சினந்தபொழுது தான் அவர்களுக்கு உறைத்தது. ஆக இந்தப் போராட்டங்கள் அர்த்த புஸ்டியாய் அமைந்துவிட்டது என்று புகழ்ந்து பொய்யுரைப்பதில் எனக்கு உடன்பாடில்லை.

உத்தமமான பத்துப் பேர் கூடி உணர்வு ரீதியாய், உருப்படியாய் ஏதாவது செய்தாலே போதும் என்பது எனது வாதம்.

□விசாரணை வேண்டாம் எங்கள் கையில் கொடு என்று கோசம் எழுப்புவதிலும் நீதி மன்றங்களுக்குக் கல்லெறிவதிலும், பொலிஸாருக்கு நெருக்கடி தருவதிலும், வழக்காடாதே போ என்று வழக்குரைஞர்களை மிரட்டுவதிலும் வீதிக்கு டயர் போட்டு எரிப்பதிலும் வீடுகளைக் கொளுத்துவதிலும் வீரமும் வெற்றியுமிருப்பதாகத் தோன்றவில்லை.

மாறாக மறைந்த அந்தப் பூஞ்சிட்டின் ஆத்மாவுக்கும் அவளுக்கான நீதி வேண்டிய போராட்டத்திற்கும் ,ழுக்கு என்றே கருத வேண்டியுள்ளது. ஆத்திரம் மீண்டும் நம் தேசத்தை அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டு சென்று விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தி விட்டுள்ளது.

வித்தியாவின் மரணத்தோடு மீண்டும் □புலிப்புரளியை□ தென்னிலங்கை அரசியல் ஆர்வலர்கள் விரும்பி எதிர்பார்த்து நிற்கிறார்கள். சண்டித்தன அரசியல் செய்ய ,ன்னொரு சாரார் சதி பண்ணுகிறார்கள்.

வேண்டாம் ,ந்த வம்பு. வித்தியாவுக்கு நீதி வேண்டும் எனும் போராட்டம் வெற்றியாய் அமைய விவேகத்தோடு போராடுவோம். அதற்காக வீதிகளைக் கொளுத்த வேண்டாம், நீதி மன்றங்களுக்கு கல்லெறிய வேண்டாம், வீடுகளை எரிக்க வேண்டாம், வழக்குரைஞர்களை மிரட்ட வேண்டாம், வாகனங்களைச் சேதப்படுத்த வேண்டாம். ,ணங்கள் ,ணைந்து உணர்வுகளோடு ஒன்றிப்போன ஓர்மமான (மன உறுதியான) போராட்டம் தேவை.

தலைநகர் கொழும்பில் ஞாயிறன்று (24.05.2015) அனைத்து சமூகத்தவரும் ,ணைந்து உணர்வாய், உருக்கமாய், உறுதியாய் நடத்திய அமைதிப் பிரார்த்தனை சிந்தனைக்கு வழிவிட்டிருக்கிறது.

சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்திக்கான அமைச்சின் அழைப்பின் பேரில் நடைபெற்ற ,ந்த கவனயீர்ப்பு நிகழ்வில் தமிழ், சிங்கள, முஸ்லிம் அரசியல் தலைவர்களும் சிவில் சமூகப் பிரதிநிதிகளும் கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தி, உயிரிழந்த வித்தியாவுக்கு தங்களின் அஞ்சலியை செலுத்தினர்.

பெண்களுக்கு எதிரான கொடூரங்களைத் தடுப்பதற்காக நாட்டின் சட்டங்களில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் பாலியல் குற்றவாளிகளுக்கு எதிரான நீதி விசாரணைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்றும் ,ந்த நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆட்சிக் காலத்துடன் ஒப்பிடும்போது, புதிய ஆட்சியின் கீழ் மக்கள் அச்சமின்றி சமூகப் போராட்டங்களை முன்னெடுக்கக்கூடிய சூழல் நாட்டில் உருவாகியுள்ளது. ,தனை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

வித்தியா ! நீ முந்திச் சென்று விட்டதால் உனக்கு நடந்த அநீதிக்கு விடிவுகாண என்னாலும் முடிந்ததைச் செய்வேன்.

(09ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## பிரிட்டிஸ் தொழிற்கட்சி

அவைமுற்றிலுமாக முதலாளித்துவ அரசியலின் கட்டமைப்புகளுக்குள் ஒருங்கிணைந்துள்ளன. அவை ஒரு தனிச்சலுகை கொண்ட மத்திய தட்டு வர்க்கத்தின் அடுக்குகளைப் பிரதிநிதித்துவம் செய்வதுடன், பிரதான கட்சிகளின் மற்றும் முன்னணி தொழிற்சங்க நடவடிக்கையாளர்களின் அரசியல் ஆலோசகர்களாக மற்றும் கல்வித் துறைக்குள் முதலாளித்துவ கொள்கை அபிவிருத்தியாளர்களாக அவற்றின் இடங்களைப் பாதுகாத்துக்கொள்ள மட்டுமே அவை அக்கறைகொண்டுள்ளன.

ஒரு புரட்சிகர சோசலிஸ்ட் இயக்கத்தின் அபிவிருத்தியை எதிர்ப்பதும், தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களை மூலதன அரசியல் பிரதிநிதிகளுக்கு அடிபணிய செய்வதுமே அவர்கள் வகிக்கும் குறிப்பிட்ட பாத்திரமாகும்.

மே 7 ஆம் திகதி சம்பவங்கள் நீண்ட காலத்திற்கு முன்பே கருத்தரித்திருந்தன என்பதுடன், அவை வேகமாக தீர்க்கப்பட எவ்விதமான வழியுமில்லை.

உண்மையில், தொழிற்கட்சியின் படுதோல்வி வெறுமனே ஒரு கட்சியின் தோல்வி என்பதற்கும் அப்பாற்பட்டதாகும். அது ஓர் ஒட்டுமொத்த அரசியல் முன்னோக்கின் மற்றும் அதை அடிப்படையாகக் கொண்ட அனைத்து கட்சிகள் மற்றும் அமைப்புகளின் தோல்வியாகும். ஐரோப்பாவெங்கிலும் முன்னாள் சமூகஜனநாயக அமைப்புகள் உடைந்துவருகின்றன. பொருளாதார பூகோளமயமாக்கல் மற்றும் முதலாளித்துவ உடைவிற்கு விடையிறுப்பதில் அவற்றின் சீர்திருத்த பாசாங்குத்தனங்களை நீண்டகாலத்திற்கு முன்னரே கைவிட்டுவிட்ட அவை, பிரிட்டன், பிரான்ஸ், கிரேக்கத்தில் ஆகட்டும் அல்லது ஏனைய இடங்கள் ஆகட்டும், சிக்கன நடவடிக்கை மற்றும் போருக்கு தீவிர ஆதரவாளர்களாக மாறியுள்ளன.

இது தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்களுக்கு மரணகதியிலான அபாயங்களை முன்னிறுத்துகிறது. கூடுதல் வெட்டுக்களில் பில்லியன் கணக்கான பவுண்டுகளுக்கு ஏற்கனவே உறுதியளித்துள்ளதும் மற்றும், அரசு மற்றும் கண்காணிப்பு எந்திரங்களின் அதிகாரத்தைப் பலப்படுத்த ஒரு புதிய 'தகவல் சேகரிப்பு சாசனத்தைத்' துரிதப்படுத்திவரும் ஓர் அரசாங்கத்தை அவர்கள் முகங்கொடுக்கின்றனர். அது ஐக்கிய இராச்சியத்தில் தேசிய பதட்டங்களைஅதிகரிக்க செய்யும் என்பது மட்டுமல்ல, மாறாக புலம் பெயர்வு மற்றும் ஐரோப்பிய பிரச்சினைகளையும் அதிகரிக்க செய்யும்.

அனைத்திற்கும் மேலாக, இது முதலாளித்துவம் மற்றொரு நிதியியல் பொறிவின் விளிம்பை நோக்கி சென்றுகொண்டிருக்கையிலும் மற்றும் அமெரிக்க, பிரிட்டன் மற்றும் ஏனைய பிரதான சக்திகளின் இராணுவ ஆக்ரோஷம் உலகை ஓர் இரத்தந்தோய்ந்த மோதலுக்குள் மூழ்கடிக்க அச்சுறுத்திக் கொண்டிருக்கின்ற நிலைமைகளின் கீழ் நிகழ்கின்றன.

இந்த அரக்கத்தனமான நிலைமைகளிலிருந்து வெளியேறுவதற்கான பாதை ஒரு உண்மையான சோசலிச கட்சியைக் கட்டியெழுப்புவதைச் சார்ந்துள்ளது. ஒருபுதிய போராட்ட அச்சிற்கு "அதாவது சோசலிச சர்வதேசிய வாதத்திற்கு" திரும்புவதைத் தவிர, ஒரு தேசிய சீர்திருத்தவாதத்திற்கு திரும்புவதிலே அங்கே எந்த முன்னோக்கிய பாதையும் கிடையாது. சமூகத்தின் உற்பத்தி சக்திகள் இலாபகர அமைப்பு முறையின் தளைகளிலிருந்தும் மற்றும் போட்டியிடும் தேசிய அரசுகளாக உலகம் பிளவுபட்டிருப்பதில் இருந்தும் விடுவிக்கப் பட்டாக வேண்டும். தனியார் இலாபத்திற்காக அல்லாமல் சமூக தேவையைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்ட பொருளாதாரத்தின் அடிப்படையில் உலக பொருளாதாரம் நடத்தப்படவேண்டும்.

[07 ஆம் பக்கத்தில் இடம்பெற்ற நீதிக்கான போராட்டத்தில்.... என்ற கட்டுரையின் தொடர்ச்சி 21 ஆம் பக்கத்தில் 08 ஆம் பக்கத் தொடர்ச்சி என தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதை வாசகர்களுக்கு மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம்.

- ஆர்-






# இரகசியம்

பொல்லாதது எது என்று
கேட்டால், "நில்லாத கனவு!"
என்பாள் அவள்!

வந்து வந்து போகும்
அவள் மனதை
பந்து போல உருட்டும்!

"கனவே கனவே கலையாதே!
என்றுதான் அவளின்
இதழ்கள் முனகும்!"

வேண்டுகோளை
புறக்கணித்துவிட்டு
போயே விடும்!

நினைத்தால் வருகிறது
நினைத்தால் போகிறது!
கட்டுப்படாதது
கட்டுக்குள் நில்லாதது கனவு!

நேரில் வராதவன்
கனவில் வருகிறான்!
நினைவில் இருப்பவன்
கனவில் வதைக்கிறான்!

கைகளை நீட்டுகின்றான்
கனிகளைப் பறிக்கிறான்!
கையோடு வராத கனிகள்
கொய்ய முடியாத கனிகள்!
மெய் சிலிர்த்து கூறுகிறான்!

தழுவத்தானடி மேனி
நழுவத்தானடி கேணி
நான் தானடி தேனி
வழுவாதேயடி ராணி!

"ச்சே வெட்கமில்லையா
அங்கெல்லாம் தொட
உமக்கு விவஸ்தையில்லையா?
முகம் மூடி நாணுகிறாள்!"

"தொட்டால்தானே சுரம் வரும்!
மீட்டாத வீணை ஊட்டுமா நாதம்!
கட்டழகு மேனியெங்கும்
கைகளின் உலா!

கனியிதழ் மீது
காளையிதழ் தாவும்
வாயோடு வாய் சேர
நாவோடு நா கலக்க
பாலோடு தேன் கலந்து
பருகுவது அமுதம்!
அமுதம் பருகியதும்

தேகம் உருவெடுக்கும்.
பருவம் படமெடுக்க
உருவம் இரண்டும் ஒன்றாகும்!

உச்சி முதல் பாதம் வரை
புதியதொரு வேகம் வரும்!
யாகம் இது யாகம்
தேகமே தீய்ந்து போ!

வேகம் இது வேகம்
இயக்கமே நின்று போ!
மூச்சு இது மூச்சு
காற்றே ஓய்ந்து போ!

காயம் இது காயம்
மாயமாய் மறைந்து போ!

தேகம் எங்கும் பாரம்
சுமையே இறங்கிப்போ
கனவில் கண்டதால்
ஏக்கத்தில் பாதி
தொலைந்து போனது!

களிப்பினால்
தேகம் களைபெற்றது!
இளைத்த மேனி
செழித்து நின்றது!

வந்தனர் தோழிகள்
வனப்பை பார்த்தனர்.

மேனியின் பூரிப்பும்
வதனத்தின் வசீகரமும்
அவள் உள்ளத்து
இரகசியத்தை
தோழிகள் வாசிக்க
வைத்தன!

சேரனைக் கண்டாயோ
சேர்ந்திடக் கண்டாயோ?
கனவினில் உன்னை
காவி எடுத்தானோ?

கண்களால் கடும்பசி
உண்டு கடும் பசி
தீர்த்தாயோ?

தோழிகள் குறும்பு
தொடுக்க?
அவளுக்கோ ஆச்சரியம்?

ஒரு நாள் ஒரே நாள்
கனவில் கண்ட காட்சி
எப்படித்தான் தெரிந்தது!

அந்தரங்கக் கனவில்
மலர்ந்த சந்திப்பு
அம்பலமானது எப்படி?
என்று வியந்தாள்.

அவளது வியப்பைத்தான்
முத்தொள்ளாயிரப் பாடல்
மத்தாக தருகிறது.

"புன்னாகச் சோலை புனல் தெங்கு சூழ் மாந்தை
நன்னாகம் நின்றலரு நன்னாடன் தன்னாகம்
தங்குல் ஒருநாள் கனவினுள் தை வந்தான்
என்கொல் இவரறிந்த வாறு"




✪ வித்தியாவின் படுகொலையை அடுத்து நடந்த ஆர்ப்பாட்டங்களைப் பார்த்த விமல் வீரவன்ச மீண்டும் ஓர் பயங்கரவாதம் தலைதூக்கும் என்கிறாரே...?

என்.நிசாந்தன். மட்டக்களப்பு.

விமல் வீரவன்ச கூறினால் என்ன?, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கூறினால் என்ன? யாழ்ப்பாணத்தின் இயல்புநிலைக்கு பங்கம் ஏற்பட்டுள்ளது. கவச வாகனங்களும், ஆயுதம்தாங்கிய படையினரும் அதிகமாக நடமாடுகின்ற சூழலை நமது இளைஞர்கள் வெற்றிகரமாக ஏற்படுத்தியுள்ளார்கள்.

அதுபோதாதென்று தென்மராட்சியில் மீண்டும் பொலிஸார்மீது தாக்குதல் நடத்த முற்பட்ட ஒருவரை பொலிஸார் சுட்டதும் யாழ்ப்பாணத்தின் இயல்புச் சூழலை பாரதூரமாகப் பாதித்துள்ளது. இவ்வாறான சம்பவங்கள் தென்னிலங்கையில் எச்சரிக்கை உணர்வை தோற்றுவித்துள்ளது. அரசுக்கு அந்த அச்சம் இல்லை என்றால் எதற்காக இத்தனை படைக்குவிப்பும், போர்க்கால பரபரப்புக்களும்?

✪ முழுப் பாராளுமன்றத்தையும் அரசாங்கமாக்கும் செயற்பாட்டுடனே இருப்பதாக பிரதமர் ரணில் கூறுகிறாரே. இது சாத்தியமா?

த.நவநீதன். காலி.

ஒருவருக்கும் பிரதமரின் திட்டம் புரியவில்லை. ஒருவேளை மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான உறுப்புரிமையை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக் கொள்ளும் என்று கூறுகின்றாரா? அல்லது நாடாளுமன்றத்திற்கு தெரிவாகும் அத்தனைபேரையும் பொது இணக்கத்தின் அடிப்படையில் இணைத்து தேசிய அரசாங்கத்தை அமைப்பதன் ஊடாக முழுப்பாராளுமன்ற அதிகாரத்தையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிப்பாரா? பொறுத்திருந்துதானே பார்க்க வேண்டும்.

✪ யாழ்ப்பாணத்தில் வித்தியாவின் போராட்டத்திற்கு இராணுவ பிரசன்னத்தை ஏற்கமுடியுமா சிந்தியா?

ப.காவியா. வவுனியா.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுதானே. ஆர்ப்பாட்டங்கள் சரிதான். உணர்ச்சி, உந்துதல் சரிதான். கொஞ்சம் அதிகமாகவே ஆக்ரோசமாகிப் போய் வீதியில் டயர்களைப் போட்டு எரித்ததும் சரிதான். குற்றவாளிகளுக்கு மரண தண்டனை கொடுக்கப்படவேண்டுமென ஒரு வலியுறுத்தலை செய்ய சிந்தித்ததும் சரிதான்.

அதையெல்லாம் தாண்டி பொலிஸாரைத் தாக்கவும், நீதிமன்றத்தை தாக்கவும் முற்பட்டு போராட்டத்தின் கருப்பொருளையே சிதைத்துவிட்டது. யாருடைய முட்டாள் தனம். வேலியில் போறதைப் பிடித்து ஆடைக்குள் விட்டதுபோல் தூர விலகிக் கொண்டிருந்த படையினரை மீண்டும் ஊருக்குள் கொண்டுவந்தது. படையினரின் செயற்பாடு இல்லையே.

✪ ஜெயலலிதா மீண்டும் தமிழகத்தின் முதல்வராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டிருப்பது இந்திய நீதியின் சாபமா? பாவமா?

நூ.நஸ்பியா. நிந்தவூர்.

நீதியா? அப்படியென்றால் என்ன? முதலில் குற்றவாளி என்று கூறும். அதே நீதி நிரபராதி என்று விடுதலை செய்யும். நிலையில்லாத ஒரு தடுமாற்றத்தின் பெயரையா நீதி என்று குறிப்பிடுகின்றீர்கள். தமிழக மக்களுக்கே கலைஞரைவிட அம்மா நல்லவர் என்றோ, அம்மாவைவிட கலைஞர் நல்லவர் என்றோ எந்த கருத்துப் போட்டியும் இல்லை.

✪ 8ஆவது ஐ.பி.எல். கிண்ணம் மும்பை அணியின் வசமானதைப் பற்றி என்ன நினைக்கின்றீர் சிந்தியா?

அ.நவீன். யாழ்ப்பாணம்.

நடந்து முடிந்த ஐ.பி.எல் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியினர் எல்லாப் போட்டிகளிலும் சிறப்பாக விளையாடி வருகின்றபோதே எனக்கு உள்ளூர ஒரு பயம் இருந்தது. தொடர்ச்சியான வெற்றிகளால் கவலையீனமான மனோநிலைக்கு ஆளாகிவிடுவார்கள்.

அதேபோலவே அறையிறுதிப் போட்டியில் சென்னை அணியினர் தடுமாறத் தொடங்கினார்கள். தட்டுத் தடுமாறி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார்கள். அந்த தடுமாற்றத்தை இறுதிப்போட்டியிலும் காணமுடிந்தது. மும்பை இண்டியன்ஸ் அணியினர் வெற்றியை சுவீகரிக்கும் மன உறுதியுடன் விளையாடினார்கள். வெற்றி அவர்கள்வசமானது. போராடுபவர்க்கு வெற்றிதான்.

# காதிலை பூதந்தசாமி

**வணக்கமுங்கோயூ யாழ்ப்பாணத்தில நீண்ட நாளைக்குப் பிறகு ஆமிக்காரனின்ர நடமாட்டம் இருக்குது. பொங்குதமிழ் காலத்தில பார்த்தைப்போல கல்லாலை எறியிறதையும், வீதியில டயர்களைப் போட்டு எரிக்கிறதையும் பார்க்கிறன். சட்டத்தரணி சிறியர் சொல்லுறார் மீண்டும் பச்சை உடுப்பு ஊருக்குள்ள வாறதுக்கு காரணம் உந்த குடிகாரப் பெடியளின்ர சேட்டைதான் எண்டு. முன்னமும் உதுதானேங்கோ நடந்தது.**

இயக்கப்பெடியள் சொறிஞ்சு சொறிஞ்சு தானே ஆமியை ஊருக்குள்ள கூட்டிக் கொண்டு வந்தவங்கள்.

தொட்டில் பழக்கம் சுடுகாடுவரைக்கும் வரத்தானே செய்யும். பாவம் அந்தப் புள்ள வித்தியாவை கொடுமைப்படுத்தி கொலைசெய்து போட்டாங்கள். அந்தக் கொலைகாரங்களை கம்பத்தில கட்டிச் சுட்டாத்தன் எனக்கு மனம் ஆறும்போலை இருக்குது.

சிலபேர் சொல்லினம் பார்த்தியளோ புலிகள் இருந்திருந்தால் உப்பிடியெல்லாம் நடந்திருக்குமோ, நடந்திருந்தால் விட்டிருப் பினமோ என்று கேக்கினம். அவை இருக்கேக்க சில சம்பவங்கள் நடந்தது தான். இயக்கத்துக்குள்ளேயே சில சம்பவங் கள் நடந்தாக இயக்கத்தில இருந்த பெட்டையளே சொல்லுதுகள்.

எண்டாலும் இயக்கம் ஊருக்க இருக் கேக்க உப்பிடி நடக்கிறது அரிதுதான். ஆனால் இயக்கம் இருக்கும்போது, பாலியல் குற்றம் அரிதாக இருந்தாலும், பிள்ளைகளை வீட்டுக்குள்ளே பாது காக்கிறது பெரும்பாடாக இருந்தது. ஒழிச்சுத்தான் பிள்ளைகளை பெத்ததுகள் வளர்த்ததுகள். எந்தத் தவறையும் எதிர்த்துக் கேட்டால் மண்டையில போடுவினம் எண்ட பயம் சனம் அடங்கிப்போய் இருந்திச்சுதுகள்.

அதைவிடுங்கோ, என்ர கேள்வி என்னவெண்டால், புலியோ, எலியோ தலைக்கு மேலாக துப்பாக்கியை நீட்டிக்கொண்டு நிண்டால்தானோ சமூகம் பயபக்தியோடு ஒழுங்காக இருக்கும். கொஞ்சம் பிசகினாலும் அவனவன் பெட்டையளைத் துரத்துவான், ஊருக்குள்ள அவனவன் சண்டியன் ஆகிடுவான், கையில ஆளுக்கொரு கத்தியை தூக்கிக் கொள்வான், பெட்டையள் பாதி வெளிநாட்டு கலாசாரமும், பாதி கொழும்பு மோகமும், மிகுதி யாழ்ப்பாணத்து மோகமும் கலந்து இதுதான் உடுப்பு, இதுதான் பழக்க வழக்கம் எண்டு தெரியாமல் திரியுவினம் எண்டு பெரும் பிரளயம் ஆகிப்போடுமோ? எண்டதுதானுங்கோ.

அப்புடி எண்டால் தமிழ்ச் சமூகம் கலாசாரத்தோடையும், பயபக்தியோடையும் இருக்கிறதுக்கு இயக்கமோ, படைகளோ இரவு பகலாக துப்பாக்கியை நீட்டியபடி வாசலுக்கு முன்னால நிக்கவேணும் எண்டதுதான் நிலைமையோ.

இசைப்பிரியா விடயத்தில அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா வாய் திறக் காமல் இருக்கிறாரே எண்டு ஒரு காலத்தில கூட்டமைப்புக்காரர் சொல்லிச்சினம். ஆனால் அமைச்சராக இருந்துகொண்டும் இசைப்பிரியாவுக்கு நடந்த கொடுமையை கண்டித்தும், குற்றவாளிகள் சட்டத்தின் முன்னால் நிறுத்தவேண்டும் என்றும் தேவானந்தா கூறியபோது, ஆஹா இவருக்கு ஞானம் வந்திட்டுதோ எண்டும் அதே கூட்டமைப்புக்காரர் சொல்லிச்சினம்.

ஆனால் பாருங்கோ உந்த புங்குடுதீவு பிள்ளை வித்தியாவின்ர பாலியல் கொலை தொடர்பாக நாடாளுமன்றத்தில தேவானந்தா நீதி நிலைநாட்டப்பட வேணும் என்று குரல் கொடுக்கும்போது, உந்த சம்மந்தரும், அவரின்ர சகாக்களும் கொடுப்புக்க சிரித்துக் கொண்டு செல்போனில பேஸ்புக் பார்த்துக் கொண்டு இருந்திச்சினமுங்கோ.

ஏன் அவை வித்தியாவுக்காக குரல் எழுப்பினமில்லை. இந்த அரசாங்கத்தின்ர தேசிய நிறைவேற்றுச் சபையில இருந்தால் தமிழ் பிள்ளைக்காக நீதிகேட்கக் கூடாதோ?, அல்லது தமது தீவக வேட்பாளராக அறிமுகம் செய்ய இருந்த தமிழானமாறன் கொலையாளியை காப்பாற்றப்போய் சிக்கிக் கொண்டதாலை வாயைத்திறக்க தமக்கு அருகதை இல்லை எண்டு பொத்திக் கொண்டு இருந்திச்சினமோ?. அல்லது சம்மந்தமானவரின்ர தரத்துக்கு புங்குடுதீவுப் பிள்ளைக்காகவெல்லாம் வாய்திறந்தால் தன்னுடைய இமேஜை கெடுத்துப்போடும் எண்டு நினைச்சாரோ?

உப்பிடி நாடாளுமன்றத்திலயும், வெளி- யேயும் உத்தியோகபூர்வமாக கூட்டமைப்பு வித்தியாவின்ர கொலை தொடர்பாக மௌனித்துப் போனதுக்கு ஏதாவ்து சர்வதேசக் காரணமாக இருக்குமோ? சனத்துக்கு உந்த தமிழ்த் தேசிய தந்திரோபாயமே புடிபடுகுதில்லையுங்கோ.

ஒருவேளை பதினேழு வயதாக இருந்த வித்தியா தங்களுக்கு வாக்குப் போட்டிருக்க வாய்ப்பே இல்லையே. அதாலை தமிழ்த் தேசிய மதிப்பீடுகளைப் பொறுத்தவரை வித்தியா வாக்காளராக இல்லாத வெறும் பிறவியோ? அதுவும் இல்லையெண்டால் சுவிஸ் குற்றவாளியிடம் சட்டம் தெரிஞ்சவர் வாங்கினதாகச் சொல்லப்படுகிற 40 இலட்சத்தில கூட்டமைப்புக்காரர் கட்சி நலத்திட்டப் பணிக்காக ஒரு தொகையை வாங்கிட்டினமோ?

எல்லாம் அந்த ஆண்டவனுக்குத் தானுங்கோ வெளிச்சம். நீதிபதியாக இருந்த முதலமைச்சரே நீதிமன்றத்தை தாக்கியதை குற்றமென்று தெளிவாகப் பேசாமல், அப்புடியும் இப்புடியும் சடைஞ்சு போட்டார். அதைப்பற்றியும் சம்மந்தமானவரின்ர அணி வாய்திறக்கவில்லை.

பாவம் இப்போதைக்கு கூட்டுக்குள்ள சம்மந்தமானவரின்ர கொண்ரோலில இருந்து கொண்டும் தனது கருத்தைச் சொல்லுற ஒரே மனிசனாக சுரேசர்தான் அடிக்கடி வாய் திறக்கிறார். அவருக்கும் அரசோடு தேசிய நிறைவேற்றுச் சபையில இணக்க அரசியல் நடத்தும் குருவும் சிஷ்யனும் சேர்ந்து எப்ப ஆப்பு வைக்கப்போகினமோ?

வித்தியாவின்ர மரணம் பல பிரச்சனை களை வெளித்தள்ளி இருக்குதுங்கோ. சனம் தெரிந்து கொள்ளவேண்டியதும், சிந்திக்க வேண்டியதுமான விடயங்களையும், நபர்களையும் வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளது. இதை மறந்துவிட்டு தன்மானத் தமிழராக வாக்களிப்பதும், உசுப்பேத்துவதும்தான் தேசியக் கடமை எண்டு திரும்பவும் சனம் குருட்டுப் பயணம் போனால் யாராலையுங்கோ தடுக்கமுடியும். சொல்லுங்கோவன்.

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**

## வரலாறு படைத்த வல்லுநனர்கள்

# மரண பயத்தை ஒழித்த மருத்துவர்



புகழ்பெற்ற சேர்ஜனான ஜேம்ஸ் சிமி என்பவ ரின் உதவியாளராகச் சேர்ந்தார். அவருடைய மகளையே பிற்காலத்தில் மணந்துகொண்டார். மருத்துவமனை களில் நோயாளிகளுக்குத் தரப்படும் சிகிச்சை மோசமாக இருப்பதை அறிந்தார். உயிருக்கே ஊறுவிளைவிக்கக் கூடியவை. உயில் எழுதி வைத்துவிட்டு மரணத்துக்குத் தயாராகத்தான் அறுவைச்சிகிச்சை செய்து கொண் டார்கள். அரசாங்க மருத்துவமனைகளில், ஒப்பரேசன் செய்யப்பட்ட பத்துப்பேரில், எட்டுப் பேர் ஒப்பரேசனுக்குப் பிறகு இறப்பது சர்வசாதாரணமாகிவிட்டது.

அவர்களின் இறப்பு, ஒப்பரேசன் செய்யப்பட்ட பகுதியில் விஷமேற்பட்டு உடல்முழுவதும் பரவி, மரணம் சம்பவித்தது. இதற்கு என்ன காரணம் என்று யாருக்குமே புரியவில்லை. மருத்துவர்களில் பலர் இது தவிர்க்கமுடியாதது என்றே கருதினார்கள். அழுக்கும், இருட்டும் நிறைந்த மருத்துவமனைகளின் மோசமான நிலையே அதற்குக் காரணம் என்பதை அவர்கள் அறியவில்லை. ஆனால் லிஸ்டர் அந்தச் சூழ்நிலையில் திருப்திப்படவில்லை. நோயாளி இறந்தால் அது தன் அறுவைச் சிகிச்சைக்குத் தோல்வியே என்று கருதினார்.

(முற்றும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(28.05.2015 தொடக்கம் 03.06.2015 வரை)

## மேடம்

நீண்டதூரப் பயணங்கள்மூலம் காரியங்கள் நிறைவேறும் காலமாகும். பொதுத்தொண்டு களில் ஈடுபடுவோர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் பணிசெய்வது நல்லதாகும். குடும்பத்தில் தடைப் பட்டு வந்த சுபகாரியங்கள் நிறைவேற இன்னும் சற்றுக் காலதாமதம் ஆகலாம். ஒரு சிலருக்கு வீடு மற்றும் தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்ய திட்டம் போடுவீர்கள். புதிய கடன்கொடுப்பதைத் தவிர்த்தல் நல்லது. நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். கணவன் - மனைவி உறவுகளில் வெகுநாட்களாக இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் சற்றுக் குறைந்து மனநிம்மதி அடைவீர்கள்.

## இடபம்

வெளிநாடு சென்றுவருவதற்கான முயற்சி களில் நல்ல தகவல்கள் வந்துசேரும். காதல் விசயங்களில் நற்செய்திகள் வந்துசேரும். உடல்நிலையில்மூலம் மற்றும் வயிறு போன்ற உபாதைகள் வந்துபோகும். பிரிந்துபோன கணவன் - மனைவி இருவரும் திரும்ப ஒன்று சேருவதற்கான வாய்ப்புகள் உள்ளன. பிள்ளை களுக்கு கல்வித் துறையில் பரிசுகள் மற்றும் பாராட்டுக்களை பெறுவதன்மூலம் குடும்பத்தில் மனமகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களின் மூலமாகப் புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடனைகள் அடைப்பீர்கள். நாட்பட்ட வழக்கு விசயங்களில் சாதகமான நல்ல தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## மிதுனம்

புதிய தொழில்களை ஆரம்பம் செய்வதைச் சிறிதுகாலம் தள்ளிப்போடுதல் உகந்த தாகும். பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடி நிலைகள் மாறிப் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணப்படும். கருத்து வேறுபாடு களுடன் இருந்துவந்த கணவன் - மனைவி உறவுகளில் உள்ள பிரச்சினைகள் நீங்கி ஒற்றுமையுடன் காணப்படுவீர்கள். கண், காது களில் கவனம் தேவை. மாணவர்கள் கல்வியில் மிகுந்த கவனமுடன் பயின்றுவருதல் நல்லதாகும். தந்தை, மகன் உறவுகளில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் குறைந்து மனநிம்மதி அடைவீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படவும்.

## கடகம்

பெண்களால் எதிர்பாராத ஆதாயங் களைத் தென்திசையில் இருந்து அடை வீர்கள். செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச்சொல்லுக்கு ஆளாக நேரிட இருப்பதால் நண்பர்களிடம் கவனமாகப் பழகுவது சிறந்தது. நீண்டகாலமாகத் தடைப்பட்டுவந்த திருமண விசயமாக நல்ல முடிவுகள் கிடைக்கலாம். மற்றவர்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்களை கடன்கொடுத்து ஏமாற்றம் அடையாதீர்கள். பிள்ளைகளால் எதிர்பாராத சில தொல்லைகள் வந்துசேர வாய்ப்பு உள்ளதால் மிகுந்த கவன-முடன் பார்த்துக்கொள்ளுதல் நல்லது. கணவன் - மனைவி உறவுகள் நன்றாக இருக்கும்.

## சிங்கம்

வராத கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் சம்பந்தமாக வீண் பிரச்சினைகள் உருவாகலாம். காணாமற் போன பொருட்கள் காவல்துறையினரின் உதவி யால் திரும்பக் கிடைக்கும். தொழிலாளர்களுடன் முன்கோபத்தை தவிர்த்து எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லது. குலதெய்வ ஆலய வழிபாடுகள் செய்துவருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு மனநிம்மதியை அடைவீர்கள். வெளிநாடு சென்றுவருதல் போன்ற புதிய முயற்சிகளுக்காக கடன்கேட்டு எதிர்பார்த்து இருந்த பணம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. மனஉற்சாகத்துடன் பெரிய மனிதர்களின் சந்திப்பின்மூலம் காரியங்களைச் சாதித்துக்கொள்ளுவீர்கள்.

## கன்னி

தீராத நோய்களுக்குப் புதிய முறை மருத்துவங்களின்மூலமாக நோய்தீர வாய்ப்புள்ளது. பிரிந்துபோன பழைய உறவுகள் மீண்டும் தொடரலாம். மாணவர்கள் கல்விபயிலும் இடங்களில் வீண் பழிச்சொல்லுக்கு ஆளாகநேரி டும் என்பதால் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லதாகும். அரசியல்வாதிகளின் மூலமாக எதிர்பார்த்து இருந்த உதவிகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. உத்தியோகத் துறையினருக்குப் பதவி உயர்வுகளும் பணி இடமாற்றங்களும் ஏற்படலாம். கண்களில் கவனம் தேவை. மனைவியின் உடல் நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவச் செலவுகள் உண்டாகும். கணவன், மனைவி உறவுகள் சுமாராக காணப்படும்.

## துலாம்

வெளிநாட்டில் இருந்து எதிர்பார்த்த பணஉதவிகள் மற்றும் நல்ல செய்திகள் வந்துசேரும். வங்கிகள்மூலமாக எதிர்பார்த்து இருந்த கடன்கேட்டு இருந்த பணங்கள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் விட்டுக்கொடுத்து போவ தின் மூலம் சில ஆதாயத்தை அடைவீர்கள். சொத்து சம்பந்தமான விசயங்களில் இருந்துவந்த மனக்கசப்புகள் குறைந்து ஒற்றுமை உண்டாகும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகவும் கவனமாகப் பேசிப்பழகுதல் நல்லது. கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். தந்தை வழிச்சொத்துக்களில் இருந்துவந்த பிரச்சினைகள் சற்று குறையும். குலதெய்வ ஆலய வழிபாடுகள் செய்துவருவது சிறந்ததாகும்.

## விருச்சிகம்

அடிமையாட்களால் எதிர்பாராத ஆதாயங்களும் மனமகிழ்ச்சியும் ஏற்படும். வேலை இல்லாதவர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். வங்கிகள்மூலமாக வெகுநாட்களாக எதிர்பார்த்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்பக் கை வந்துசேரும். அரசியல்வாதிகளால் எதிர்பார்த்து இருந்த ஆதாயம் கிடைக்க கூடிய வாய்ப்பு உள்ளது. சூதாட்டங்களில் பணம் பொருட்கள் ஏமாற்றம் அடையாமல் எச்சரிக்கையுடன் இருத்தல் நல்லது. வியாபாரிகள், ஆலயங்களில் பணிபுரிபவர்கள், பொதுநலத் துறைகளைச் சார்ந்துள்ள பணியாளர்கள் ஆகியோர்கள் இலாபம் அடைவார்கள்.

## தனுசு

அண்டை அயல் வீட்டுக்காரர் களுடன் வீண் பிரச்சினைகள் உருவாகலாம். திருட்டுப் போன பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். வெளிநாட்டில் இருப்பவர்கள் நீண்டகால நினைவுகளாக இருந்த தாய்நாட்டிற்கு சென்றுவர் வாய்ப்பு உள்ளது. நீண்டகாலமாக வராத கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் நண்பர்களின் உதவி யால் திரும்பக் கிடைக்கும். கூட்டுத்தொழில் செய்வதற்கான முயற்சிகளுக்காக எதிர்பார்த்து இருந்த பணம் கை வந்துசேரும் காலமாகும். குடும்பத்தில் நீண்டகாலமாகத் தடைப்பட்டுவந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நிறைவேறுவதற்காக புதிய கடன்கள் வாங்குவீர்கள்.

## மகரம்

வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து இருந்த பண உதவிகள் கிடைக்கலாம். வீடு வாகனங்களை பழுதுபார்ப்பதன்மூலம் பொருட் செலவுகள் உண்டாகும். உடம்பில் கண், காது களில் கவனமுடன் இருக்கவும். காதல் சம்பந்த மான பெண்கள் விசயங்களில் மிகுந்த எச்சரிக்கை யுடன் நடந்துகொள்வது நன்றாகும். குடும்பத்தில் இருந்துவந்துள்ள மருத்துவச் செலவுகள் சற்றுக் குறைந்து காணப்படும். பழைய கடனை அடைக்க முயற்சி செய்வீர்கள். நிலம் சம்பந்தமான பிரச்சினைகளில் நல்ல முடிவுகள் கிடைக்கும். நீண்டகாலமாகத் தடைப்பட்டுவந்த சகோதர சகோதரிகளின் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காக நடைபெற வாய்ப்பு உள்ளது.

## கும்பம்

உற்றார் உறவினர்களின் திடீர்வரவு களால் மனநிம்மதியுடன்கூடிய பொருட்செலவுகள் உண்டாகும். பொதுநலத் தொண்டுகளில் பிரிய முடன் ஈடுபட்டு நற்பெயர், புகழ் அடைவீர்கள். பழுதுபட்ட ஆலயங்களை மற்றும் வீடுகளைப் புதுப்பிப்பதற்கான முயற்சிகளுக்காகப் புதிய கடன்வாங்குவீர்கள். நண்பர்களால் வீண் பிரச் சினைகளும், மனநிம்மதிக் குறைவும் ஏற்பட இருப்பதால் எச்சரிக்கையுடன் பழகிவருதல் சிறந்தது. பெண்களின் விசயங்களில் செய்யாத குற்றங்களுக்காக அவப்பெயர் ஏற்படலாம். மற்றவர்களுக்காக உதவுவதாக எண்ணி வீண் பிரச்சினைகளில் மாட்டிக்கொண்டு மனநிம்மதி இழக்கவேண்டாம்.

## மீனம்

தாயின் உடல்நிலையில் இருந்து வந்த பாதிப்புகள் சற்று குறைந்து காணப் படும். சகோதர சகோதரிகளுடன் இருந்துவந்த நாட்பட்ட மனக்கசப்புகள் தீர்ந்து ஒற்றுமை அடைவீர்கள். குடும்பத்தில் களவுபோன பொருட்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் உதவியால்திரும்பக்கிடைக்கும். பிள்ளைகளுக்கு உடல்நிலையில் வந்த பாதிப்புகளால் வெளியூர் பயணங்களும் மருத்துவச்செலவுகளும் உண்டா கும். புதியதாக வீடு நிலங்கள் வாங்குவதற்கான முயற்சிகளில் வெற்றிபெறுவீர்கள். மற்றவர்களின் விசயங்களில் அநாவசியமாகத் தலையிட்டு வீண் பிரச்சினைகளில் மாட்டிக்கொண்டு மனநிம்மதி இழக்காதிருங்கள்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)




## மன அழுத்தத்தில் இருந்து விடுபட

நாட்டின் பிரதமரைக் கேட்டால், தான் மன அழுத்தத்தில் இருப்பதாகக் கூறுவார். அலுவலகத்தில் எளிமையான வேலைகளைச் செய்யக்கூடிய கடைநிலை ஊழியரைக் கேட்டால், அவரும் தான் மன அழுத்தத்தில் இருப்பதாகக் கூறுவார்.

இவர்களின் மன அழுத்தங்களை போக்குவதற்கு யாரால் என்ன செய்ய முடியும். இது அவ்வாறிருக்கையில், இங்கிலாந்தில் மாணவர்களுக்கு ஏற்படும் மன அழுத்தத்தை போக்க உதவும் வகையில் நாய்க்குட்டிகளுடன் கொஞ்சி விளையாட தனி அறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாம்.

இங்கிலாந்தின் மத்திய லங்காஷயர் பல்கலைக்கழகத்தில் பரீட்சைகள் நெருங்கிவருகின்றதாம். எனவே மாணவர்கள் நீண்டநேரம் நூலகம், கணினி முன் அமர்ந்து படிப்பதால் பல நேரங்களில் தீவிர மன அழுத்தத்தால் பாதிக்கப்படுகிறார்கள். இதனை தவிர்ப்பதற்காக பல்கலைக்கழகத்தில் தனியாக நாய்க்குட்டிகளை கொண்ட தனி அறையை வடிவமைத்து உள்ளனர் மாணவ சங்கத்தினர். நாய்க்குட்டிகளுடன் விளையாடுவதற்கு 1.5 பவுண்ட் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இந்த தொகை முழுவதும் பொது சேவைக்கு பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நாய்க்குட்டிகளுக்கு போதுமான ஓய்வு அளிக்கப்படும் எனவும் மாணவர்கள் கூறியுள்ளார்கள். சமீபத்தில் ஜப்பானில் நடத்தப்பட்ட ஆய்வில், நாய்கள் உட்பட செல்லப் பிராணிகளை கொஞ்சும்போது மனிதர்கள் மன அழுத்தத்தில் இருந்து விடுபடுவதாக தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது.





## கோவப்படாதே சகோதரா

ஓராண்டில் தன் உடல் எடையில் 153 கிலோவைக் குறைத்து ஜேம்ஸ் பாண்ட் சாதனை படைத்துள்ளார். அதன்மூலம் அவர் தற்போது உயிர் வாழும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்.

சுமார் 293 கிலோ உடல் எடைகொண்ட ஜேம்ஸ் தனது 16ஆவது வயது முதல் நொறுக்குத் தீனி பழக்கத்துக்கு அடிமையானார். ஒரு நாளைக்கு சுமார் 18 சிப்ஸ் பைக்கெட்டுகளும், 12 லீற்றர் ஒரேஞ்சு பழச்சாறும் எடுத்துக்கொள்ளும் வழக்கம் உடையவராக இருந்தார். இதனால் அவரின் உடல் எடை வேகமாக அதிகரித்தது. இந்நிலையில், ஒரு நாள் அவர் தனது அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது மயக்கமடைந்தார்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவரை சோதித்த மருத்துவர்கள், ஜேம்ஸ் பாண்டை உடனடியாக எடை குறைக்க அறிவுறுத்தினர். இல்லையெனில் அவர் கொஞ்சநாட்களே வாழ்வார் என்றும் எச்சரித்தனர்.

இதனால் கலக்கமடைந்த ஜேம்ஸ், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அறுவை சிகிச்சை மேற்கொண்டார். அதன்மூலம், ஒரே ஆண்டில் 153 கிலோ எடை குறைத்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது, "நான் கோபப்படும்போதெல்லாம் நிறைய சாப்பிடுவேன். அது எனது கோபத்தைத் தணிப்பதாக இருக்கும். அதனால் உடல் எடை அதிகரித்து அவதியுற்றேன்.

தற்போது உடல் எடையை கணிசமாகக் குறைத்திருப்பதால் என்னால் நடக்க முடிகிறது. சைக்கிள் ஓட்ட முடிகிறது. இதனால் என் வாழ்க்கையே மாற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறது" என்றார்.



திறபோது உடல் எடையை கணிசமாகக் குறைத்திருப்பதால் என்னால் நடக்க முடிகிறது. சைக்கிள் ஓட்ட முடிகிறது. இதனால் என் வாழ்க்கையே மாற்றத்துக்கு உள்ளாகியிருக்கிறது" என்றார்.



## கோவப்படாதே சகோதரா



## எல்ஃபி

கனடா-பிரிட்டிஷ் கொலம்பியாவை சேர்ந்த 22வயது மாணவன் கிறிஸ்ரியன் லிபிளாங் தாய்லாந்தில் உள்ள ஹோ பன்கான் தீவிற்கு விடுமுறையில் சென்றிருந்தான். அங்கு தங்கியிருந்த காலத்தில் யானைகளிற்கு உணவூட்டுதல் அவைகளுடன் சேர்ந்து ஒளிப்படம் எடுத்தல் போன்ற பொழுது போக்குகளிலும் ஈடுபட்டிருந்தான்.

ஒரு நாள் யானைகளிற்கு வாழைப்பழம் தேடி சென்றான். அப்பொழுது அவனது உயர்நுட்ப கம்கோடர் இயக்கத்தில் இருந்துள்ளது. அதனால் தொடர்ந்து படங்களை எடுக்க முடியும். யானைகளில் ஒன்று தனது துதிக்கையினால் தனது கம்கோடரை எடுத்து கண்கவர் 'elphie'-யை பிடித்துள்ளது.

லிபிளாங் போட்டோவை Instagram தளத்தில் வெளியிட்டுள்ளான்.

யானை தனது துதிக்கையால் கமராவை எடுத்து இத்தகைய ஒரு சுய புகைப்படத்தை எடுத்திருப்பது நினைத்து பார்க்கமுடியாத ஒன்று எனப் பரவலாக பேசப்படுகின்றது.



## அச்சம் தாண்டி உச்சம் தொடு

கனடா-கடல் மட்டத்திலிருந்து 5,895 அடிகள் உயரமுடைய தன்சானியாவில் உள்ள கிளிமஞ்சாரோ மலையில் ஏற மிசிசாகாவை சேர்ந்து 10வயது கெவின் மொன்சூர் என்ற 10வயது சிறுவன் திட்டமிட்டுள்ளான். யூன் மாதம் 19-ந்திகதி மொன்சூர் தனது பயணத்தை ஆரம்பிக்க உள்ளான்.

இச்சிறுவன் மலையின் சிகரத்தை அடைவானேயானால் மொன்சூர் கனடாவின் முதலாவதும் இதுவரை ஏறிய இளம் மலை ஏறுபவர்களின் வரிசையில் ஐந்தாவது இடத்தை பெறுவான் எனவும் கூறப்படுகின்றது. ஒரு நல்ல காரணத்திற்காக மொன்சூர் இந்த முயற்சியில் ஈடுபடுகின்றான். ஒன்ராறியோவில் உள்ள மஸ்கோகா என்ற இடத்தில் அமைந்துள்ள புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களிற்கான ஒரு கோடை முகாமான Camp Oochigeas-ற்கு 50,000 டொலர்களை சேகரிப்பதே இவனின் நோக்கமாகும்.

மொன்சூர் தனது தாய் மற்றும் தந்தை ஆகியவர்களுடன் கிளிமஞ்சாரோ ஏறுகின்றான். தனது இலக்கை அடைவதற்கு தன் பெற்றோர் மிகவும் உதவியாக இருப்பதாக கூறியுள்ளான். மொன்சூரின் மலை ஏறும் முயற்சிக்கு ஆதரவு தெரிவிக்க விரும்புபவர்களும் Camp Oochigeas முகாமிற்கு நன்கொடை வழங்க விரும்புபவர்களும் அமைப்பின் இணையத்தளத்தில் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.



இப்பத்திரிகை 373, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டி-டி எண்டபிரைஸஸ் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் மே 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 14 வியாழக்கிழமை (28.05.2015) பக்கங்கள் IV ஓசை – 240

## ஜனாதிபதியின் நடவடிக்கை வரவேற்கத்தக்கது காணாமற்போனோர், அரசியல் கைதிகள் விடயத்தில் விசேட ஏற்பாடுகள் தேவை

### ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். புங்குடுதீவு, பாடசாலை மாணவி வித்தியா சிவலோகநாதன் படுகொலை தொடர்பில் சிறப்பு நீதிமன்றத்தினூடாக விசாரணையை மேற்கொண்டு, குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும் எனத் தெரிவித்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, இது அம்மாணவிக்கு அளிக்கப்பட்ட கௌரவமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்துள்ள டக்ளஸ் தேவானந்தா, மேற்படி பாடசாலை மாணவி படுகொலை தொடர்பில் நேரடியாக யாழ்ப்பாணம் வந்து, அம்மாணவியின் குடும்பத்தாருக்கு தனது அனுதாபங்களைத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, அக்

IV ஆம் பக்கம் பார்க்க

## தேர்தலுக்கு தயார்

(கொழும்பு)


நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால், 52 தொடக்கம் 60 நாட்கள் கால எல்லைக்குள் தேர்தல் நடாத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பொதுத் தேர்தலொன்றை நடத்துவது குறித்து இதுவரை யாரும் தமக்கு உத்தியோக

IV ஆம் பக்கம் பார்க்க

# கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் அறிவுபூர்வமான செயற்பாடல்ல



### வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

இரணைமடுக் குளத்திலிருந்து வெளியேற்றப்படும் மேலதிகமான நன்னீரினை சுண்டிக்குளம் பகுதியில் வைத்து கடலில் கலக்க விட்டுவிட்டு மீண்டும் மருதங்கேணி கடலில் இருந்து கடல்நீரை பெற்று குடிநீராக்கும் திட்டம் ஒரு அறிவுபூர்வமான செயற்பாடாக அமையாது என வடமாகாண சபையின் எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு குடிநீரை விநியோகிப்பதற்காக தயாரிக்கப்பட்ட 2006 ஆம் ஆண்டின் அறிக்கையின்படி நீரை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச்செல்ல ஆயிரம் லீற்றருக்கு 7 ரூபா 97 சதம் என அந்த அறிக்கையில் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

ஆனால் கடல்நீரை குடிநீராக மாற்றுகின்ற திட்டத்திற்காக ஆய்வு அறிக்கையின்படி ஆயிரம் லீற்றருக்கு உற்பத்திச் செலவு 120 ரூபா என குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு நன்னீரை கடலில் கலக்க விட்டு விட்டு பின்னர் கடல்நீரை நன்னீராக்குவது அதுவும் மிக அதிகளவான செலவில் செய்யும் இத்திட்டம் ஒரு அறிவுபூர்வமான செயல் அல்ல. இது எத்தனையோ மடங்கு செலவீனமானது.

இந்தியாவில் இவ்வாறான செயற்பாடுகள் செய்கிறார்கள்.

IV ஆம் பக்கம் பார்க்க

## யாழில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டம்; முதல்வர் தலைமையில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் முன்னெடுக்கப்படவிருக்கும் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் தொடர்பான விசேட கலந்துரையாடல் வடக்கு மாகாணசபையின் ஏற்பாட்டில் நேற்று யாழ். பொது நூலக வளாகத்தில் அமைந்துள்ள வடமாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றுள்ளது.

இரணைமடுக்குளத்தில் இருந்து யாழ் குடாநாட்டுக்குத் தண்ணீரை விநியோகிப்பதில் எழக்கூடிய பல்வேறு பிரச்சினைகளையும் கருத்திற் கொண்டு, வடமாகாணசபை குடாநாட்டுக்கான குடிநீர்த்தேவையைப் பூர்த்தி செய்வதற்கான மாற்று யோசனையாகக் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை முன்வைத்திருந்தது.

இத்திட்டத்தை ஆசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கை தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையும் ஏற்றுக்

IV ஆம் பக்கம் பார்க்க

## 14 கட்சிகளுடன் இணைந்து ஒரே சின்னத்தில் போட்டி

### சுதந்திரக் கட்சி பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் 14 கட்சிகளுடன் கூட்டணி அமைத்து களமிறங்க தீர்மானித்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு

IV ஆம் பக்கம் பார்க்க

## யாழ். மேல் நீதிமன்ற நீதிபதியாக இளஞ்செழியன் நியமனம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக குற்றவியல் வழக்குகள் மற்றும் குடியியல் மேன்முறையீட்டு வழக்குகளுக்கான மாகாணம் மற்றும் மாகாண மேல் நீதிமன்ற நீதிபதியாக எம்.இளஞ்செழியன் பிரதம நீதியரசர் கே.சிறிபவனால் நியமிக்கப்பட்டுள்ளார். யூன் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சுண்டிக்குளி பாடசாலை மாணவி கிருஷாந்தி கொலை வழக்கில் முன்வைக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட செம்மணி புதைகுழி வழக்கில் யாழ்ப்பாணத்தில் விசேட நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டு,

IV ஆம் பக்கம் பார்க்க

## யாழ். குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்ற ஆணையாளராக கனகா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற ஆணையாளராகக் கடமையாற்றி வந்த திருமதி கனகா சிவபாதசுந்தரம் யாழ்ப்பாணம் (சிவில்) குடியியல் மேன் முறையீட்டு மேல் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

யூன் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக நீதிபதி எம்.இளஞ்செழியன் நியமிக்கப்பட்டமை



யைத் தொடர்ந்தே இவரும் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதிச் சேவையில் கடந்த 23 வருடங்களாக சேவையாற்றி வரும் இவர், மன்னார்

IV ஆம் பக்கம் பார்க்க

# மக்களுக்காக பணி செய்கின்ற அரசியல் போராளிகள் நாம்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



(கிளிநொச்சி)

மக்களை வைத்து அரசியல் செய்பவர்களுக்கு மத்தியில் மக்களுக்காக அரசியல் பணி செய்கின்ற அரசியல் போராளிகளாக செயற்பட்டு வருகின்றோம் என நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பரந்தன் பிரதேச இளைஞர்கள் மற்றும் மக்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

மக்களுக்காக அரசியல் செய்பவர்கள் எப்பொழுதும் களத்தில் இறங்கி கடுமையாக உழைபபார்கள்,செயற்படுகின்றவர்களாக இருப்பார்கள் மக்களின் நலன்களுக்காக மத்தியில் எந்த தரப்பு ஆட்சிக்கு வந்தாலும் அவர்களுடன் பேரம் பேசி மக்களுக்கான காரியங்களை சாதித்துக் கொள்வார்கள் இது மக்களின் நலன்களில் அக்கறையுள்ள மக்களை நேசிக்கின்றவர்களால் மட்டுமே முடியும்.

எங்கள் கட்சியின் சரியான அரசியல் தலைமைத்துவம் காரணமாகவே யுத்தத்தின் பின்னரான காலத்தில் கிளிநொச்சியில் மாற்றத்தை ஏற்படுத்த முடிந்தது முக்கியமான இந்தக் காலகட்டத்தில் மாவட்டத்தில் எம்மால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்கள்,அதற்காக நாம் பெற்றுக்கொண்ட நிதி யீட்டங்கள் என்பனவே கிளிநொச்சி ஏனைய யுத்தப்பாதிப்புக்களை சந்தித்த பிரதேசங்களை விட முன்னேற்றம் அடைந்த பிரதேசமாக மாறியிருக்கிறது.

ஆனாலும் இன்னும் பல தேவைகள் உள்ள மாவட்டமாக கிளிநொச்சி காணப்படுகிறது அந்த தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு மக்களுக்கு ஒரு நிரந்தர வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் போதே கிளிநொச்சி தன்னிறைவான பிரதேசமாக மாற்றம் அடையும் அதற்காக இன்னும் சில வருடங்களுக்கு உழைக்க வேண்டும். அந்த உழைப்பு என்பது மக்களின் நலனில் அக்கறையுள்ள, மக்களை நேசிக்கின்ற மக்கள் பிரதிநிதிகளால் மட்டுமே முடியும். வெறும் மேடைப் பேச்சுக்களாலும்,பத்திரிகை அறிக்கைகளாலும் இதனை மேற்கொள்ள முடியாது.

கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்தவரை இளம் சமூகத்திற்கான வேலைவாய்ப்பின்மை பெரும் பிரச்சினையாக காணப்படுகிறது. அறிவியல் நகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இரண்டு ஆடைத் தொழிற்சாலைகள் உள்ளிட்ட ஒரு சில தொழிற்சாலைகள் மட்டும் போதாது இன்னும் பல தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் அதன் மூலம் பல வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தவேண்டும் இதெல்லாம் அறிக்கைகள் மூலம் பெற்றுக்கொள்ள முடியாது இதற்காக கடுமையாக உழைக்க வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தில் எங்களின் அடுத்த கட்ட இலக்கு அதுவாகவே இருக்கிறது. மக்களின் வாழ்க்கையில் நிரந்தர மாற்றத்தை கொண்டுவர வேண்டும் என்றால் இதனைச் செய்ய வேண்டும்.

தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்திற்கும் சரி,முன்னேற்றத்திற்கான அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் சரி எந்த தியாகங்களும் செய்யாதவர்கள் இன்று தியாகிகளின் கல்லறையில் ஏறி நின்று போலித் தேசியம் பேசி அரசியல் செய்து வருகின்றார்கள். இவ்வாறான போலித்தேசிய வாதிகளால் மக்களின் வாழ்க்கையில் அவலத்தை தவிர வேறு எதுவும் ஏற்படப்போவதில்லை. மக்கள் தெளிவாக சிந்தித்து தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ளும் போதே நல்ல மாற்றம் ஏற்படுமே தவிர மக்களின் மாற்றம் பெறாத அரசியல் சிந்தனைகளால் எதுவுமே மாறப்போவதில்லை எனவும் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் மனோகரன், பளை பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன், கிளிநொச்சி மாவட்ட ஓய்வு நிலை உதவி கலவிப்பணிப்பாளர் பத்மநாதன் பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டுக்கழகத்தின் தலைவர் செயலாளா உறுப்பினர்கள், கமககார அமைப்பின் தலைவர் ந.மகேந்திரன்,கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் க.மகேந்திரன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தென்கோவை அருள்மிகு கற்பகப் பிள்ளையார் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தினமும் காலை 8 மணிக்கு அபிசேகம், 9 மணிக்கு மூலஸ்தான பூஜை, 9.15இற்கு ஸ்தம்ப பூஜை, 10 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று சுவாமி வீதியுலா இடம்பெறும்.

மாலை உற்சவம் பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமாகும். மூலஸ்தான பூசை இம்பெற்று தம்பபூசை நடைபெறுவதுடன் மாலை 6 மணிக்கு தெய்வீக பேருரை இடம்பெறுவதுடன் இரவு 7.00 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று சுவாமி வீதியுலாவும் நடைபெறும்.

எதிர்வரும் 10ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் மறு நாள் வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறுவதுடன் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் மாலை 5.00 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. சனிக்கிழமை மாலை பைவர் சாந்தியும், மறு நாள் ஞாயிற்றுக்கிழமை பிராயச்சித்த அபிசேகமும் இடம்பெறவுள்ளது.

# கணித பொது அறிவு வினாடி வினாப் போட்டி

(அச்சுவேலி)

யாழ்ப்பாண கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட கணித பொது அறிவு வினாடி வினாப் போட்டி நாளை மறுதினம் 30ஆம் திகதி காலை 09 மணி முதல் நடைபெறுமென யாழ்ப்பாண வலய கணித பாடத்திற்கான உதவிக்கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கணிதபாட பொது அறிவு வினாடி வினாப் போட்டிகள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. தரம் 6, 7 ஆகிய வகுப்புக்களுக்கு காலை 09 மணி முதல் 10 மணிவரையும், தரம் 8, 9 ஆகிய வகுப்புக்களுக்கு காலை 10.30 முதல் 11.30 மணிவரையும், தரம் 10, 11 ஆகிய வகுப்புக்களுக்கு மதியம் 12 மணி முதல் 01 மணி வரையும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுளதால் அன்றைய தினம் சம்பந்தப்பட்ட பொறுப்பாசிரியர்களை உரிய நேரத்திற்கு போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களை கலந்து கொள்வதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் கோட்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஏனைய விபரங்கள் பாடசாலை அதிபர்களுக்கு கடித மூலம் அனுப்பப்பட்டுள்ளது. (03)

# 30 அரசாங்க அலுவலர்களுக்கு வேள்ட் விசன் நிறுவனம் சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரம் மற்றும் குடிதண்ணீர் வழங்கலில் மாற்று ஆற்றல் உடையோருக்கு (விடேச தேவை) எவ்வாறு உதவலாம் என்ற இரு நாள் விசேட செயலமர்வில் பங்குபற்றிய 30 அரசாங்க அலுவலர்கள் வேள்ட் விசன் நிறுவனத்தினால் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

வேள்ட் விசன் நிறுவன அனுசரணையில் அதன் செயற்பாட்டு முகாமையாளர் ஆர். ஜெயலால்ட் அன்ரனி தலைமையில் இரு நாள் விசேட தேவையுடையவர்களுக்கு அரச நிறுவனங்கள் எவ்வாறு உதவ முன்வரலாம் என்ற செயலமர்வு யாழ். ரில்கோ விடுதியில் அண்மையில் இடம்பெற்றது.

இப்பயிற்சிப்பட்டறையில் வலி. மேற்கு பிரதேச சபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட அலுவலர்கள், பிரதேச செயலக அலுவலர்கள், தேசிய நீர் வழங்கல் சபை, கல்வி அலுவலகம் மற்றும் கழக மட்ட அமைப்புக்களைச் சேர்ந்த 30 பேர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவன (ஓகன்) தலைவர் வெ. சுப்பிரமணியம் விரிவுரையாற்றினார்.

அத்துடன் விசேட தேவையுடையவர்களின் சிறப்பு செயற்பாடுகள், அவர்களினால் உள்நாட்டிலும் - வெளிநாட்டிலும் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்களை காணொளி மூலம் விளக்கி சிறப்பு விரிவுரை செய்தார்.

பயிற்சி ஆரம்பத்திலும் - முடிவிலும் விசேட முன்சோதனைகள் முன்வைக்கப்பட்டு ஒவ்வொருவரினதும் மீத்திறன் அளிககப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ரிவோஸ III திட்டத்தின் ஊடாக பொது மக்களுக்கும், விசேட தேவை உடையவர்களுக்கும் குடி தண்ணீர், மலசலகூடம் மற்றும் விசேட தேவைகளில் எவ்வாறு உதவலாம் என கருத்துப் பரிமாறறம் செய்யப்பட்டு தரவுகள் பகுபாய்வு செய்யப்பட்டு பயிற்றப்பட்டன.

இந்நிகழ்வில் வேள்ட் விசன் நிறுவன இணைப்பாளர் எவ். அலெக்ஸ் ரொச், கண்காணிப்பு திட்ட நிபுணர் சுரேஷ்குமார் மற்றும் ஓகன் நிறுவன விரிவுரையாளர் வெ. சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர். (92)

## பொங்கல் விழாவும் தீ மிதிப்பும்

(நவீண்டில்)

நவீண்டில் கப்பியம் தோட்ட பெரியஞ்சீமா ஞானவைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழாவும் தீ மிதிப்பு நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை இரவு 8.00 மணியளவில் நடைபெறவுள்ளதுடன் இதில் அடியவர்கள் கலந்து அருள் பெறும் வண்ணம் ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர்.

# அழகியல் போட்டிகள்

(அச்சுவேலி)

மாணவர்களுக்கான வலய மட்ட அழகியல் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணிக்கு நல்லூர் ஸ்தான சீ.சீ.த.க.பாடசாலையில் நடைபெறுமென யாழ்ப்பாண கல்வி வலயத்தின் அழகியல் பாடத்திற்கான உதவிக்கல்விப் பணிப்பாளரினால் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே ஒவ்வொரு பாடசாலையும் தமது பாடசாலையிலிருந்து பங்கு பற்றும் மாணவர்களை பொறுப்பாசிரியருடன் உரிய நேரத்திற்கு கலந்து கொளவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (03)

# முத்துமாரி அம்மன் ஆலய கொடியேற்றத் திருவிழா

(அராலி)

வரலாற்று பிரசித்தி பெற்ற அராலி - ஆவரம்பிட்டி முத்துமாரியம்மன் ஆலய கொடியேற்றத் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு விசேட பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பமாகின்றது.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 3ஆம் திகதி புதன்கிழமை விசேட கப்பல் திருவிழா (6ஆம் திருவிழா) இடம்பெறும்.

8ஆம் திருவிழாவின்போது கொடிக்கப்பத்திற்கு பல நூற்றுக் கணக்கான பலாக்காய்கள் வெட்டப்பட்டு படைக்கப்படுவதுடன் அன்று மாலை கிராமிய சுவாமி ஊர்வலம் இடம்பெறுவதுடன் மக்கள் மாலை முதல் மறுநாள் காலை வரை பொங்கல் வழிபாடுகளும் இடம்பெறும்.

இறுதியாக ஆறாம் திகதி சனிக்கிழமை கொடியிறக்க விழா இடம்பெறும் என ஆலய பரிபாலகர் தெரிவித்தார். (92)

# பாரதிபுரம் கிராமத்தில் முன்பள்ளி அமைக்க கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, பாரதிபுரம் கிராமத்தில் முன்பள்ளியொன்றை அமைத்துத் தருமாறு விசுவமடு கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் பிரதேச செயலகத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

சுமார் 300 குடும்பங்கள் வசிக்கும் மேற்படி கிராமத்தில் முன்பள்ளி இல்லாமையால் இப்பகுதியைச் சேர்ந்த சிறார்கள் நீண்ட தூரம் சென்று கல்வி கற்கவேண்டிய நிலையுள்ளது. தூரத்தைக் கருத்திற்கொண்டு பல பெற்றோர் தங்கள் பிள்ளைகளை முன்பள்ளிக்கு அனுப்பாமல் உள்ளனர்.

இதனால் சிறுவர்கள் தங்கள் பால்யகால கல்வியை மேற்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. இதனைக் கருத்திற கொண்டு இந்தப் பகுதியில் ஒரு முன்பள்ளியை: அமைத்துத் தருமாறு அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

## குளங்களில் நீர் தாராளம்

கிளிநொச்சி மாவட்ட இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கைக்கான நீர் குளங்களில் தாராளமாகவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நவரத்தினம் சுதாகரன் தெரிவித்தார். கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் [illegible] நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்தில் இதனைத் தெரிவித்தார். மழை பெய்ததன் காரணமாக குளங்களின் நீர்மட்டம் உயர்ந்துள்ளன. சிறுபோக நெற்செய்கைக்கான நீர் குளங்களில் தாராளமாகவுள்ளன. ஆனாலும் நீர்ச்சிக்கனத்தினை விவசாயிகள் கடைபிடித்து பயிர்ச்செய்கையில் வெற்றிபெறுவது அவசியமெனவும் தெரிவித்தார். (160)

# ஆட்டக்காரியை தடைசெய்யுமாறு கிளி. விவசாயிகள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயச் செய்கையில், செய்கை பண்ணப்படும் ஆட்டக்காரி நெல் இனத்தை தடைசெய்ய வேண்டுமென கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்திலேயே விவசாயிகள் இந்தக் கோரிக்கையை முன் வைத்தனர்.


கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோகச் செய்கையில் விவசாயத் திணைக்களத்தினால் தடைசெய்யப்பட்டுள்ள ஆட்டக்காரி நெல்லினத்தை சில விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். ஆட்டக்காரி நெல்லினால் எரிபந்தம் எனப்படும் நோய் தொற்று ஏற்படுகின்றது.

இது ஆட்டக்காரி பயிரிடப்பட்ட வயலில் இருந்து மற்றைய வயல்களுக்கு விரைவாக பரவுகின்றது. இதனால் இந்த வகை நெல்லை பயிரிடுவதை முற்றாகத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரினர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த மாவட்டச் செயலாளர், ஆட்டக்காரி நெல்லினத்தை தடை செய்வதற்கு கமக்காரர் அமைப்புகள் தீர்மானங்களை எடுத்து அதனை மாவட்ட விவசாய சம்மேளனத்தின் ஊடாக மாவட்டச் செயலகத்துக்கு அறிக்கையிட்டு அதனை தடைசெய்வது தொடர்பான தீர்மானத்துக்கு வரமுடியும் என்றார்.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட சில மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு ஆட்டக்காரி நெல் அரிசி மீதுள்ள அதிக கேள்வி காரணமாக விவசாயிகள் அதனைப் பயிரிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (160)

# கௌரவிக்கப்பட்டார் மாணவி இசைப்பிரியா



(கிளிநொச்சி)

தமிழ்த்தினப் போட்டி 2015 பிரிவு இரண்டு பேச்சுப் போட்டியில் வடமாகாண மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்ட கிளிநொச்சி அம்பாள் குளம் விவேகானந்த வித்தியாலய மாணவி சிவாபிரபு இசைப்பிரியா நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமாரினால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

நேற்று பாடசாலைக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் இசைப்பிரியாவுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்ததோடு வாழ்த்துமடல் மற்றும் கற்றல் உபகரணத் தொகுதியினையும் வழங்கி வைத்தார். இதன் போது கருத்துத் தெரிவித்த அவர்,

அம்பாள்குளம் விவேகானந்தா வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலத்திற்குள் பல சாதனைகளை படைத்து வருகின்றமை மகிழ்ச்சி அளிக்கிறது. இசைப்பிரியா போன்று மேலும் பல மாணவர்கள் உருவாக வேண்டும். அதன் மூலம் இந்தப் பாடசாலைக்கும் பிரதேசத்திற்கும் பெருமை சேர்க்க வேண்டும் எனத் தெரிவித்த அவர், கல்வியில் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட இப்பிரதேச மாணவர்களுக்கு தற்போது வாய்ப்புகள் கிடைக்கப்பெற்ற நிலையில் சாதனைகளை படைத்து வருகின்றமை மகிழ்ச்சியளிக்கிறது எனவும் குறிப்பிட்டார்.

மாவட்ட மட்டம், மாகாண மட்டம் என விவேகானந்தா வித்தியாலயம் பேசப்படுகிறது. இது தேசிய மட்டம் வரை செல்ல வேண்டும் என்ற தனது விருப்பத்தையும் வெளிப்படுத்திய அவர்,

இறுதிப் போரில் தந்தையை இழந்த நிலையில் தாயின் வழி நடத்தலில் சிறப்பாக கல்வி கற்று வரும் இசைப்பிரியாவுக்கு தனது சிறப்பான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டார்.

இதன் போது பாடசாலை முதல்வர் திருமதி மாணிக்கவாசகர், ஆசிரியர்கள் வகுப்பு மாணவர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# யுத்தக் குற்றங்களில் இராணுவத்தினர் ஈடுபடவில்லை

## என்கிறார் பொன்சேகா

இராணுவத்தினர் யுத்தக் குற்றங்களில் ஈடுபடவில்லை என முன்னாள் இராணுவத் தளபதி, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, தெரிவித்துள்ளார்.

த கார்டியன் ஊடகத்திற்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

தனது மனசாட்சி தெளிவாக உள்ளதாக கூறியுள்ள அவர், தான் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க போர் குற்றங்கள் பற்றி விசாரணையை வரவேற்பதாகத் தெரிவித்துள்ளார்.

தான் உள்ளிட்ட ஒட்டுமொத்த இராணுவமும் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை என்பதற்கு தன்னால் உத்தரவாதம் வழங்க முடியும்.

தன்னுடைய கட்டளையின் பேரில் பாலியல் துஷ்பிரயோகங்களோ, சித்திரவதைகளோ இடம்பெறவில்லை. ஒரு சில குற்றச்சாட்டுகள் காணப்படுவதாகவும் அது தொடர்பில் தெளிவுபடுத்திக்கொள்ள முடியும்.

பொன்சேகா ஒரு யுத்த வீரர் என ஊடகங்கள் குறிப்பிட்டாலும், ஒரு சிலர் அவரை ஒரு போர்க் குற்றவாளி என அடையாளப்படுத்த முயல்வதாகவும், எனினும் அவரது மனசாட்சி சுத்தமாக இருப்பதாக அரசாங்கம் வலியுறுத்துவதாகவும் த கார்டியன் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளது. தனது எண்ணங்கள் தெளிவாக இருப்பதாகவும், அனைத்து விடயங்களையும் சரியாக செய்த நம்பிக்கை தனக்குள்ளது.

தனது வேலை பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் நாட்டின் இறைமையை காப்பாற்றுவது எனவும் அதனை தான் விதிமுறைகளுக்கு அமைய செய்து முடித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சிறுபோக மானிய உரத்தை உடன் வழங்க உத்தரவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன்குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மானிய உரத்தினை உடனடியாக வழங்குமாறு கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக்கூட்டத்திலேயே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் குளத்தின் கீழான விவசாயிகள் சிறுபோக நெற்செய்கையில் தாம் ஈடுபட்டு நாற்பது நாட்களை கடந்த நிலையிலும் அக்கராயன் கமநலசேவை நிலையமூடாக வழங்கப்படுகின்ற மானிய உரம் கிடைக்கப்பெறவில்லையெனவும், அதனைப் பெற்றுக் கொள்வதற்கான வழியினை மாவட்டச் செயலர் ஏற்படுத்தவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில் அக்கராயன் கமநலசேவை நிலையமூடாக ஒருவாரத்திற்குள் சகல உரங்களும் வழங்கப்படவேண்டுமெனவும் மாவட்டச்செயலர் உத்தரவிட்டுள்ளார். (160)

### - வெசாக் போட்டியில் -

# வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரங்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வெசாக் தினத்தை முன்னிட்டு கடந்த 3, 4 ஆம் திகதிகளில் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வெசாக் வெளிச்சக்கூடு அமைத்துக் காட்சிப்படுத்தும் கைவினைப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய பாடசாலைகளின் விபரங்கள் பட்டியல் படுத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

சர்வமத ஒற்றுமையையும், சமாதானத்தையும் நிலைநிறுத்தும் வகையில் சர்வமத பெரியார்களினால் ஒருங்கமைத்து நடாத்தப்பட்ட இப்போட்டிகளில் யாழ்ப்பாண கல்வி வலயத்தில் முதலாம் இடத்தினை கோப்பாய் நாவலர் வித்தியாலயமும், இரண்டாம் இடத்தை அச்சுவேலி சென். திரேசா மகளிர் கல்லூரியும், மூன்றாம் இடத்தை, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையும் பெற்றுள்ளன.

மேலும் இப்போட்டியில் விருப்புடன் பங்குபற்றி ஆர்வத்தை வெளிக்காட்டிய அனைத்துப் பாடசாலைகளுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும் இப்போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய பாடசாலைகளுக்கும், பங்குபற்றிய பாடசாலைகளுக்குமான பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகள் எதிர்வரும் யூன் மாதம் 2 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற விருப்பதால் பாடசாலை அதிபர், ஆசிரியர் மற்றும் மாணவர்கள் இருவர் வீதம் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினால் வலயக்கல்வி அலுவலகத்தினூடாக பாடசாலைகளுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர், கல்விப் பணிப்பாளர், வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (03)

# தமிழ் பொலிஸார் பற்றாக்குறை நிவர்த்திக்க ஆட்சேர்ப்பு

வடக்கு மாகாணத்திலுள்ள தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையினை நீக்கும் பொருட்டு பொலிஸ் திணைக்களத்தினால் ஆட்சேர்ப்பிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ.ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் தமிழ் பொலிஸ் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனால் பொலிஸ் நிலையங்களுக்கு வரும் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். சிங்கள மொழி தெரியாதவர்கள் அநேகமானவர்கள் பொலிஸ் நிலையங்களில் தங்களுடைய சேவையினைப் பெற்றுக்கொள்ள வரும்போது நிலையங்களில் தமிழ் பொலிஸார் குறைவாகவே இருக்கின்றனர்.

இதனால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே பொது மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு வடக்கு மாகாணத்தில் சேவையாற்றுவதற்கு பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் உதவிப் பொலிஸ் பரிசோதகர்களை இணைப்பதற்கு பொலிஸ் திணைக்களம் நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

அந்த வகையில் கடந்த 15 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள், உதவிப் பொலிஸ் பரிசோதகர்கள் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன. குறித்த பதவிகளுக்கு இணைய விரும்புபவர்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் முன்வந்து விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதன் மூலம் தெரிவாகும் விண்ணப்பதாரிகள் மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்க முடியும்.

இவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்கள் பயிற்சிக்காலத்தின் பின்னர் வடக்கு மாகாணத்திலேயே தங்களுடைய சேவைகளை வழங்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புகையிலை எதிர்ப்பு தினம் யாழில் இன்று அனுஷ்டிப்பு

மே மாதம் 31 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் சர்வதேச புகையிலை எதிர்ப்புத் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

புகைத்தலால் மனித குலத்திற்கு ஏற்படும் தீங்குகளை வலியுறுத்தும் நோக்கில் உலக சுகாதார ஸ்தாபனத்தால் இத்தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தினத்தினை முன்னிட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9.00 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இத்தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் யாழ். மாவட்டத்தில் புகையிலைப் பொருட்களை விற்பனை செய்யாத வர்த்தக நிலைய உரிமையாளர்களைப் பாராட்டிய சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இதில் வடமாகாண சுகாதார அமைச்சர் பி.சத்தியலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

# சிறுபான்மையினரின் ஆதரவு இன்றி மகிந்தவை பிரதமராக்குவோம்

## உதயகம்மன்பில உறுதி

சிறுபான்மையினரின் ஆதரவு இல்லாமல் மகிந்தவைப் பிரதமராக்க முடியும் என்று துாய்மையான ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையின மக்களின் வாக்குகள் இல்லாமல் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் ஊடாக பிரதமராக்க முடியும். கடந்த ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு கிடைத்த வாக்குகள் இதனை உறுதிப்படுத்தியுள்ளன

சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெறவேண்டு மானால் மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க முடியாது என்று சிலர் கூறுகின்றனர்.ஆனால் மகிந்த ராஜபக்ச வெற்றிபெறுவதற்கும் பிரதமராக தெரிவு செய்யப்படுவதற்கும் சிறுபான்மையினத்தவரின் வாக்குகள் அவசியமில்லை.என்று அவர் கூறியிருக்கிறார்.

# பிரித்தானிய உயர்ஸ்தானிகர் யாழ்ப்பாணம் விஜயம்



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டயுரிஸ் நேற்று யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இந்த விஜயத்தின் போது, வடமாகாண முதலமைச்சரை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் பின்னர் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகனை யாழ். மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட பின்னர், முதன் முறையாக யாழ். மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகளை அறிந்து கொள்வதற்கும், நட்பு ரீதியான விஜயத்தினை மேற்கொண்டுள்ளதாகவும் உயர்ஸ்தானிகர் ஊடகங்களிற்கு கருத்துத் தெரிவித்தார். (25)

# பருத்தித்துறையில் மினி சூறாவளி

(கரணயாய்)

பருத்தித்துறை முனைப் பகுதியில் நேற்று மாலை சிறிய மினி சூறாவளியினால் ஒரு படகு சேதமடைந்ததுடன் மீனவர் ஒருவர் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டு மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

கரையோரமாக நிறுத்தி வைக்கப்பட்டு சேதமடைந்துள்ளதுடன் றோளர் படகு ஒன்று கடலினுள் இழுத்துச் செல்லப்பட்டதாகவும் இதனால் இப்படகில் இருந்த மீனவர் கடலில் வீழ்ந்துள்ளதாகவும் பின்னர் மீட்கப்பட்டு மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (18)

# பசிலின் விள்க்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு அடுத்த மாதம் 10 ஆம் திகதிவரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. கடுவெல நீதிமன்ற நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட மூன்று சந்தேகநபர் கள் நேற்று பிணை மனுக் கோரினர்.

எனினும் பிணைமனுக்களை நிராகரித்த நீதவான் விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்தார். இதன்படி பசில் ராஜபக்ஷ, நிஷால் ஜெயதிலக்க மற்றும் திவிநெகும திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஆர்.கே. கே.ஏ.ரணவக ஆகியோரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

# திருமணமாகாத இராணுவத்தினரின் பெற்றோருக்கு காப்புறுதி

திருமணமாகாத இராணுவ வீரர்களின் பெற்றோருக்கு மருத்துவ காப்புறுதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வாவின் வழிகாட்டலில் இதுவரை இராணுவ வீரர்களின் மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு மட்டுமே வழங்கப்பட்ட மருத் துவ காப்புறுதியை திருமணமாகாத வீரரின் பெற்றோருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

### கடல்நீரை....

ஏனெனில் தொழிற்சாலைகளுக்கு அந்நீரை விற்பதால் அது நட்டத்தை ஏற்படுத்தாது. ஆனால் யாழ்ப்பாணத்தில் அவ்வாறான தொழிற்சாலைகள் இல்லை. இந்நீர் மக்களின் தேவைக்காகவே செய்யப்படுகின்றது.

எனவே இத்திட்டம் எவ்வளவு துாரம் புத்திசாலித்தனம் அற்ற ஒரு செயற்பாடு என்பதை இங்கு அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்றார். (இ)

### யாழ். மேல்...

1999 இலிருந்து 2000 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தில் இவர் கடமையாற்றியிருந்தார்.

அதன் பின்னர் 3 வருடங்கள் மன்னார் மாவட்ட நீதிபதியாகவும், பின்னர் 2008 ஆம் ஆண்டு வரையிலான யுத்த காலத்தில் வவுனியா மாவட்ட நீதிபதியாகவும், நீதிபதி இளஞ்செழியன் கடமையாற்றியிருந்தார்.

அதனையடுத்து 2008 ஆம் ஆண்டு அவர் திருகோணமலை மேல் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்பட்டார். திருகோணமலையில் 2008 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையில் கடமையாற்றிய அவர், பின்னர் கல்முனைக்கு மாவட்ட நீதிபதியாக இடம் மாற்றம் பெற்றிருந்தார்.

கல்முனை மாவட்ட நீதிபதியாக 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையில் கடமையாற்றிய பின்னர், 2012 ஆம் ஆண்டு அவர் மீண்டும் திருகோணமலை மேல் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்பட்டு அங்கு 2014 ஆம் ஆண்டு வரை மேல் நீதிமன்ற ஆணையாளராகக் கடமையாற்றினார்.

அதன் பின்னர் 2014 ஆம் ஆண்டு கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டதையடுத்து, அவர் தற்போது அங்கு கடமையாற்றி வருகின்றார். இப்போது பிரதம நீதியரசர் அவரை அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமித்திருக்கின்றார்.

மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

### யாழில்....

கொண்டு, கடல் நீரைக் குடிநீராக்கும் ஆலையை அமைப்பதற்கான இடமாக மருதங்கேணி தேர்வு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், மருதங்கேணிக் கடற்பரப்பில் இருந்து கடல் நீரைப் பெற்றுக் குடிநீராக்கும் திட்டத்தால் மீன்பிடித் தொழிலுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இதையடுத்தே இதுதொடர்பாக விசேட கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, சி.சிறீதரன், மாகாணசபை அமைச்சர்கள் பொ.ஐங்கரநேசன், பா.சத்தியலிங்கம், த.குருகுலராஜா மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்கள், மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், ஆசிய அபிவிருத்தி வங்கியின் உயர் அதிகாரிகள், தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையினர் உட்பட ஏராள மானோர் கலந்து கொண்டிருந்தார்கள்.

இதன்போது அமெரிக்காவில் இருந்து வரவழைக்கப்பட்டிருந்த, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்ட நிபுணர் நிக்கோலாய் கலந்து கொண்டு திட்டம் தொடர்பாக விளக்கம் அளித்ததோடு கேள்விகளுக்குப் பதில்களையும் வழங்கியிருந்தார்.

# விபத்தில் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, ஏ-9 வீதி கரடிப்போக்குச் சந்திக்கு அருகில் நேற்று மாலை 4.40 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கிளி.யூனியன் குளத்தைச் சேர்ந்த சங்கரன் (வயது-30) என்பவரே இவ்விபத்தில் படுகாயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

ஏ-9 வீதியால் கிளிநொச்சி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றபோது நாய் குறுக்கே பாய்ந்தமையால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

### 14 கட்சிகளுடன்...

தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எந்தவித பிளவும் இல்லை எனத் தெரிவித்த அவர், எதிர்வரும் தேர்தலில் ஒரே சின்னத்தில் ஒரே கட்சியிலேயே போட்டியிடுவோம் என்றும் குறிப்பிட்டார்.

அதன்படி ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட 14 கட்சிகள் ஒன்றிணைந்தே எதிர்வரும் தேர்தலில் களமிறங்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### தேர்தலுக்கு...

பூர்வமாக அறியத் தரவில்லை. எனினும் எவ்வேளையிலும் பொதுத் தேர்தலொன்றை நடத்துவதற்கு தாம் தயாராக இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் காலை 7.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு மாலை 4 மணிக்கு நிறைவடைந்து விடும் என்பதனை மாத்திரமே என்னால் தற்போதைக்கு கூற முடியும். பொதுத்தேர்தல் இடம்பெறும் தினம் குறித்து பதில் தன்னிடம் பதில் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

சுயாதீன ஆணைக்குழு நிறுவுவதுடன் தங்கள் பதவிக்கு என்ன நடக்கும் என்பது தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போது,

ஆணைக்குழு நிறுவும் வரையில் சட்டமூலத்திற்கமைய கடமையில் உள்ள ஒருவருக்கு அப்பதவியில் வேலை செய்ய முடியும் என அவர் கூறியுள்ளார்.

மேலும் இலங்கையில் ஊடக சுதந்திரம் பாரிய அளவில் அபிவிருத்தியடைந்துள்ளதனால் மக்களுக்கு தகவல் வழங்குவதும் இலகுவான ஒரு விடயமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்கள் தொடர்பில் தற்போது இளைஞர்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது,

இதற்கென ஆரம்பிக்கப்பட்ட முகநூல் கணக்கு உட்பட்ட செயற்பாடுகளின் ஊடாக நாம் தொடர்ந்தும் பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் பணிகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் நலன் கருதி இனிவரும் தேர்தல்களை சனிக்கிழமை தினங்களில் நடத்துவதற்கே தீர்மானித்துள்ளோம். இதேவேளை, நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய தேவையில்லை. எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரைக்கும் அதன் காலத்தை நீடிக்க முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### யாழ். குடியியல்...

மாவட்ட நீதிமன்றத்தில் தனது முதலாவது நியமனத்தைப் பெற்று புத்தளம், சிலாபம், மாரவில, வென்னப்புவ, பொலன்னறுவை, வவுனியாவில் மாவட்ட நீதிபதியாகவும், நீதவானாகவும் கடமையாற்றியுள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு மேல் நீதிமன்ற நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்றார். அதன் பின்னர், மட்டக்களப்பு, கல்முனை, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் மேல் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றியவராவார். இந்தப் பிரதேசங்களில் நிலுவையில் இருந்த ஏராளமான வழக்குகளை இவர் தனது சேவைக் காலத்தில் நிறைவு செய்திருக்கின்றார். பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கனகா சிவபாதசுந்தரம், பருத்தித்துறை மெதடிஸ்ட் பெண்கள் கல்லூரியின் பழைய மாணவி என்பது குறிப்பிடத்தக்கது.

### காணாமற்போனோர்...

குடும்பத்திற்கு உதவவும் முன்வந்துள்ளார். இது எமது நாட்டு தலைவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாகும்.

அதேநேரம், வித்தியா படுகொலை தொடர்பான விசாரணையை சிறப்பு நீதிமன்றம் மூலம் முன்னெடுக்கவும் அவர் நடவடிக்கை எடுத்துள்ளமை வரவேற்கத்தக்கதுடன், இம் மாணவியின் படுகொலை தொடர்பில் நியாயமான நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன், காணாமற் போன எமது உறவுகளை கண்டறிவதற்கும், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பிலும் ஜனாதிபதி இவ்வாறு விஷேட ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

எமது மக்களின் உணர்வுகளுடன் தொடர்புடைய இவ் விடயங்கள் எமது மக்களை அயராது வதைத்துக் கொண்டே இருந்து வருகின்றன. அதிலிருந்து எமது மக்கள் விடுபட ஜனாதிபதி விசேட ஏற்பாடுகளை முன்னெடுத்தால் அது எமது மக்களுக்கு பாரிய நிம்மதியை அளிக்கும் என டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 மே 28ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.